பக்கம் 28

# சுடர் ஒளி

வாராந்த சஞ்சிகை

ரூ.30

மே.1 - மே.7
2013



## முகமாலை: கொலைகார வயல்

## சீன நீர்மூழ்கிகள் மர்மம் என்ன?

# தள்ளாடியைத் தாக்க புலிகள் தயார்?



# போராளி எழுத்தாளர் சினுவா



நன்றி பி.பி.சி கொம் / பிராண்ட் மற்றும் ஆட்ஸ்கோப்.

**1990 இல் ஏற்பட்ட கார் விபத்தொன்றில் சிக்கியவ சினுவா நிரந்தரமாகவே சக்கர நாற்காலியில் முடங்கி இருக்க வேண்டியதாயிற்று. சிகிச்சை பெறுவதற்காக அமெரிக்காவுக்கு சென்றவர் அங்கேயே நிரந்தரமாகத் தங்கி விட்டார். இவரது முதல் நாவலான 'திங்ஸ்போல் எபாட்' 1958 இல் பிரசுரிக்கப்பட்டது.**



சமீபத்தில் காலமான நைஜீரியாவில் புகழ் பெற்ற நாவலாசிரியரான சினுவா ஆச்செபின் மறைவு ஆபிரிக்காவின் நவீன இலக்கியத்திற்கு ஏற்பட்ட பேரிழப்பு என்கிறார் பி.பி.சியின் ஆபிரிக்க இலக்கிய முகவர்.

அவர் மேலும், கூறுகையில் "இலக்கிய ஆர்வமுள்ள எல்லா ஆபிரிக்க பிள்ளைகளும் அவரது நாவலான திங்ஸ் போல் எபார்ட்டை முதல் நூலாக ஏற்றுக் கொண்டுள்ளார்கள்" என்கிறார்.

82 வயதில் காலமான சினுவா ஆபிரிக்காவில் நவீன இலக்கியத்தின் தந்தை என வர்ணிக்கப்படுபவர். இவரது இந்த நாவல் 10 மில்லியன் பிரதிகள் வரை விற்பனை செய்யப்பட்டுள்ளன. 1967 இல் நைஜீரியாவின் தென் பகுதி பிரிவினையை நாடியது. 3வருடங்களாக நடந்த உள்நாட்டுப் போரில் பல்லாயிரக் கணக்கானோர் கொல்லப்பட்டனர். இந்த போர் பட்டினியையும் இடம்பெயர்வையும் நாட்டில் தோற்றுவித்தது. இக்காலப்பகுதியில் இவரிடமிருந்து சில கவிதைகள் மட்டுமே வந்தன. இவரும் இவரது இளம் குடும்பமும் பெரிதும் பாதிக்கப்பட்டனர். பயோவிறான் போர் என அழைக்கப்பட்ட இந்த போரின் பின் 40 வருடங்களின் பின்பே - அந்தக்கால பின்னணியை வைத்து "30 வருடங்களின் பின் ஒரு நாடு" என்ற அவரது நாவல் வெளிவந்தது. அவரது நாவல்கள் போரினால் ஏற்படும் துன்பங்கள் மற்றும் பிரிட்டனிடமிருந்து சுதந்திரம் பெற்ற பின் நைஜீரியாவை ஆண்ட ஆட்சியாளர்களின் மலிந்து கொட்டும் ஊழல், ஆட்சித்திறனின்மை பற்றி பேசுகின்றன. அவர் சார்ந்த 'இக்போ' இனத்தின் தனிப்பண்புகள் அவற்றின் அத்திவாரமாக திகழ்கின்றன. சொந்த கலாசாரமும் பிரிட்டனினால் விதைக்கப்பட்ட ஐரோப்பிய கலாசாரமும் நைஜீரியாவில் எப்படி ஒன்றுடன் ஒன்று சேர்ந்தும் விலகியும் செல்கின்றன என்பதையும் கலாபூர்வமாக அவரது நாவல்கள் சொல்கின்றன. 20 வரையிலான நாவல்களை எழுதியுள்ளார்.

இவர் பற்றிய குறிப்புகள் [illegible]னில் இப்போது வெளியிடப்பட்டுள்ளன. அமெரிக்காவிலும் வெளியிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. 'பயோவிறாவின்' தூதுவர் என அழைக்கப்படும் இவருக்கு 2007 ஆண்டிற்கான 'மான்புக்கர்' ஆவது விருது வழங்கப்பட்ட போது நோபல் பரிசு பெற்றவரும் தென்னாபிரிக்காவில் நெல்சன் மண்டேலாவுடன் இணைந்து பணியாற்றியவருமான திருமதி நடின் கோடிமர் அந்தப் பரிசுக்கான தெரிவுக்குழுவில் அங்கம் வகித்தார். கோடிமர் சினுவா பற்றி கூறும் போது எங்களுக்கெல்லாம் தலைமை வகிக்கக்கூடியவர்' என குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும், கூறுகையில்' விவேகத்துடன் கூடிய துணிச்சலும் மற்றவர்களுக்கு ஊக்கத்தையும் அளிக்கவல்லவர் என்கிறார். 1990 இல் ஏற்பட்ட கார் விபத்தொன்றில் சிக்கியவர் சினுவா நிரந்தரமாகவே சக்கர நாற்காலியில் முடங்கி இருக்க வேண்டியதாயிற்று. சிகிச்சை பெறுவதற்காக அமெரிக்காவுக்கு சென்றவர் அங்கேயே நிரந்தரமாகத் தங்கிவிட்டார்.

இவரது முதல் நாவலான 'திங்ஸ்போல் எபார்ட்' 1958 இல் பிரசுரிக்கப்பட்டது. இக்போ இனத்தின் போராளியான ஒக்கன்கோ என்பவரின் வாழ்வியல் பிரிட்டனால் எப்படி சிதைக்கப்பட்டது என்பதை இந்நாவல் காலாபூர்வமாக சொல்கிறது. இந்த நாவலின் கரு காலனித்துவ காலத்தை அடிப்படையாகக் கொண்டது. 50 மொழிகளில் அது மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது. வெள்ளையர்கள் 19 ஆம் நூற்றாண்டில் இக்போ கிராமத்தில் இறங்கியபோது நடைபெற்றவைகளை இந்த நாவல் விவரிக்கிறது. டபிள்யூ.பீ.யேட்ஸின் கவிதையொன்றின் வரிகளான 'திங்ஸ் போல்' எபார்ட்' சென்ற் கனற்கோல்ட்' என்ற வரிகளின் தாக்கம் இந்த நாவலுக்கான தலைப்பை தேர்ந்தெடுக்க வைத்தது, என்கிறார் சினுவா.

அமெரிக்காவின் அம்கேஸ்ட் பல்கலைக்கழக கல்லூரியில் சினுவா 1975 இல் ஆற்றிய உரை உலகப் புகழ் பெற்றது. கொன்ராட் என்ற புகழ் பெற்ற ஐரோப்பிய எழுத்தாளரை சினுவா கடுமையாக விமர்சிக்கிறார். அவரது நாவலான 'காற் ஒவ் டாக்னஸ்' ஒரு கேடுகெட்ட துவேசியின் நாவல் என்கிறார் சினுவா. நாவலில் கொன்ராட் "ஆபிரிக்காவின் மனிதத்தை புதைத்து, அவர்களின் மொழியையும் கலாசாரத்தையும் மறுதலித்து, அவர்களை இருண்மைக்கும் பயங்கரம் மிக்க காட்டுக்கும் ஒப்பிட்டுள்ளார்." மேலும் கொன்ராட் ஆபிரிக்கர்களின் மனிதத்தை மறுதலித்து அவர்களின் மொழியையும் கூட நிராகரிக்கிறார் என்கிறார் சினுவா.

காலனித்துவத்துக்கு பிற்பட்ட காலத்தில் ஆபிரிக்கா பல எழுத்தாளர்களின் கண்களில் இயல்பாகவே முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளது. காலனித்துவத்தால் ஏற்பட்ட கூடிய தாக்கம் மற்றும் இயற்கையின் தாக்கங்கள், இறுக்கமான கலாசார விழுமியங்கள் பலவகையான எழுத்துருவாக்கங்கள் உருவாக மூலகாரணமாக இருக்கின்றன. காலனித்துவக் காலத்துக்கு பிற்பட்ட காலத்தைப் பற்றிய ஆய்வுகளை ஆராயும் கல்வியாளர்கள் ஆபிரிக்காவில் தோன்றியுள்ளனர். பலர் சினுவா, நியூகிவா தியாங்கோ போன்றவர்கள் பற்றியும் ஆராய்கிறார்கள். இவ்வாராய்ச்சிகள் ஐரோப்பிய காலனித்துவ சரித்திர பின்னணியைக் கொண்டவை. இந்த கருத்தாக்கம் அசாதாரண தோற்றத்தாலும் விலகிச் செல்லும் வகையாலும் உருவாகிறது.

காலனித்துவம் ஆட்கொண்ட காலத்தில் ஏற்பட்டவற்றை அதன் தொடக்கத்திலிருந்து, முடிவு வரை இவ்வாய்வுகள் விவரிக்கின்றன. சினுவாவின் நாவல்கள் பிரிட்டிஷ் காலனித்துவத்துக்கு பிற்பட்ட கால மனித நடத்தையைப் பிரதிபலிக்கின்றன. பயங்கர அழிவுகளிலிருந்து மீண்ட ஒரு சமூகத்தை அவை வர்ணிக்கின்றன. [illegible]னித்துவம் என்பது புதிய கலாசாரத்து மக்களை தழுவிச் செல்ல வைப்பதுடன் மட்டும் நின்றுவிடுவதில்லை. தமது கலாசாரம் உயர்வானது என எண்ணும் ஆட்சியாளர்கள், தாழ்வுபடுத்தியும் அழித்தும் தமது கலாசாரத்தை இழிவுபடுத்தும் போது தாங்கி நிற்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை அது. இவை மறிக்கப்பட்ட அடையாளங்கள், சுதேசிகளிடம் தாழ்வு மனப்பான்மையைத் தோற்றுவித்து, காலனித்துவக்காரர்கள் மேல் வெறுப்பை ஏற்படுத்தும். இங்குதான் காலனித்துவத்துக்கு பிற்பட்ட காலம் என்ற சொல் உருவாகிறது. இரண்டு கலாசாரங்கள் ஒன்றுடன் ஒன்று மோதும் போது, அதில் ஒன்று தன்னை மேலானது எனக் கொள்ளும் போது ஏற்படும் விபரீதங்கள் கணக்கற்றவை. காலனித்துவம் எப்படியும் ஒருவித அடக்குமுறையையே ஏற்படுத்தும். வெளியில் பெரிதும் தெரியாத வகையில் மறைமுகமான கலாசார விழுமியங்களை, சுதேசிகள் மேல் காலனித்துவக்காரர்கள் ஏவுவார்கள். இதன் தாக்கங்கள் காலனித்துவக் காலங்களுக்குப் பின்னும் சுதேசிகள் மேல் படிந்திருக்கும். இது அரசியல் கலாசார மாறுதல்களை சுதேசிகளிடம் பரவவிட்டிருக்கும். இந்த முக்கிய மாற்றம் எதேச்சையானதல்ல. இது சரித்திர ரீதியானதும் மாற்றவே முடியாததுமாகவும் இருக்கும். சென்று போய்விட்ட காலனித்துவம், நினைவில் இருக்கக் கூடியதாகவும் மீண்டும் பழைய தூய்மையான சுதேச கலாசாரத்தை அடைய என்றுமே முடியாத வகையிலும், செய்திருக்கும்.

காலனித்துவத்துக்கு பிற்பட்ட காலம் என்பது கலப்பினம் போல் ஆகிவிட்ட சுதேசிகளின் இப்போதைய கலாசாரத்தையும் அடையாளங்களையும் பிரதிபலிக்கின்றது. 1975 சினுவா அமெரிக்காவில் ஆற்றிய உரையில் இக்கருத்துக்கள் இருந்தன. மேலும், இவர் பற்றி பி.பி.சி ஆங்கில இலக்கிய நிகழ்ச்சியான 'ஸ்ராண்டிவ்' றொபின் கோடி மரும் வேறு இரண்டு ஆபிரிக்க எழுத்தாளர்கள் பங்குபற்றிய ஒரு கலந்துரையாடல் 2013 மார்ச் 27 இல் ஒலிபரப்பப்பட்டது. சினுவாவின் 'பயோவிற்றாவின்' போர் பற்றிய நாவலான 30 வருடங்களின் பின் ஒரு நாடு' பின்வரும் கவிதை வரிகளுடன் நிறைவுக்கு வருகின்றது.

**'போரின் பின் வாழ்வு**
**மீண்டும் தொடங்கும்**
**தான்**
**சகஜமாகிவிட்டது**
**போன்ற ஒரு ஜாடை**
**புடன்**
**ஒருசெத்து மடிந்த**
**கிளையில்**
**திராட்சை கொடி ஒன்று**
**தழுவுவது போல் வாழ்வு**
**கொடியின் உருக்**
**குலைந்தவேர்கள்**
**குப்பை மேட்டிலும்**
**ஒவ்வொரு உடைந்து**
**சிதறிய**
**கண்ணாடித் துண்டுக**
**ளுக்குள்ளும்**
**தம்மைப் புதைத்தபடி'**

சந்திரசேகர ஆசாத்



# புத்தரின் வர்த்தகம்



1915 ஆம் ஆண்டு ஒரு சிங்களவரின் மரணஊர்வலம் கண்டியில் பிரதான வீதியால் சென்று கொண்டிருந்தது. வழமையாக எந்த மதத்தவரது பிரேத ஊர்வலம் போனாலும் மசூதிகள், இந்துக்கோவில்கள், விகாரைகள் முன்னால் செல்லும்போது மேளம் அடிப்பது நிறுத்தப்பட்டு, அமைதி பேணி மரியாதை செய்வதுண்டு. ஆனால், அன்று அந்த மரபு மீறப்பட்டது. கண்டி பள்ளி வாசலுக்கு முன்பாகவும் மேள இசை தொடர்ந்தது. தொழுகைக்கென வந்திருந்த முஸ்லிம்கள் மேள ஒலியை நிறுத்தும்படி கேட்டுக் கொண்டனர். ஆனால், நிறுத்தப்படவில்லை. அப்போது எங்கிருந்தோ எறியப்பட்ட ஒரு கல்லு ஊர்வலத்தினர் மீது விழுந்தது. அவ்வளவுதான் அங்கு நின்ற முஸ்லிம் மக்கள் படுமோசமாகத் தாக்கப்பட்டனர். வர்த்தக நிலையங்கள் இடித்து நொருக்கப்பட்டு சூறையாடப்பட்டன. முஸ்லிம் குடியிருப்புக்கள் தாக்கி அழிக்கப்பட்டன.

கண்டியில் மட்டுமல்லாது சமகாலத்தில் கொழும்பு, பேருவளை, காலி ஆகிய பெரு நகரங்களிலும் முஸ்லிம்கள் மீதான தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இதில் முஸ்லிம்களின் பிரதான வர்த்தக மையங்களே இலக்குவைக்கப்பட்டன. சிங்கள இனவெறிக் கொலைத்தாண்டவம் எங்கும் கோலோச்சியது.

அன்றைய ஆங்கிலேய அரசு நிலைமையை கட்டுப்படுத்த முடியாத நிலையில் 'மார்வில்லோ' என்ற கடும் சட்டத்தை நடைமுறைப்படுத்திய பின்பே கலவரம் அடங்கியது. அந்த இனக் கொலை வெறியாட்டத்துக்குத் தலைமைதாங்கிய எவ். ஆர். செனநாயக்கா, பரன் ஜெயதிலக, டி.எஸ். செனநாயக்கா, ஏ.ஈ குணசிங்க உட்பட பல சிங்கள அரசியல் தலைவர்களைக் கைது செய்து பிரிட்டிஷ் அரசு சிறையில் அடைத்தது.

ஆனால், அன்றைய தமிழ் அரசியல் தலைவர்களில் ஒருவரான சேர். பொன். இராமநாதன் பிரிட்டன் சென்று மகாராணியுடன் வாதாடி சிங்களத் தலைவர்களைச் சிறை மீட்டார். சேர். பொன். இராமநாதன் இலங்கை திரும்பிய போது அந்தச் சிங்களத் தலைவர்கள் அவரைத் தேரில் ஏற்றி கொழும்பில் ஊர்வலமாக அழைத்து வந்தனர்.

அதே சிங்களத் தலைவர்கள் தான் சட்டசபையின் மேல் மாகாண பிரதிநிதித்துவத்தை தமிழருக்கு தருவதாக வாக்களித்து விட்டு சேர். பொன். இராமநாதனை ஏமாற்றினர். இதனால் ஒட்டு மொத்த தமிழ் மக்களும் சட்டசபைத் தேர்தலை புறக்கணித்தனர் என்பது வரலாறு.

1815ஆம் ஆண்டு கண்டி ராஜ்யத்தின் வீழ்ச்சியின் பின் மலையக சிங்கள நிலவுடமையாளரின் நிலங்கள் ஆங்கிலேயர்களால் கைப்பற்றப்பட்டு தேயிலைத் தோட்டங்கள் அமைக்கப்பட்டன. அதற்கெதிராக விவசாயிகள் நடத்திய கண்டிக் கலகம் போன்ற போராட்டங்கள் பெரும் தோல்வியிலேயே முடிவடைந்தன.

எனவே, சிங்கள நிலவுடமையாளர்கள் தங்கள் முதலீடுகளையும், தொழில்களையும் பெருநகரங்களை நோக்கி நகர்த்த ஆரம்பித்தனர். ஆனால், அவர்களால் இலகுவில் வர்த்தக உலகுக்குள் நுழைய முடியவில்லை. ஏனெனில் பெருநகர வர்த்தகங்கள், ஏற்றுமதி இறக்குமதி உட்பட அனைத்துமே முஸ்லிம்கள் கையிலேயே இருந்தன. பாரம்பரிய வர்த்தக அனுபவம் கொண்ட முஸ்லிம்களுடன் அவர்களால் போட்டிபோட முடியவில்லை. எனவே, வன்முறை மூலம் மட்டுமே வர்த்தக ஆதிக்கத்தை முறியடித்து தாம் அதைக் கைப்பற்ற முடியும் என்ற வகையில் சிங்கள முஸ்லிம் கலவரம் அரங்கேற்றப்பட்டது. சிங்களத் தலைவர்கள் கைது செய்யப்பட்டு, பின் விடுவிக்கப்பட்ட போதிலும் பல முஸ்லிம் பெரு வர்த்தகர்கள் தங்கள் நிறுவனங்களை மூடிவிட்டு இந்தியாவுக்குப் போய் விட்டனர். பலர் சிங்களவர்களுக்கே தங்கள் நிறுவனங்களை விற்று விட்டனர்.

இப்படியான ஒரு இனக்கலவரம் மூலமே கொழும்பில் வலிமைமிக்க சிங்கள வர்த்தக மேலாதிக்கச் சூழல் ஏற்படுத்தப்பட்டது.

வட பகுதியின் புகையிலை, வெங்காயம், மிளகாய், கருவாடு என்பனவற்றின் உற்பத்தி காரணமாக தென்னிலங்கை நோக்கிய ஒரு வர்த்தக வலையமைப்பு விரிவடையத் தொடங்கியது. அதன் வளர்ச்சி காலப்போக்கில் தென்னிலங்கையில் பெருநகரங்கள், சிறுநகரங்கள், கிராமமையங்கள் என சகல இடங்களிலும் மலையக நகரங்களிலும் பலசரக்கு வியாபாரம் சில்லறை வர்த்தகம் உணவுச்சாலைகள் என வட பகுதித் தமிழர்களின் வர்த்தகம் நிலை பெற்றிருந்தது. ஆனால், சுதந்திரத்தின் பின்பு உருவான சிங்கள சிறு வர்த்தகம் தமிழர்களுடன் போட்டி போட முடியவில்லை.

1958, 1977, 1983 ஆகிய கால கட்டங்களில் இடம்பெற்ற தமிழின அழிப்புக் கலவரங்களில் தமிழர்களின் வர்த்தக மையங்கள் இலக்கு வைக்கப்பட்டன. தொடர்ந்து அங்கு தமிழர்கள் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத நிலைமைகள் உருவாக்கப்பட்டன.

சேர். பொன். இராமநாதனால் காப்பாற்றப்பட்டவர்களிலே ஒருவரான டீ.எஸ். செனநாயக்கா தான் இலங்கையின் முதல் பிரதமர் ஆகியதுமே மலையக மக்களின் வாக்குரிமையைப் பறித்தும் தமிழ் பகுதிகளில் சிங்கள குடியேற்றங்களை நிறுவியும் தனது நன்றிக்கடனைச் செலுத்தியவர்.

கடந்த காலங்களில் தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் மீதான இன அழிப்பின் மூலமும் இலங்கையின் பிரதான வர்த்தக துறைகளையும் கைப்பற்றிக் கொண்ட சிங்கள வர்த்தக சக்திகள் தற்சமயம் முஸ்லிம்களிடம் எஞ்சியுள்ள சில வர்த்தக துறைகளையும் கைப்பற்ற ஒரு இனவெறி மேடை அமைத்து வருகின்றன. குறிப்பாக உணவு வகைகள் வர்த்தகம், ஆடைகள் துணிவகைகள் வர்த்தகம் அலங்காரப் பொருள்கள் வர்த்தகம் நகை வியாபாரம் என்பன அவற்றுள் முக்கியமாகும்.

இந்த இலக்குகளை நிறைவேற்றுவதில் பிரதான நாயகனாக 'பொதுபலசேனா' இன்று தலைமைதாங்கி நிற்கிறது. அதற்கு எதிராக கொதிக்கும் முஸ்லிம் மக்களின் உணர்வுகளைச் சாந்தப்படுத்துவதில் முஸ்லிம் தலைமைகள் முக்கிய பாத்திரம் வகித்து வருகின்றன.

ஹலால் முதல் 'பஷன் பக்' நிறுவனம் மீதான தாக்குதல் வரை பொதுபலசேனாவின் அட்டகாசம் தொடர்கிறது.

தெளிவாகவே இலங்கையின் முழு வர்த்தக நடவடிக்கைகளையும் பௌத்த சிங்கள வர்த்தக முதலைகளின் மேலாதிக்கத்தின் கீழ் கொண்டுவரும் நோக்குடன் இனவெறி தூண்டப்பட்டு இனமுரண்பாடுகளும் இனமோதல்களும் திட்டமிட்டு உருவாக்கப்படுகின்றன. ஒரு சில சிங்கள பௌத்த வர்த்தக முதலைகளின் நலன்களுக்காக முஸ்லிம் மக்கள் உயிரிழப்பு, சொத்திழப்பு, தொழிலிழப்பு போன்ற இன அழிப்பு நடவடிக்கைகளுக்கு ஆளாகவேண்டுமா?

அதேவேளையில் வடக்கில் வேறு வகையில் வர்த்தகம் சிங்கள மயப்பட்டு வருவதையும் அவதானிக்க முடியும்.

நவீன வாகனங்கள் முதல் நடந்து செல்லல் வரையான நடமாடும் வர்த்தகம் வரை சிங்களவர்களால் நடத்தப்படுகின்றன. தென்னிலங்கையில் இருந்து வரும் 'ரை' கட்டிய அலங்காரமான சிங்கள இளைஞர்களும், நவநாகரிக சிங்கள நங்கையரும் வடக்கின் பெருநகரங்களில் இருந்து குக்கிராமங்கள் வரை வீடு வீடாகச் சென்று வியாபாரம் செய்து வருகின்றனர். நகரங்களின் நடைபாதைகளில் மட்டுமன்றி கிராமப்புறங்களின் சந்தைகள், சந்திகள், ஆலய வாசல்கள் எனப் பல இடங்களையும் இவர்கள் ஆக்கிரமித்துள்ளனர்.

இதனால் தமிழ் வர்த்தகர்கள் பெரும் நெருக்கடிகளை எதிர் கொண்டுள்ளனர். கட்டிடங்களுக்கான முற்பணம், கடை வாடகை, வரிகள், ஊழியர்களின் கொடுப்பனவுகள் போன்ற பல செலவீனங்கள் மத்தியில் தொழில் செய்யும் இவர்கள் நடமாடும் வியாபாரங்களாலும் தமது தொழிலில் பெரும் வீழ்ச்சியை சந்திக்க வேண்டியுள்ளது. பலர் வங்கிக் கடன்களைக் கூடக் கட்ட முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.




புத்தரின் பேரில் வர்த்தகப் போர் முனை திறக்கப்பட்டுள்ளது. இதனை எதிர்கொள்ள தமிழர்களும் முஸ்லிம்களும் கைகோர்க்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

# வன்னியூர் செந்தூரனின் 'நிலவைத் தேடும் வானம்'

## கவிதைத் தொகுதி குறித்த ஓர் பார்வை

● பொலிகையூர் சு.க.சிந்துதாசன்




கவிஞன் என்பவன் பிறப்பதில்லை. அவன் உருவாகிறான். ஒரு தனிமனிதனின் அகவய நிலையானது புறச்சூழல் காரணிகளால் தோற்றுவிக்கப்படுகிறது. வாழ்வியல் சார்ந்து பெறும் அனுபவங்களினால் ஒரு மனிதனது பட்டறிவின் பெறுமானம் அதிகரிக்கின்றது. அந்தப் பெறுமான அதிகரிப்பின் அறிவு சார் வெளிப்பாடாய் 'படைப்பாக்கம்' இடம் பெறுகிறது. எது எப்படியிருப்பினும் வாழ்நிலையானது ஒருவனைச் செதுக்கும். இவ்வாறு தான் கவிஞனும் செதுக்கப்படுகிறான்.

ஒரு கவிஞன் தன் அனுபவம் குறித்த மூலப்புள்ளியிலிருந்து பயணத்தை ஆரம்பிக்கும் போது பல்வேறுபட்ட காரணகாரியங்களுக்குள் மூழ்கியெழும் வாய்ப்புக் கிட்டும். அவற்றின் பிரதிபலிப்பாய் கவிதைகள் உருவாகும். அக்கவிதைகள் குறித்த கவிஞன் சார்ந்த விம்பங்களாய் இருக்கும்.

தன்னுணர்வு மேலீடு என்பது தவிர்க்க முடியாதது. எதையும் கொட்டித் தீர்த்து சுமை குறைக்க எத்தனிக்கும் மனித மனங்களே பல. இது கவிஞர்களுக்கும் விதிவிலக்கல்ல. தான், தனது தேசம், பட்டறிவு, நிகழ்காலம், தன் எதிர்பார்ப்புக்கள் என விரியும் ஒரு கவிஞனின் வழிப்புள்ளிகள் எதையும் துல்லியப்படுத்த முடியாத நிலையில் மற்றோர் வியக்கையில் அவற்றை நிகழ்த்தும் மேலதிக சக்தி கவிஞர் களுக்குண்டு.

பல்வேறுபட்ட கவிதைகளிலே தமக்குப் பிடித்த வகையைத் தெரிவு செய்து ஏதோவோர் பாணியிலே தமது கவித்துவத்தை கவிஞர்கள் வளர்க்க முயல்வார்கள். ஆனால், தனது அனுபவங்களையும் எண்ணங்களையும் அப்படியே கொட்டித் தீர்க்க கவிதையை ஒரு ஆயுதமாய்ப் புனைய எத்தனிக்கும் பலருள் வன்னியூர் செந்தூரனும் ஒருவர். இவர் கிழக்குப் பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவன். பள்ளிப்பருவத்திலிருந்து கவிதையெழுதி வருகிறார். வயதில் இளையவர் எனினும் அவரது வாழ்வியல் அனுபவங்கள் மிகமிக மூப்பெய்தியவை. வன்னியில் இடம்பெற்ற இறுதிப் போரின் வலிகளைச் சுமந்தவர். அதன் விளைவுகளை அறிந்தவர். அந்த வகையில் தான்பெற்ற அனுபவங்களை காதல், வீரம், இழப்பு, பிரிவு என்ற பல்வேறு பரிமாணங்களில் கவிதை களாக்கியிருக்கிறார். இவரால் அவ்வப்போது எழுதப்பட்ட கவிதைகளை ஒன்றிணைத்து 'நிலவைத் தேடும் வானம்' என்ற தொகுப்பாகத் தந்திருக்கிறார். இது இவரது கன்னித் தொகுப்பாக இருந்தாலும் நேரடியாகவே விடயங்களைச் சொல்லி விடுகின்ற தன்மை காணப்பட்டாலும் சொற்கள் இலகுவானதாகக் காணப்பட்டாலும் நாளைய ஒரு நல்ல கவிஞனை இத்தொகுதி இனங்காட்டியிருக்கிறது. இலகுவில் எந்த வாசகனும் விளங்கிக் கொள்ளக் கூடிய விதத்தில் கவிதைகள் அமைந்திருக்கின்றன.

'செந்தணல்' வெளியீடாய் இந்நூல் வெளி வந்திருக்கின்றது.

'விலைகள் கேட்காதே
கலையை வளரவிடு
தலைகள் கொடுத்தேனும்
தமிழை வாழவை'

என்று தன்னுரையிலே கட்டியங் கூறும் செந்தூரனின் கவிதைத் தொகுதி 56 கவிதைகளைக் கொண்டு 60 பக்கங்களில் வெளி வந்திருக்கின்றது.

மனதில் பட்டதை உள்ளதை உள்ளவாறே சொல்லோசைகளுடன் பல கவிதைகளில் முன்வைத்திருக்கிறார். குறியீடுகள் எதனையும் கையாளாமல் நேரடியாகவே கருப்பொருளைச் சுட்டும் இவரது கவிதைகள் தன்னுணர்வின் பால் ஈர்க்கப்பட்டு உருப்பெற்றிருக்கிறது.

போர் நடந்த ஒரு தேசத்தின் சாட்சியாய் ஒரு பேரவலத்தின் பதிவாய் இந்நூலின் முதலாவது கவிதை வெளிப்படுகிறது. 'அன்றொருநாள்' (பக்கம் - 10)

/...../பாட்டுவரி நானெழுத/வேட்டுவந்து நெஞ்சைத் துளைத்த தம்மா/ செங்குருதி சிதறி/ என் கவிதை நனைத்ததம்மா/...../ஆயிரக்கணக்கில்/ பிணக்குவியலை/ பிரபஞ்சம் கண்டதம்மா/ பேதலித்து நின்றதம்மா.

மாறுதல்களை வேண்டும் கவிதைகளும் இயற்கை மீதான ஈர்ப்பின் பிரதிபலிப்பாய் எழுந்த கவிதைகளும் 'ஹைகூ' பாணியில் அமைந்த பல குட்டிக்கவிதைகளும் உறவுப் பிணைப்பின் பாற்பட்ட கவிதைகளுமாகச் சேர்ந்து பல கவிதைகள் காணப்படுகிறது.

பிறப்பு எனும் இலக்கியத்தில் /நான் படித்த/ முதற்கவிதை. இக்கவிதைக்கு 'அம்மா' (பக்கம் - 14) என மகுடமிட்டிருக்கிறார். இதுபோலப் பல குட்டிக் கவிதைகள் இடம்பெற்றுள்ளன. (பனித்துளி பக்கம் - 15)

நேர்த்தி (பக்கம் - 21) என்ற கவிதையிலே வன்னியிலோர் பிள்ளையார் கோவிலில்/ தேங்காய் உடைத்தேன் / நேர்த்திக்காக /சிதறிய தேங்காய்/ சிரித்தபடி கேட்டது/ சில ஆண்டுகளுக்கு முன் / இவ்விடத்தில் சிதறிய/ தமிழ் உடல்களும்/ நேர்த்திக் காகவா? இவ்வாறு போரின் வலிகளை வித்தியாசமாக நோக்கியிருக்கிறார். இது போன்றதொரு வலி கூறும் கவிதை (பக்கம் - 25) 'உயிர் வலித்த கணம்' இடம்பெற்றுள்ளது.

திறவுங்கள் முட்கம்பிகளை/திரும்பவும் ஊர் பார்க்க/ பெத்தபுள்ள செத்துக் கிடக்கு/ கத்தியழ கண்ணீரில்லை/...../ நான் பொட்டு வைச்ச இடத் திலை/ தோட்டா பொட்டு வைச்சதடி/ வேதனையை எங்கு சொல்ல..?/..../

ஒட்டிசுட்டான், கற்சிலைமடுவைச் சொந்த இடமாகக் கொண்ட செந்தூரன் தன்மண்ணின் மாவீரன் பண்டாரவன்னியன் பற்றி தனது கவிதையிலே குறிப்பிட்டுள்ளதுடன் அக்கவிதைக்குரிய படமாக அவனது உருவச் சிலையின் படத்தையும் இணைத்திருக்கிறார். இது தவிர தன் ஊரில் அமைந்துள்ள பண்டாரவன்னியனின் நினைவுக் கல்வெட்டுப் படத்தினையும் (பக்கம் - 35)இணைத்துள்ளார்.

மாமன்னன் பண்டாரவன்னியன் (பக்கம் - 34) என்ற கவிதையிலே பின்வருமாறு வீரம் குறித்த நம்பிக் கையை வெளிப்படுத்துகிறார். /..../ பஞ்சத்தில் பட்டிழந்து/ பாடையிலே போனாலும்/ பிரபஞ்சத்தில் விட்டி ழந்து போகாது/ எம் வீரவரலாறு /...../

செந்தூரனை உழல வைக்கும் பிரிவின் வலிகள் பின்வரும் கவிதைகளில் புலப்படுகிறது. நீ எங்கே? (பக்கம் - 36)

எருக்கலங்காட்டில்/ பலாமரத்தடி யில்/ பூக்கள் தூவி/ கை கூப்புகிறேன்/ நீ புதைந்த இடம் சரியாக இனங்காண முடியாததால்....

மரணபூமி (பக்கம் - 39)

அடர்வனங்களும் அன்று/ அனல் வீசியதோ?/ மகிழ்கொடிகளும் அங்கே மடிந்தொழிந்ததோ?/...../ மரண பூமி மாத்தளனில்/ மண்ணோடு கலந்த/ மாசற்ற மனங்களை / நினைக்க எம் மனம் கொதிக்குதப்பா/ அதை மறக்க நினைக்க/ எம்முயிர் வலிக்குதப்பா.

நண்பனே... ( பக்கம் - 42)

காதலி குறித்த கடந்த காலங்களையும் அவள் பிரிவின் வலி சுமந்த வரிகளையும் கலந்து எழுதப் பெற்ற இறுதிக்கவிதை இவ்வாறு அமைகிறது.

என்னவள் எங்கே?/எனைத் தேடுகிறேன்/ எருவாகிப் புதைந்த உடல்களின் சுடுகாட்டிலே/.... / கட்டாயத்தின் பேரிலே/ நீ போர்க் கவசம் ஒன்று/ அன்று அணிந்தாயோடி/...../ உனக்காக நான் தினமேங்க/ எனக்காக நீ கண்ணீ ருதிர்த்த/ விஸ்வமடுவில் கடைசிச் சந்திப்பு/ விநோதமே மறக்க வில்லையடி.

இந்தக் கவிதையைப் படிக்கின்ற போது கவித்துவப் கனதி என்பவற்றுக்கப்பால் குறித்த நிகழ்வின் உணர்வு சார் வெளிப்பாடு உள்ளத்தை உறைய வைக்கிறது.

செந்தூரன் தன் ஆற்றலையும் அறிவையும் மென்மேலும் வளர்ப்பதனூடாகவே இத்துறையில் தொடர்ந்து பயணிப்பதற்குரிய வலுவைப்பெற முடியும். இன்னும் நல்ல கவிதைகளை தனது அனுபவத்திற்கு ஏற்ப தர முடியும்.


எனவே, செந்தூரன் என்கின்ற வானம் அந்த மதுர நிலாவை மட்டு மல்ல இன்னும் எத்தனையோ கோணங்களில் தன் தேடலை முடுக்கியபடி விரிந்து நிற்கிறது. கைகளுக்குள் பொத்திவிட முடியாதபடி இந்த வானம் நாளை பரந்து விரியும் என்ற நம்பிக்கையை இத்தொகுதிதருகிறது.

## 'சுடர் ஒளி'– வாசகர்களுக்கு...

எமது சகோதர நிறுவனமான உதயனின் அச்சிடல் தளம் மீது இனந்தெரியாதோர் மேற்கொண்ட தாக்குதல் காரணமாக பிரதான அச்சிடல் இயந்திரம் சேதமடைந்தமை நீங்கள் அறிந்ததே. எனவே, அச்சிடல் சிக்கல்கள் காரணமாக உங்கள் அபிமான வார சஞ்சிகையான 'சுடர் ஒளி'யின் ஏப்ரல் 17-23 இதழ் வெளிவரவில்லை. இதற்காக உங்களிடம் 'சுடர்ஒளி' தனது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கின்றது. அத்துடன் இந்த இதழில் கடந்த வார இதழுக்குரிய சில பக்கங்களும் இணைக்கப்பட்டிருப்பதால், அதனால் ஏற்படும் வாசிப்பு இடையூறைப் பொறுத்தருள்வீர்கள் என நம்புகிறோம். இனி வரும் வாரங்களில் புதிய பொலிவுடன் சமூக அரசியல் பிரச்சினைகளின் மறுபக்கங்களைத் தோலுரித்துக்காட்டும் துணிச்சலோடு 'சுடர்ஒளி' காலக்கிரமம் தவறாமல் வெளிவரும்.

# துணிவைத் தாக்கிய கோழைத்தனம்!

ஜஸ்ரின்



முப்பது வருடங்களாக நாட்டில் இடம்பெற்ற உள்நாட்டுப் போரின் மத்தியிலும் 25 வருடங்களுக்கும் மேலாகத் தனது பத்திரிகையைத் துணிவுடனும் உறுதியுடனும் வெளியீட்டுப் புழக்கத்தில் விட்டுவந்த உதயன் பத்திரிகை நிறுவனத்தின் கிளிநொச்சிப் பிராந்திய அலுவலகத்தின் மீது கடந்த 3ஆம் திகதி புதன்கிழமை அதிகாலைப் பொழுதில் நடத்தப்பட்ட தாக்குதல் கவலையளிக்கும் விடயமாக மட்டுமன்றி சர்வதேச அரசியல் ரீதியாக வடமாகாணத்தின் மீது அதன் பார்வைகளைச் செலுத்திக் கொண்டிருக்கும் இந்நேரத்தில் இத்தாக்குதல் இத்தன்மையாக கூறப்படும் ஜனநாயகச் சூழல் மற்றும் அதன் பாதுகாப்பு நிலைத்தன்மை குறித்த ஓர் இடர் வரவின் முன்னறிகுறியாக அமைந்து விட்டது.

இவ்வலுவலகத்தின் மீது முகத்தை மூடி மறைத்த குழுவினரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலானது பெரும்பாலும் அரசியல் ரீதியான குறிக்கோளைக் கொண்டதாகவே காணப்படுகிறது. ஏனெனில் யாழ்ப்பாணத்தில் இருந்து பிரசுரமாகும் உதயன் பத்திரிகையானது வடமாகாண மக்களின் மத்தியில் பெரிதும் செல்வாக்கினைப் பெற்ற பத்திரிகையாக விளங்குகின்றது.

இப்பத்திரிகையின் விநியோகத்தைத் தடுத்து நிறுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதல் முயற்சியில் இரண்டு உத்தியோகத்தர்கள் மோசமாகக் காயமுற்று கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டனர். அத்துடன் இத்தாக்குதலானது பெரும்பாலும் விரைவில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படும் வடமாகாணசபைத் தேர்தலுடன் தொடர்புடையதாக இருக்கக்கூடுமென்ற சந்தேகமும் காணப்படுகின்றது.

வடக்கைத் தவிர ஏனைய ஒன்பது மாகாணங்களிலும் மாகாணசபைகள் இயங்கி வருகின்றன. ஆனால், அவையும் 'வெள்ளை யானைகள்' போன்ற நிலையை அடைந்து விட்டவையாக இருக்கின்றன.

இந்தியத் தலையீட்டினால் கொண்டுவரப்பட்ட மாகாணசபைகளும் அதனுடன் அதிகாரப் பகிர்வும் நடைமுறைக்கு வராமையின் காரணமாக இன்று வடக்கில் மாகாணசபையைப் பொறுத்தமட்டில் ஓர் முரண்பாடான நிலைப்பாடே நிலவுகின்றது.

வடமாகாணத் தேர்தல் குறித்தும் அதன் பிரச்சினைகள் குறித்தும் மக்களின் பொதுக் கருத்தினை வெளிப்படுத்துவதில் இன்றியமையாத பாத்திரத்தை வகித்து வருகின்றது உதயன் பத்திரிகை. வடக்கில் வெளிவரும் பத்திரிகைகளில் ஒன்றான உதயனின் வெளிப்படையான பார்வையும் இன்றைய அதுதான்.

உதயனின் அரசியல் தொடர்பான கருத்துக்களையும், செயற்பாடுகளையும் நாம் சிறிதும் அறிந்திருக்கவில்லை. ஆனால், பொதுமக்களுக்கு மிகத் தெளிவாகவும் நேர்முகமாகவும் சிலந்தி வலை போன்று சிக்கலுக்குள்ளாகியுள்ள வடமாகாண அரசியல் குறித்து வெளிப்படுத்தும் உதயனின் பொதுக் கருத்தினைச் சிலர் விரும்பவில்லைப் போலும்.

இன்றைய உலகில் ஜனநாயகத்தின் அடிப்படையான பண்பே கருத்து மாறான கருத்துக்களைக் கொண்டிருக்கும் சிந்தனைகளை வெளிப்படுத்தும் உரிமை பெறுவதேயாகும்.

ஆளுந்தரப்பு அரசியல் கட்சியின் ஓர் பங்காளராகவும், அமைச்சராகவும் அத்துடன் ஈ.பி.டி.பியின் தலைவராகவும் விளங்கும் டக்ளஸ் தேவானந்தாவின் செயற்பாடுகளினால் வடமாகாண அரசியல் நிலைவரமும் சிக்கலுக்குள்ளாகியுள்ளது.

வரப்போகும் வடமாகாணசபைத் தேர்தலில், ஆளும் தரப்புச் சார்பில் போட்டியிடப் போவதாக டக்ளஸ் தேவானந்தா ஏற்கனவே பொது அறிவிப்புச் செய்து விட்டார். எப்படியிருந்தாலும் தேவானந்தாவுக்கு பொதுவாகவே மக்கள் மத்தியில் பெரிதும் சந்தேகத்திற்குரியதே. ஏனெனில் அடுத்தடுத்து ஒன்றன்பின் ஒன்றாக ஆட்சிக்கு வந்த கொழும்பு அரசாங்கங்களுடனும் இராணுவத்துடனும் யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்வதில் அவர் தனது ஒத்துழைப்பினை வழங்கியிருந்தார். அத்துடன் ஈ.பி.டி.பிக்கும் உதயன் பத்திரிகைக்கும் இடையில் பகைமை நிலவி வருவதாகவும் சொல்லப்படுகின்றது.

அத்துடன் இலங்கையில் ஓர் தமிழ்ப் பூதத்தை உருவாக்குவதற்கு இந்திய மத்திய அரசினைத் தூண்டும் விதத்தில் தமிழ்நாட்டில் பரவலாக இடம்பெறும் இலங்கைக்கு எதிரான கொந்தளிப்பான கிளர்ச்சிகளாலும் வடமாகாணசபைத் தேர்தல் சிக்கலுக்குள்ளாகி உள்ளது.

பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவும் நாட்டில் நிலவும் அமைதி நிலையுடன் வடமாகாணசபைத் தேர்தலை நடத்தப்படும்போது எதிர்நோக்கக்கூடிய பாதுகாப்பு அம்சங்கள் குறித்துக் கேள்வி எழுப்பியுள்ளமை வடமாகாணசபைத் தேர்தலை சிக்கலுக்குள்ளாக்கியுள்ளது.

பெருமளவு இராணுவமும் மற்றும் பொலிசாரும் இன்னமும் வடக்கில் பிரசன்னமாயிருக்கின்ற போதிலும் வடக்கில் உள்ள தமிழ் அரசியல் கட்சிகளின் மத்தியில் தனக்கேயுரிய வரையறைக்குள்ளான ஓர் அரசியல் வரம்பெல்லையைப் பேணி ஓர் காவலன் பணியினை உதயன் பத்திரிகை நிறைவேற்றி வருகின்றது.

இராணுவத்தினர் வரம்பு மீறிய வகைகளில் செயற்படுவதையும், அரசியலில் ஈடுபடுவதாகவும் எப்பொழுதும் ஓரே மாதிரியாகக் குற்றஞ்சாட்டப்பட்டு வருவதை ஆவேசத்துடன் அவ்வாறான குற்றச்சாட்டுக்களை மறுத்து பொலிஸாரே மக்களை விசாரணை செய்து வருகின்றனர் எனத் தனி அழுத்தம் கொடுத்து இராணுவத் தரப்புத் தெரிவித்து வருகின்றது.

ஒரு பத்திரிகையானது அதனுடைய 28 வருட கால வரலாற்றில் அது எதிர்கொண்ட படுமோசமான நிலைமைகளின் மத்தியிலும் நிமிர்ந்து நேராக நிற்கும் ஆற்றலைக் கொண்டிருப்பது பெருமைக்குரிய நம்பிக்கையை அளிக்கும் விடயமாக இருக்கின்றது.

1985இல் வெளியிடப்பட்டு வந்த ஏனைய இரண்டு பத்திரிகைகள் எல்.ரீ.ரீயினரால் அவர்களது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்ட போதிலும் சரி, உள்நாட்டுப் போரின் போது அதனை இராணுவத்தினராலும் மற்றும் ஏனையோர்களாலும் தாக்குதல்களுக்குள்ளாகிய வேளையிலும் சரி உதயன் தனது பத்திரிகை வெளியீட்டை நிறுத்தவேயில்லை.

1995 ஆம் ஆண்டில் இராணுவம் யாழ். குடாநாடு முழுவதையும் முற்றிலுமாகக் கைப்பற்றுவதற்கு பெருமெடுப்பில் இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்த வேளையில் வலிகாமம் பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் அனைவரும் தமது உயிர்களைப் பாதுகாக்கும் நோக்கில் யாழ். குடாநாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் அத்துடன் வன்னிக்கும் தப்பியோடினர்.

அவ்வேளையில் உதயன் பத்திரிகையின் யாழ். அலுவலக ஊழியர்களும் தமது உயிர்களைக் காப்பாற்றுவதற்காக அங்கிருந்து வெளியேறுகையில் அச்சிடும் இயந்திரம் ஒரு மின் பிறப்பாக்கி மற்றும் அச்சிடப்படும் தாள்கள் என்பவற்றைத் தம்முடன் ஓர் பாரவூர்தியில் ஏற்றி எடுத்துச் சென்று தென்மராட்சியில் ஓரிடத்தில் தற்காலிக அலுவலகத்தை நிறுவி அதிலிருந்து கொண்டு 1996 வரைக்கும் பத்திரிகை வெளியிடுவதைத் தொடர்ந்தும் மேற்கொண்டனர்.

யாழ். குடாநாட்டின் பெரும்பான்மையான பகுதிகளை இராணுவம் மீளக் கைப்பற்றிய பின்னர் மீண்டும் பத்திரிகை அலுவலகம் யாழ்ப்பாணத்திற்குத் திரும்பி வந்தது.

அத்துடன் அவசரகாலச் சட்ட விதிமுறைகளின் கீழ் உதயனுக்கான தொலைபேசி இணைப்புகளும் வெட்டப்பட்டு உதயன் அலுவலகமும் 1996இல் மூடப்பட்டது. ஆயினும் 15 நாட்களின் பின்பு பிரசுரத்தின் மீதான தடை விலக்கப்பட்டு அலுவலகம் திறக்கப்பட்டது.

உதயன் பணிமனை எறிகணை வீச்சுகளுக்கும் இலக்காகியது. ஆயுதம் ஏந்தியவர்கள் அலுவலகத்தினுள் அத்துமீறிப் பலவந்தமாகப் புகுந்து ஊழியர்களைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றனர், கைக்குண்டு வீச்சுக்கு இலக்காகியமை, மற்றும் வியாபாரத்திலிருந்து தீர்க்கப்பட்ட துப்பாக்கி வேட்டுக்களினால் பாதிப்புக்குள்ளாகியமை அத்துடன் எதுவித போதிய காரணங்களுமின்றி கொழும்புக் கல்கிசையில் வைத்து மரணச்சடங்கு ஒன்றிற்குச் சமுகமளித்திருந்த சமயத்தில் அதன் ஆசிரியரைக் கைது செய்தமை போன்ற பல குரூரமான சம்பவங்களையும் பலத்த சேதங்களையும், இழப்புக்களையும் எதிர்கொண்ட ஓர் துணிச்சலான வரலாற்றைத் தன்னகத்தே கொண்ட உதயன் நிறுவனம் இன்றும் ஊக்கமிழக்காது தன் பணியினைத் தொடர்கின்றது.

முகத்தை மூடி மறைத்துக் கொண்ட ஆறு கொள்ளைக்காரர் புதன்கிழமை காலையில் தாக்குதலை மேற்கொண்ட போது உத்தியோகத்தர்கள் காயமுற்றிருந்தும் கூட உதயனின் ஆத்ம பலத்தை அவர்களால் உடைக்க முடியவில்லை.

குரூரக் கொலையின் துயரினை அனுபவித்த 'சண்டே லீடர்' நிறுவனமாகிய நாங்கள் உங்களது சக உத்தியோகத்தர்களின் கரங்கள் மேலும் வலுவடைய வேண்டுகிறோம்.

**சண்டேலீடர் பத்திரிகையின்**
**ஆசிரியர் தலையங்கம்**

சுடர் ஒளி

வார சஞ்சிகை

24, ஏப்ரல் - 30 ஏப்ரல், 2013

361, கஸ்தூரியார் வீதி,
தொலைபேசி- 021 567 7609
மின்னஞ்சல்: sudarolijaffna@gmail.com

## நல்லிணக்கப் பகடைக்காய்

இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த போருக்குப் பின்னான காலங்களில் அரசு அர்ப்பணிப்போடு செயற்பட்டதாக ஜெனீவா அமர்வுகளில் மட்டும் மஹிந்த வாதிகள் பீற்றிக் கொள்கிறார்கள். ஆனால், நடைமுறையில் நல்லிணக்கத்துக்கான எந்தவொரு சிறுமுயற்சியையும் அவர்கள் எடுப்பதாகத் தெரியவில்லை. குறிப்பாக இலங்கையின் ஊடக சுதந்திரத்தைக் காக்கும் நடவடிக்கை எதனையும் அரசு இதுவரை எடுத்ததாகத் தெரியவில்லை.

இலங்கையில் 33 தடவைகள் தாக்குதலுக் குள்ளான ஒரே ஊடகம் உதயன் மட்டுமே. ஆனால், அதன் மீது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் வன்முறைகளைத் தடுக்க அரசு தவறிவிட்டது. கடந்த வாரம் கிளிநொச்சியில் உள்ள உதயனின் பிராந்தியப் பணிமனை மீது இனந்தெரியாதோர் மேற்கொண்ட தாக்குதல் தொடர்பில் வழமைபோலவே ஆமை வேகத்திலேயே தன் விசாரணைகளை அரச தரப்பு மேற்கொண்டிருந்தது. ஆயினும் அது தொடர்பில் ஆனானப்பட்ட அமெரிக்காவே கண்டித்த பிறகு எப்படிப் பேசாமல் இருக்க முடியும்? ஒப்புக்கு விசாரணை நடப்பதாகக் காட்டிக் கொண்டு பழையபடி உறங்கு நிலைக்கு இலங்கை அரசு சென்றுவிட்டது.

ஆனால், அதன் உறக்கத்தை மிகச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டவர்கள் ஒருவார இடைவெளியில் உதயன் மீது இரண்டாவது தடவையாகவும் பாய்ந்திருக்கிறார்கள். இந்த முறை அவர்களின் இலக்கு அச்சுப்பகுதி தான். உதயன் மீதான வன்முறைகளைக் கட்டுப்படுத்த ஏற்கனவே தான் விடுத்திருந்த கோரிக்கையை இலங்கை இம்மியளவேனும் நிறைவேற்றத் துணியவில்லை என்ற விடயம் அமெரிக்கத் தரப்புக்கு சீற்றத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும். ஏற்கனவே ஜெனீவாச் சமரால் குழப்பமுற்றிருக்கும் இலங்கை-அமெரிக்க உறவு நிலையில் இத்தகைய ஊடக வன்முறைகள் இன்னமும் விரிசலை அதிகப்படுத்தியிருக்கின்றன. அதன் விளைவாகவோ என்னவோ இலங்கைக்கான தனது உதவிகளை வெகுவாகக் குறைத்திருக்கிறது அமெரிக்கா.

ஏற்கனவே பொருளாதாரப் பாதிப்புகளால் தள்ளாடிக் கொண்டிருக்கும் இலங்கை அரசுக்கு அமெரிக்காவில் இத்தகைய திடீர் நடவடிக்கை இன்னமும் அதிர்ச்சியை உண்டு பண்ணியிருக் கிறது. அமெரிக்கா இவ்வாறு இலங்கைக்கான உதவிகளில் எவரும் எதிர்பார்க்காத சமயத்தில் கைவைத்தமைக்கு நல்லிணக்கத்தை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை காட்டி வரும் அக்கறையீனம் மட்டுமே காரணமல்ல என்றும் ஒரு சாரார் கூறுகின்றனர்.

ஐரோப்பிய ஒன்றியம் வழங்கத் தவறிய ஜீ.எஸ்.பி வரிச்சலுகையைச் சீனாவிடமிருந்து இலங்கை பெறவுள்ளதால் உண்டான கடுப்பிலேயே தனது உதவிகளை உடனடியாகக் குறைத்திருக்கிறது அமெரிக்கா என்பது அவர்களது வாதம். அதுவும் சரியான காரணி போலத்தான் தெரிகிறது. ஆயினும் சீனாவுடன் ஒட்டுவதால் தான் இலங்கைக்கான உதவியைக் குறைத்தோம் என்று பகிரங்கமாக அமெரிக்கா சொல்லப்போவது கிடையாது. எனவே, தன்னுடைய இராஜதந்திர பழிவாங்கலுக்காக அது நல்லிணக்கம் என்ற பகடைக்காயை வைத்தே இலங்கையை மிரட்டுகிறது; இனியும் மிரட்டும்.

# அடிவயிறு கலங்கும் அமெரிக்கா

**பிரமன்**



பல்வேறு சர்ச்சைகளுக்கு மத்தியில் அண்மையில் வெளியான கமலஹாசனின் 'விஸ்வரூபம்' திரைப்படம் அமெரிக்காவில் புறாக்களைப் பயன்படுத்தி 'அல்கெய்டா' அமைப்பு நடத்தவிருந்த குண்டு வெடிப்பு ஒன்றைத் தடுப்பது பற்றிய கதையையே மையமாகக் கொண்டிருந்தது. இந்தப் படத்தில் உலகிலேயே பெண்களையும், குழந்தைகளையும் கொல்லாத(?) அதியுத்தம இராணுவமாக அமெரிக்கப் படைகளை உருவகித்திருந்த கமலஹாசன், இப்படி அப்பாவியான ஒரு நாட்டின் மீது அல்கெய்டா அமைப்பு அநியாயத்துக்குக் குண்டுகளை வெடிக்கச் செய்வதாகத் தன்னுடைய அமெரிக்க விசுவாசத்தைக் காட்டியிருந்தார். விஸ்வரூபம் படத்தில் அனர்த்தத்தை நிகழ்த்தவிருந்த குண்டைச் செயலிழக்கச் செய்வதற்குப் படத்தின் நாயகி பிரஷர் குக்கரைப் பயன்படுத்தியிருப்பாள். ஆனால், யதார்த்தத்தில் அதே பிரஷர் குக்கரைப் பயன்படுத்தி அமெரிக்காவில் கொடூரத்தனமாகக் குண்டுவெடிப்பு ஒன்று நிகழ்த்தப்பட்டிருக்கின்றது.

பொஸ்டன் நகரில் நடைபெற்றுக் கொண்டிருந்தது மாபெரும் மரதன் ஓட்டப் போட்டி. வயது வேறுபாடின்றி ஆயிரக்கணக்கானோர் இதில் பங்கு கொண்டிருந்தனர். போட்டி முடிவடைய இன்னும் சில நிமிடங்களே இருந்தன. சில மீற்றர்கள் தாண்டினால் வெற்றிக் கோட்டை வீரர்கள் எட்டிவிட முடியும். ஆனால், அதற்கு இடம்கொடுக்கவில்லை 'பிரஷர் குக்கரில்' ஒளிந்திருந்த குண்டு. பொஸ்டனையே குலுங்கச் செய்யும் அளவிற்கு ஒரு முறை குண்டு வெடிப்பால் எழுந்த ஒலி அதிர்ந்து அடங்கியது. சுற்றிவர எங்கும் தீயின் சுவாலைகள். கந்தகப் புகை மூச்செடுக்க விடாமல் அந்தரிக்க வைத்தது. எவருக்கும் என்ன நடக்கின்றதென்றே புரியவில்லை. குண்டுவெடிப்பு நிகழ்ந்து சில நிமிடங்களுக்குப் பின்னரே தங்களுக்குக் காயம் ஏற்பட்டதைப் பலர் உணர்ந்தார்கள். எங்கும் சிற்றாறுகளாகக் குருதி கொப்பளித்துப் பாய்ந்து கொண்டிருந்தது.

மூன்று பேரைக் காவு கொண்டு நூற்றுக்கு மேற்பட்டோரைக் காயப்படுத்தியிருந்த குண்டுவெடிப்பின் சூத்திரதாரி ஒருவன் பின்னர் பொலிஸின் விரட்டுதலின்போது சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தில் இறந்து போயிருந்தான். வீதியில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்புக் கமரா, கையில் பிரஷர் குக்கருடன் காத்திருந்த தாக்குதலாளியை இனங்காட்டியிருந்தது. இன்னும் துருவித்துருவி சி.ஐ.ஏ விசாரித்ததில் மற்றொருவனும் மாட்டுப்பட்டுள்ளான்.

அமெரிக்காவின் இரட்டைக் கோபுரத் தகர்ப்புக்குப் பின்னர் அந்த நாட்டில் பாதுகாப்பு என்றுமில்லாத வகையில் பலப்படுத்தப்பட்டிருந்தது. சட்டங்களும் மிகக் கடுமையாக இறுக்கப்பட்டிருந்தன. வேவு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டிருந்தன. இதனால் அமெரிக்காவுக்கு எதிரான எண்ணத்தோடு ஒரு ஈ நுழைந்தால் கூட நொடியில் கண்டுபிடித்துவிடும் ஆற்றல் அமெரிக்காவுக்கு இருந்தது. ஆனால், அப்படிப்பட்ட அமெரிக்காவுக்குக் கடுக்காய் கொடுத்து விட்டுத் தாக்குதல்களை நடத்த அல்கெய்டா உள்ளிட்ட அமைப்புகள் தருணம் தேடி அலைந்து கொண்டிருந்தன. புதிய வழிகள் அவற்றிற்குத் தேவைப்பட்டன. அப்படியொரு தந்திரமாகவே விஸ்வரூபம் படத்தில் காட்டப்பட்டது போன்ற முறைகளைப் பயன்படுத்தித் தாக்குதல்களை நடத்தும் முயற்சியாகும். அமெரிக்கர்களைப் பொறுத்தவரை தாங்கள் களிப்போடு கூடியிருக்கும் இடங்களுக்குச் சமையல் பாத்திரங்களைக் கொண்டு சென்று சமைத்துண்டு மகிழ்வர். இந்தப் பழக்கத்தைப் பயன்படுத்தியே பிரஷர் குக்கருக்குள் குண்டை மறைத்து எடுத்து வந்திருக்கிறார்கள்.


இரட்டைக் கோபுரங்களைத் தகர்க்கப் பயன்படுத்திய விமானங்களைக் கடத்துவதற்கு அல்கெய்டா அமைப்பினர் திரவ வெடிபொருள்கள், சிறு கத்திகள், தூள் முதலான மனிதர்களுக்குக் கெடுதியை உண்டு பண்ணும் பொருள்களைப் பயன்படுத்தியிருந்தார்கள். ஆயினும் 2001 செப்ரம்பர், 11 தாக்குதலுக்குப் பின்னர் இத்தகைய பொருள்களை விமானங்களில் கொண்டுவர அமெரிக்கா தடைவிதித்திருந்தது. இப்போது பிரஷர் குக்கருக்குள் குண்டு கொண்டுவரப்பட்டிருப்பதால் இன்னும் சில மாதங்களில் அதற்கும் தடைவிதிக்கப்படலாம். ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆயினும், அமெரிக்கா உலக நாடுகளில் தன்னுடைய ஆதிக்க வெறி கொண்ட நோக்கை நீட்டாதிருந்தால் மட்டுமே தன் தேசத்தில் நிகழும் குண்டுவெடிப்புகளைத் தவிர்க்க முடியும். இல்லாவிட்டால் இப்போது குக்கருக்குள் வெடித்த குண்டு நாளை சட்டி பானைகளுக்குள்ளும் வெடிக்கக் கூடும்.



அமுதன்

# உயிர் கொல்லும் வயல்!

## – காத்திருக்கும் ஆபத்துக்கள் –



சிதறிக் கிடக்கும் மிதிவெடி அகற்றும் பணியாளரின் உடலம்.

முகமாலை, மூன்று தசாப்த போரின் முக்கிய வடு. முண்டங்களாகக் காட்சியளிக்கும் பனைகளே இதன் சாட்சி. போர் தின்ற இந்தப் பிரதேசம், இன்னமும் உயிர் குடிக்கும் வெறியோடு காத்திருக்கின்றது. அந்த நிலத்தினுள் மறைந்து கிடக்கும் ஆபத்துக்களைக் களைபவர்களையும் காவு கொள்கின்றது இந்தச் சூனியப் பிரதேசம்.

மக்கள் வாசனையை நுகர்ந்து முகமாலை மண் நீண்ட நாட்பட்டிருக்கும். தமிழீழ விடுதலைப் புலிகளதும், இலங்கை இராணுவத்தினரதும் எல்லையாக இருந்த முகமாலை நேரடி மோதல்கள் அதிகம் இடம்பெற்ற களமாகும். நேரடி மோதல்கள் தொடர்ச்சியாக இடம்பெறுகின்ற இந்தப் பகுதி, முன்னேற்றங்களைத் தடை செய்யும் பொருட்டு பல ஏற்பாடுகளைக் கொண்டிருந்தது.

தமிழீழ விடுதலைப் புலிகளாலும், இராணுவத்தினராலும் மூன்று அடுக்கு மண் அணைகள் இந்தப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ளன. இந்த மண் அணைகள் மற்றும் அதற்கு இடைப்பட்ட பகுதிகளில் மிதிவெடிகள், கண்ணிவெடிகள் தூவி விடப்பட்டுள்ளன. போர்க் காலத்தில் இரு தரப்பும் நேருக்கு நேர் மோதிக் கொண்ட பொழுது வீசப்பட்ட கைக்குண்டுகள், துப்பாக்கி ரவைகளால் நிறைந்து காணப்படுகின்றது இந்தப் பிரதேசம்.

ஏ-9 காப்பெற் வீதியில் சீறிப் பயணிக்கும் வாகனங்கள், இந்தப் பகுதியில் அடர்ந்து காணப்படும் பற்றைகளை ஒரு நொடியில் கடக்கின்றன. கொடூரச் சிரிப்போடு அசைகின்ற இந்தப் பற்றைகளுக்குள்ளும் புகுந்து அங்கிருக்கும் உயிர் கொல்லிகளை அப்புறப்படுத்துவதில் சில மனித ஜீவன்கள் ஈடுபட்டுக் கொண்டு தான் இருக்கின்றன. அவ்வாறு உயிர் கொல்லிகளை அப்புறப்படுத்தும் ஜீவன் ஒன்றின் உயிரை இந்தக் கொலைகார வயல் பறித்துக் கொண்டது. ஏப்ரல் 8 ஆம் திகதி திங்கட்கிழமை. வழமை போன்று 'ஹலோ ட்ரஸ்ட்' நிறுவனப் பணியாளர்கள் தமது வேலைகளை தொடங்கினர். இந்தக் கொலைகார வயல் தொடர்பில் அவர்களுக்கு ஏற்கனவே தெரியும் என்பதால் அவர்கள் தமது பணிகளைக் கவனமாகவே முன்னெடுத்தனர். முருகவேலும் அவதானத்துடன் தனக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் வேலையைத் தொடங்கினான்.

கடந்த 2006 ஆம் ஆண்டு ஏ-9 பிரதான வீதி மூடப்பட்ட சில தினங்களில் முகமாலையூடாக முன்னேற்ற நடவடிக்கையை இராணுவம் முன்னெடுத்திருந்தது. இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட சிறிது நேரத்திலேயே விடுதலைப் புலிகளின் முதலாவது மண் அணையை விரைவாக இலங்கை இராணுவம் தகர்த்தெறிந்தது. அதன் பின்னர் இரண்டாவது மண் அணையை நெருங்கும்போதே அவர்களுக்கு வில்லங்கம் புரிந்தது.

25 டாங்கிகளையும் 650 படையினரையும் ஒரு நொடிப் பொழுதில் இழந்துபோய் அந்தப் படை நடவடிக்கையிலிருந்து படையினர் பின்வாங்கினர். அவ்வாறு படையினரைக் கொன்று குவித்த தமிழீழ விடுதலைப் புலிகளின் இரண்டாவது மண் அணைப் பகுதியிலேயே முருகவேலும் பணியமேற்கொண்டிருந்தான். குறிப்பிட்ட நேரத்துக்கு ஒரு முறை பணியாளர்களுக்கு ஓய்வு விடப்படும். முருகவேலும் ஓய்வுக்கு வந்திருந்து விட்டு மீண்டும் பணியைச் செய்ய ஆயத்தமாகின்றான்.

> அனுபவம் வாய்ந்தவர்களை வெளியேற்றி விட்டு இந்தக் கொலைகார வயலில் கண்ணிவெடி அகற்றலை அரசு எவ்வாறு முன்னெடுக்கப் போகின்றது?

9.52ஐ மணிக்கூடு காட்டி நிற்கின்றது. திடீரென அந்தப் பகுதியின் நிஷப்தத்தைக் கலைத்து ஒரு சத்தம். பத்துக் குண்டுகள் ஒன்று சேர்ந்து வெடித்தது போன்றதொரு சத்தம். அத்துடன் அந்தப் பகுதி மீண்டும் நிசப்தமாகின்றது. இந்தச் சத்தத்துடன் 'ஹலோ ட்ரஸ்ட்' பணியாளர்களால் ஆபத்துக்குரிய விசில் ஊதப்படுகின்றது. சத்தம் வந்த இடத்தை நோக்கி எல்லாக் கால்களும் ஓடுகின்றன.

அங்கே முருகவேலின் தலையில்லாதஉடல்கிடக்கின்றது. தலையும், காலும் குண்டு வெடிப்பில் சிதைந்து விட்டன. முண்டம் எந்தவித சேதாரமும் இன்றிக் காணப்படுகின்றது.

**என்ன நடந்தது ?**

முருகவேல் துப்புரவாக்கப்பட்ட பகுதியிலிருந்து சுமார் ஒரு மீற்றர் தூரத்தின் முன்பாகவுள்ள துப்புரவு செய்யப்படாத பகுதியிலேயே இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தயாரிப்பான டாங்கி எதிர்ப்பு மிதிவெடி (பார் மைன்ஸ்) வெடித்ததாலேயே இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது. டாங்கி எதிர்ப்பு மிதிவெடியில் 1 தொடக்கம் 6 மிதிவெடிகள் வரையில் காணப்படும். டாங்கிகளின் அழுத்தத்துக்கு சமனான அழுத்தம் அவற்றின் மீது பிரயோகிக்கப்படும் போதே அவை வெடிக்கும்.

அதனால்விடுதலைப் புலிகள், டாங்கிகளுடன் அவற்றுக்கு 'கவசமாக' வருகின்ற இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்துவதற்காகத் டாங்கி எதிர்ப்பு மிதிவெடியுடன் மற்றை யாதேனுமொரு மிதிவெடியை வைப்பார்கள். அது 'கிரனைட்'டாக இருக்கும் சில வேளைகளில் அங்குள்ள மரக் கொடிகளைச் சொருகி வைப்பார்கள். அந்த மரக் கொடிகள் சிறிது அசைந்தாலும் தாங்கி எதிர்ப்பு மிதிவெடிகள்வெடித்துச் சிதறிவிடும்.

அப்படிப்பட்ட பயங்கரமான டாங்கி எதிர்ப்பு மிதிவெடி வெடித்ததாலேயே சம்பவ இடத்திலேயே உடல் சிதறி முருகவேல் சாவடைந்தார்.

முருகவேல் துப்புரவு செய்யப்படாத பகுதிக்குள் இருந்த தாங்கி எதிர்ப்பு மிதிவெடியைக் கண்டபின்னர் அதனை அடையாளப்படுத்த முயற்சித்திருக்க வேண்டும். ஏனெனில் ஒரு கண்ணிவெடி அகற்றும் பணியாளனிடம் காணப்படுகின்ற உபகரணங்களில் துப்புரவு செய்யும் ஒரு வகை உபகரணத்தை மாத்திரம் முருகவேலின் உடல் இருந்த இடத்தில் காணவில்லை. மேலும் முருகவேலின் தலைக் கவசம் எரிந்து கருகியுள்ளது.

முருகவேலின் தலையும், காலும் சிதறிச் சிதைந்த போதும் அவரது உடல் பகுதியில் எந்தக் கீறல்களும் ஏற்படவில்லை. முருகவேலின் உடற்கூற்றுப் பரிசோதனையில், அவரது இதயம் அதிகளவிலான அழுத்தத்தினால் வெடித்திருந்தமை கண்டறியப்பட்டது. அந்தளவு தூரம் மிகமோசமான வெடிவிபத்தாக இது அமைந்துள்ளது.

'ஹலோ ட்ரஸ்ட்' நிறுவனம் கடந்த 2002 ஆம் ஆண்டிலிருந்து இலங்கையில் மிதிவெடி அகற்றல் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றது. அந்த நிறுவனம் சந்தித்த முதலாவது உயிரிழப்பு இதுவாகும். முருகவேல் கிளிநொச்சி, வட்டக்கச்சியைச் சேர்ந்தவர். இவர் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க முன்னாள் போராளி. முருகவேலின் உயிரிழப்பைத் தொடர்ந்து அவரது குடும்பத்துக்கு 'ஹலோ ட்ரஸ்ட்' நிறுவனம் 15 ஆயிரம் அமெரிக்க டொலரை நிதியுதவியாக வழங்கியுள்ளது.

மிக வேகமாக உயிர்களைப் காவுகொள்ளக் காத்திருக்கிறது முகமாலை கண்ணிவெடி வயல். இவ்வாறானதொரு நிலையில் இலங்கை அரசு கண்ணிவெடி அகற்றும் நிறுவனங்கள் அவற்றை மேற்பார்வை, மேற்கொள்ளும் ஐ.நா முகவர் அமைப்பு என்பவற்றை இந்த ஆண்டுடன் வெளியேற்றுவதில் விடாப்பிடியாக இருக்கின்றது.

அனுபவம் வாய்ந்தவர்களை வெளியேற்றி விட்டு இந்தக் கொலைகார வயலில் கண்ணிவெடி அகற்றல் செயற்பாடுகளை அரசு எவ்வாறு முன்னெடுக்கப் போகின்றது. அல்லது தமிழர் பிரதேசங்கள் என்பதால் கொலைகார வயலை அப்படியே காவுகொள்ளும் கருவியாகக் கைவிடப் போகின்றதா...?



# லக்ஷ்மி இல்லம்

எல். கார்த்திகா
(யாழ்பல்கலைக்கழகம்)

## சிறுகதை

மெல்லிய காற்று சில்லென்று பனித்துளியை என் முகத்தில் தெளித்தது போல் வருடிச் சென்றது. கண்ணை விழித்து அருகில் படுத்திருந்த தாத்தாவைப் பார்த்தேன். காணவில்லை. பயத்துடன் திடீரென்று மனம் ஏதோ எண்ணியது. துள்ளி எழுந்து தாத்தாவைத் தேடினேன். ஒரு இடமும் காணவில்லை.

"தாத்தா... தாத்தா..."

என்று கூப்பிட்டுக் கொண்டு தோட்டப் பக்கம் போனேன். அங்கே அவர் அங்கும் இங்குமாக நடந்து திரிந்தார். என்னைக் கண்டவுடன் "வாம்மா கோபி. என்னைத் தேடி வந்தனீ?" என்றார்.

"ஓம் தாத்தா. என்னையும் எழுப்பாமல் இங்கை நடந்து திரிந்து என்ன யோசிக்கிறியள்" என்றேன்.

"அது ஒன்றும் இல்லை. உன்னைப் பற்றித் தான் நினைத்தேன்".

"என்னைப் பற்றி நினைக்க என்ன இருக்கிறது தாத்தா? நான் தான் உங்களில் ஒருத்தனே. பிறகு என்ன?"

"உனக்கு நினைக்கக் கூட சுதந்திரம் இல்லையா? சொல்லடா?".

"ஐயோ தாத்தா. நீங்கள் நல்லாவே ஆறுதலாக இருந்து நினைத்துக் கொண்டே இருங்கோ. நான் மற்றப் பாட்டி தாத்தாமாரை எழுப்பித் தேத்தண்ணி கொடுத்திட்டு உங்களுக்கும் கொண்டு வாறன்." என்று கூறி விட்டு நான் போய்விட்டேன்.

எனக்கு சின்ன வயசிலே அப்பா, அம்மா யாரும் இல்லை. ஒரு அநாதையாகத் தெருவோரம் பிச்சை எடுத்துக் கொண்டு இருந்த என்னை அந்த வழியால் காரில் போன பெரியவர்கள் என்னைக் கண்டதும் இறங்கி வந்து "தம்பி... உன்னைப் பார்த்தால் பெரிய இடத்துப் பிள்ளை போல் இருக்குது. ஆனால், நீ பிச்சை எடுக்கிறாய் ஏன்! தம்பி..." என்று மிகவும் பரிவுடன் கேட்டார்கள். அவர்களுக்கு என் சோகக்கதையைச் சொன்னேன். அதைக் கேட்ட அவர்கள் "நீ எங்களுடன் வா நாங்கள் உன்னைப் படிக்க வைத்துப் பெரியாள் ஆக்குகிறோம்" என்று கூட்டிக் கொண்டு சென்றனர். நான் வந்த இடம் தான் 'லக்ஷ்மி இல்லம்'. அங்கு பிள்ளைகளால் கைவிடப்பட்டவர்களும், பிள்ளைகளை இழந்தவர்களும் இருந்தார்கள். இப்பெரியவர்களுக்கு ஆண் பிள்ளைகள் இருவரும் வெளிநாட்டில் நல்ல வசதியுடன் வாழ்கிறார்கள். ஆனால், அவர்கள் பெத்தவர்களைக் கைவிட்டுவிட்டார்கள். இதனால் பெரியவர்கள் இருவரும் தமது மனச்சந்தோஷத்திற்காகத் தங்களுடைய வசதிக்கேற்ப ஒரு முதியோர் இல்லத்தை அமைத்து நடாத்தி வருகின்றனர். நானும் அவர்களுடன் சேர்ந்து அங்கு இருக்கும் எல்லோருக்கும் பேரப்பிள்ளையாக வாழ்ந்து வருகின்றேன். அதற்கிடையில் பெரியவர்கள் இருவரும் ஒரு நாள் என்னை அழைத்து "நீதான் இந்த இல்லத்திற்குப் பொறுப்பு. இறுதி வரை நீதான் நடத்த வேண்டும்" என்று கூறிவிட்டு கண்ணை மூடி விட்டனர். இப்போது நான் தான் அங்கு இருப்பவர்களுக்குச் செல்லப்பிள்ளை.

முடிக்க அங்கு எல்லோரும் வந்து சேர்ந்தார்கள். அதிகாலை பத்து மணி மட்டும் அங்கு கூடி இருந்து ஏதாவது கதைப்பார்கள். அவர்களை மகிழ்விப்பது என்றுடைய கடமை. அப்படி எல்லோரும் இருந்து கதைத்துக் கொண்டிருந்த பொழுது கேற் திறக்கும் சத்தம் கேட்டது. நான் எழும்பிப் போய்ப் பார்த்தேன். அங்கே ஒரு வயது போன அம்மா அழுது கொண்டு தன் பிள்ளையுடன் வந்து நின்றா. "வாங்கோ அம்மா..." என்று கூறி அவர்களை உள்ளே அழைத்துக் கொண்டு போனேன். அவருக்குத் தன் பிள்ளையை விட்டு வர மனம் வரவில்லை போலும். அதனால் பிள்ளையின் காலில் விழுந்து "என்னைக் கூட்டிக் கொண்டு போடா... நான் ஒரு வேலைக்காரியாய் இருக்கிறன். தயவுசெய்து கூட்டிக் கொண்டு போடா..." என்று கெஞ்சிக் கொண்டிருந்தாள். எனக்குப் பரிதாபமாக இருந்தது. அதைப் பார்த்துக் கொண்டிருந்த ஒரு தாத்தா "ஏன் அம்மா? அவன் தான் உங்களை வேண்டாம் என்று இங்க கொண்டு வந்து விடுகிறான். பிறகு என்னத்திற்கு அவன்ர காலில எல்லாம் விழுறியள், பேசாமல் எங்கட செல்லப் பேரன் கோபியோடு உள்ளே போனீங்கள் என்றால் உங்க பிள்ளையை விட நன்றாகப் பார்ப்பான். நாங்கள் அவனைக் கடவுள் தந்த பரிசாகத்தான் கருதுகிறோம்"

"இல்லை... இல்லை அவன்தான் எங்கள் கடவுள்" என்று ஒரு பாட்டியின் குரல் கேட்டது. இவை எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த அந்த அம்மா மனதை மாற்றித் தன் பிள்ளையின் கையில் இருந்த பெட்டியை வாங்கிக் கொண்டு திரும்பிப் பார்க்காமல் கோபியின் கையை இழுத்துக் கொண்டு உள்ளுக்குப் போனாள்

இவ்வாறு சந்தோஷமாக வாழ்ந்து வந்த போது பெரியவர்கள் இருவரின் அநாதை என்னை எடுத்து வளர்த்தவர்களின் தூரத்து உறவுக்காரர் என்று சொல்லி ஒரு பெரியவரும், மகளும், இளைஞனும் வந்தார்கள். அவர்கள் மூவரும் இல்லத்திற்கு அருகில் குடியேறினர்கள். அந்தப் பெண்பிள்ளை வதனாவும், பிரவீனும் அடிக்கடி இல்லத்திற்கு வந்து எங்களுடன் சந்தோஷமாகப் பொழுதைப் போக்குவார்கள்.

ஒரு நாள் அருகில் உள்ள கோயிலுக்குப் போக வெளிக்கிடும் போது வதனாவும் என்னுடன் சேர்ந்து வந்தாள். திடீரென்று "கோபி... ஐ லவ் யூ... உங்களைக் கல்யாணம் செய்ய விரும்புறன், உங்கட முடிவு என்ன?" என்று கேட்டாள். எனக்கு இதைக் கேட்டவுடன் என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்தபடி நின்றேன். கொஞ்ச நேரத்தின் பின் ஏதோ சத்தம் கேட்க சுயநினைவுக்கு வந்தவனாய் "எனக்கும் உங்களுக்கும் ஏணி வைத்தாலும் எட்டாது. தயவு செய்து என்னை மறந்து விடுங்கள்" என்று கூறிவிட்டு நான் போய்விட்டேன். அதன் பின் அவளின் நினைவு என்னைக் கொஞ்சம் கொஞ்சமாக வாட்டத் தொடங்கியது. அவளோ இல்லத்தில் இருந்த எல்லோருக்கும் சொல்லி எப்படியாவது என்னிடம் சம்மதத்தைப் பெற முயன்றாள். இந்த நேரம் பிரவீனுக்கும் அது பற்றித் தெரிய வந்தது. வதனாவின் அப்பாவுக்கும் தெரிய வந்தது. வதனாவின் அப்பா என்னிடம் வந்து "என் மகளை விட்டு விடு. நீ ஒரு அநாதை. என் மகளுக்கு எந்த விதத்தில் நீ பொருத்தமாவாய்? அவள் பிரவீனைத் தான் கல்யாணம் செய்ய வேண்டும்" என்று கூறிச் சென்றுவிட்டார். எனக்கு ஒன்றுமே செய்யத் தோன்றாமல் அப்படியே நின்றேன். அப்பொழுது பிரவீன் வந்து "கோபி... வதனா இல்லை என்றால் நான் செத்திடுவேன்" என்று சொல்லி விட்டுப் போய்விட்டான். எனக்கு என்ன செய்வதென்று தெரியாமல் யோசித்துக் கொண்டிருந்தேன் அப்பொழுது வதனா என்னை நோக்கி வந்து கொண்டிருந்தாள். அவளைக் கண்டவுடன் மனதைத் தேற்றிக்கொண்டு "நான்... உங்களைக் காதலிக்கவில்லை, வீணான கற்பனையை மனதில் வளர்க்காமல் பிரவீனைக் கல்யாணம் செய்து கொண்டு சந்தோசமாக வாழுங்கள். இது தான் என் முடிவு இதில் மாற்றம் எதுவுமில்லை. தயவு செய்து இதில் நின்று போயிடுங்கோ" என்றவுடன் அவள் போய் விட்டாள். அவள் போன பின் நான் தனியாக இருந்து யோசித்துக் கொண்டிருந்தேன். அப்போது தாத்தா, பாட்டிமார் எல்லோரும் என்னை நோக்கி வந்து பார்த்துக் கொண்டிருந்தார்கள். "என்ன என்னைப் பார்க்கிறியள்? நான் ஏதும் குற்றம் செய்தனானா?" என்று கேட்டேன். எல்லோரும் பேசாமல் நின்றார்கள். கடைசியாக பாட்டி "ஏன் கோபி அந்தப் பெண்ணை வேண்டாம் என்று சொன்னனீ?" என்றார்.

"நான் அந்தப் பெண்ணை விரும்பவில்லை. அதோட எனக்கு இந்த 'லக்ஷ்மி இல்லம்' தான் வீடு. நீங்கள் எல்லோரும் என் உறவுக்காரர். எனக்கு இதுவே போதும் நான் உங்களை விட்டுப் பிரியமாட்டேன்" என்று, எல்லோரையும் கட்டிக் கொண்டு அழுதேன். அதைத் தூரத்தில் இருந்து கவனித்த வதனாவின் அப்பா எங்களுக்குக் கிட்ட வந்து "கோபி... என்னை மன்னித்துவிடப்பா "நீயும் இந்த இல்லமும் எப்பவும் பிரியாமல் இருக்க வேண்டும். அதோட இந்த இல்லம் மேலும் மேலும் வளர வேண்டும். அதற்கான உதவியை நான் செய்கிறேன். சிலவேளை நானும் பிற்காலத்தில் இங்கு தான் வருவேன். ஏனென்றால் உன்ர பராமரிப்பிலே வாழ விருப்பமாயிருக்குது. என்று கூறி விட்டு போனார். தாத்தா, பாட்டிமார் எல்லோரும் என்னைத் தழுவிக்கொண்டு 'லக்ஷ்மி இல்லம்' என்னும் போர்டை பெருமையாகப் பார்த்து மகிழ்ந்தனர்.

# கவிதைப் புனல்

## தேடல்



உள்ளத்தின் தீ நீயென்பதை
உரைத்திடத் தெரியாமல்
ஊமையாய் உறவாடும் – என்
ஊனப்பட்ட மனது
உறங்காமல் அழுகிறது
ஊருறங்கும் தருணத்தில்
உறக்கம் பறித்து பேசிய
உன் நினைவுகள்
உருவகப்படுத்தப்பட்ட
உயிர்க்கவிதைகளாக
ஊற்றெடுக்க – விழிநீர்
உற்பத்தியாகிறது
உன்னைத் தேடித் தருவதாக!

[illegible]



## ஊடகவியலாளன்

அடக்குமுறைக்கு
அஞ்சாமல்
அச்சுறுத்தலுக்கு
பயப்படாமல்
நாட்டில் நடப்பவற்றை
நாட்டு மக்களுக்கு
நடுநிலைமை தவறாமல்
ஏட்டில் எழுதுபவன்
நேர்மையான
ஊடகவியலாளன்!

ஓரம் போகாமல்
பக்கச் சார்பற்ற
பத்திரிகா தர்மத்திற்கு
பாதகமில்லாமல்
செய்திகளை சேகரித்து
தருபவன் ஊடகவியலாளன்!

அரசியல் வாதிகள் முதல்
அனைவருக்கும்
அவசியமானவன்
ஊடகவியலாளன்!

திரைமறைவில் நடக்கும்
திருகு தாளங்களை
அரசியல்வாதிகளின்
செயற்பாடுகளை அறிந்து
அனைத்து மக்களுக்கும்
அறியத்தருபவன்
ஊடகவியலாளன்!

[illegible]

## அகி(இ)ம்சையின் அறுவடை

வன்முறையால் நல்லவை
நடப்பதாக தெரிந்தாலும் அது
நிரந்தரமல்ல
ஆனால்
வன்முறையால் விளையும் தீமை
நிரந்தரமானது.
அகிம்சையைக் கொண்டு
நல்லரசாக்கினார்
அன்றைய காந்தி
அகிம்சையை கொன்று
வல்லரசாக்கினார்
இன்றைய காந்தி
காந்தியின் பாதையில்
முட்களை வீசி
காந்தியின் சமாதியில்
சத்தியம் செய்து
அகிம்சையின் மடியில்
கோட்சேக்களை தினமும்
அறுவடை செய்வோம்...!



அஜா
யாழ்ப்பாணம்.

## ஆனந்தம்



சில நேரம் பூக்கள்
சித்திரை மாத வசந்தம் – என
பருவங்கள் மாறி – மனதில்
புருவம் போட்டு
அருவாய்ப் போய்விடும்.

அருநிகா.

## தைரியம்

புதுப்புது அவதாரங்களில்
இன்னல்கள்
எம்மத்தியிலே
அத்தனையையும்
வீறு கொண்டு
நாம் எதிர்த்திடவே
கலியுகம் தனிலே நாம்
கவி படைத்து வாழ்ந்திடவே
வரும் இன்னல்களை
தைரியம் எனும்
தடிகொண்டு
விரட்டிடுவோம்.
புதுவாழ்வை
புத்தாண்டுடன்
தொடங்கிடுவோம்.



[illegible]






**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்**

உயர்வு தாழ்வு கருதாமல், அனைவரிடமும் சமமாக பழகும் மேஷ ராசிக்காரர்களே!

உங்களின் நல்ல செயல்களை, அன்புக்குரியவர்கள் பாராட்ட வேண்டும் என, எண்ணுவீர்கள். எதிரியிடம் விலகுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் புதிதாக வருகிற இடையூறு சரி செய்வதால் வளர்ச்சி ஏற்படும். மாணவர்கள் கவனமுடன் படித்து, சீரான தேர்ச்சி பெறுவர்.



**கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகிணி மிருகசீரிடம் 1,2 ஆம் பாதங்கள்**

இனிமையான வார்த்தை பேசி, அனைவர் மனதையும் வசீகரிக்கும் ரிஷப ராசிக்காரர்களே!

அன்புக்குரியவர்கள் உங்களிடம் உதவி கேட்டுப்பெறுவர். எவரிடமும் நிதானமுடன் பேசி மதிப்பு, மரியாதை பெறுவீர்கள். புதிய வீடு, வாகனம் வாங்க சிலருக்கு யோகம் உண்டு. குடும்பப் பெண்கள், கணவரின் அன்பு, பாசம் தாராள பணவசதி கிடைத்து, சந்தோஷ வாழ்வு நடத்துவர். மாணவர்கள், படிப்பில் முன்னேற்றம் காண்பர்.



**மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள்**

பிறருடைய செயலில், நிறைகளை மட்டுமே பார்க்க விரும்பும் மிதுன ராசிக்காரர்களே!

உங்களின் மதி நுட்பம் நிறைந்த செயல்கள் நண்பர், உறவினர்களிடம் வரவேற்பை பெற்றுத்தரும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் முயற்சி யினால் சராசரி நிலையைப் பாதுகாத்துக் கொள்வீர்கள். குடும்ப பெண்கள், மாணவர்கள் ஆர்வமுடன் படித்து, கூடுதல் மதிப்பெண்



**புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

உங்களுடைய செயல்பாடு, வாழ்வில் உயரும் கடக ராசிக்காரர்களே!

உங்களின் முக்கியமான செயலை, பிறர் பொறுப்பில் தரவேண்டாம். பணக்கடன் தொந்தரவு, மனதை கஷ்டப்படுத்தும். வியாபாரத்தில் அளவான உற்பத்தி, விற்பனை இருக்கும். இயந்திர தொழிற்சாலை பணியாளர்கள், பாதுகாப்பு நடைமுறை தவறாமல் பின்பற்ற வேண்டும். மாணவர்கள், சாகச விளையாட்டில் ஈடுபடக்கூடாது.



**மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம்**

எதற்கும் அஞ்சாத மன உறுதி படைத்த சிம்ம ராசிக்காரர்களே!

உங்கள் வாழ்வின் வளர்ச்சிக்கு, தடையாக உள்ளவற்றை அறிந்து, சமயோசிதமாக சரி செய்வீர்கள். இல்லறத்துணையின் கூடுதல் அன்பு, பாசம் கிடைத்து மனம் மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணி, தாராள பணச்செலவில் மேற்கொள்வீர்கள். மாணவர்கள் பாதுகாப்பு குறைவான இடங்களில் செல்லக்கூடாது.



**உத்திரம் 2,3,4 ஆம் பாதங்கள், அத்தம் 1,2 ம் பாதங்கள்**

பிறர் பாராட்டும் வகையில், நற்செயல் புரியும் கன்னி ராசிக்காரர்களே!

உங்களின் திட்டமிட்ட செயல் ஒன்றை, மறக்கும் சூழ்நிலை ஏற்படலாம். குடும்ப உறுப்பினர், நினைவுபடுத்தி நிறைவேற்ற உதவுவர். இல்லறத்துணையின் கருத்தை மதித்து செயல்படுவதால், ஒற்றுமைசீராகும். மாணவர்கள், தகுந்த பயிற்சியினால் தேர்ச்சிபெறுவர்.



**சித்திரை 3,4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்**

சிரமமான பணியையும், எளிதாக நிறைவேற்றுகின்ற துலாம் ராசிக்காரர்களே!

உங்கள் தகுதி, திறமைகளை வளர்த்து, சமூகத்தில் கூடுதல் அந்தஸ்து பெறுவீர்கள். உழைப்பால் அதிக பணவரவு பெற உருவாகிற வாய்ப்பைப் பெறுவீர்கள். மாணவர்கள் படிப்பில் சிறந்த தேர்ச்சி பெற, புதிய பயிற்சி முறை பின்பற்றுவர்.



**விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

அனைவரிடமும் இன்முகத்துடன் பழகுகின்ற விருச்சிக ராசிக்காரர்களே!

வாழ்வின் எதிர்கால நலன்களை கவனத்தில் கொண்டு செயல்படுவீர்கள். புத்திரரின் தேவையை நிறைவேற்ற தாமதம் ஆவதால், மனவருத்தம் கொள்வர். மாணவர்கள், புதியவர்களை நண்பராக ஏற்பதில், தகுந்த கவனம் வேண்டும்.



**மூலம், பூராடம், உத்திராடம் 1 ஆம் பாதம்**

கடமையில் கண்ணும் கருத்துமாக செயல்படும் தனுசு ராசிக்காரர்களே!

உங்களின் லட்சிய கனவை நிறைவேற்ற, புதிய வாய்ப்பு உருவாகும். அன்பு, நற்குணத்தினால், சமூகத்தில் இனிய அனுபவம் பெறுவீர்கள். புத்திரர் ஆன்மிகம் விஷயங்களை, உங்களிடம் கேட்டு தெரிந்து கொள்வர். தொழில், வியாபாரத்தில் இருந்த குறுக்கீடு விலகும். மாணவர்களின் படிப்புக்கான பணவசதி திருப்திகரமாக கிடைக்கும்.



**உத்தராடம் 2,3,4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதங்கள்**

பெற்றவர்களின் கருத்துக்கு, உரிய மதிப்பு தரும் மகர ராசிக்காரர்களே!

சொந்த முயற்சியால், முக்கியமான பணி ஒன்றை நிறைவேற்றுவீர்கள். உங்களை, அவமதிக்க முயற்சித்த சிலர், வியந்து விலகுவர். தெய்வ வழிபாடு, மனநிம்மதி தரும். வியாபார நடைமுறை சுமுகமாக இருக்கும். பெண்களுக்கு, தாய்வழி உறவினர்களால் நன்மைஉண்டு. மாணவர்கள் படிப்பில் ஆர்வம் கொள்வர்.



**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம் 1,2,3 ஆம் பாதங்கள்**

கஷ்டங்களை வெற்றிப்படிக்கட்டுகளாக மாற்றும் கும்ப ராசிக்காரர்களே!

மற்ற கிரகங்களின் அமர்வு, எதிர்மறை பலன் தரும் வகையில் உள்ளது. இல்லறத்துணை, கூடுதல் அன்பு பாசத்துடன் நடந்து கொள்வர். பெண்கள், சிக்கன பணச்செலவில் குடும்ப நலம் பேணுவர். மாணவர்கள், சகமாணவர்களிடம் படிப்பு தவிர, பிற விவாதம் பேச வேண்டாம்.



**பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

உறவினர்களிடம், நன்மதிப்பு பெற்று வாழும் மீன ராசிக்காரர்களே!

மனஅமைதியை பாதுகாத்துக் கொள்வது, சிரமம் வராமல் தவிர்க்க உதவும். இளைய சகோதரர் உதவிகரமாக நடந்து கொள்வர். தொழில், வியாபாரத்தில் கூடுதல் உழைப்பினால் சராசரி பணவரவு கிடைக்கும். மாணவர்கள் தகுந்த பயிற்சியினால் கல்வியில் முன்னேற்றம் பெறலாம்.

# கடவுள் மீது பழி போடாதீர்



ஒரு ஆஸ்ரமத்தில், வேதாந்த பாடம் நடத்திக் கொண்டிருந்த குரு, உலகில் உள்ள ஒவ்வொரு உயிரும் கடவுளின் அம்சம், என்று போதித்துக் கொண்டிருந்தார். அப்போது, ஒரு பசு தோட்டத்தில் உள்ள பயிர்களைத் தின்று கொண்டிருந்தது. சிஷ்யர்களின் கவனம் பசுவின் மீது செல்லத் தொடங்கியது.

ஆத்திரமடைந்த குரு, பசுவைத் தடியால் பலமாக அடித்தார். அந்த இடத்திலேயே பசு இறந்து போனது. பசுவின் உரிமையாளர் குருவிடம் வந்து நஷ்ட ஈடு கேட்டார். அதற்கு குருவோ, பசுவும் பிரம்மம். நானும் பிரம்மம். உலகில் உள்ள ஒவ்வொரு உயிரும் பிரம்மம் (கடவுள் அம்சம்). பிரம்மத்தைப் பிரம்மம் அடித்தது. பிரம்மம் பிரம்மத்திடம் சென்றுவிட்டது, அவ்வளவு தான், என்று பதில் அளித்தார்.

பதிலைக் கேட்ட பசுவின் உரிமையாளர் செய்வதறியாமல், வழியில் சென்ற துறவி ஒருவரை அழைத்து குருவிடம் நியாயம் கேட்கும் படி வேண்டினார். துறவி குருவிடம், இங்கே பாடம் நடத்துவது யார்? என்றார்.

நான் தான் என்றார் குரு.

இந்தத் தோட்டம், ஆஸ்ரமம் இவற்றை எல்லாம் பராமரிப்பவர் யார்?

அதற்கும், நான் தான் என்றார் குரு.

சந்நியாசி குருவிடம், இதற்கெல்லாம் பதில் நான் என்றால் பசுவைக் கொன்றதும் தாங்கள் தானே! என்றார்.

தவறை உணர்ந்த குரு, பசுவின் உரிமையாளருக்கு நஷ்ட ஈடு தர ஒப்புக்கொண்டு மன்னிப்பும் கேட்டார். ஒருவர், தான் செய்த தவறை கடவுள் தான் செய்ய வைத்தார் என்று சொல்லி காரணம் கற்பிக்கக் கூடாது, புரிகிறதா!

# காலம் பொன்னானது



பெஞ்சமின் பிராங்க்ளின் என்ற அறிஞர், ஒரு புத்தகக்கடை வைத்திருந்தார். அன்று அவருக்கு முக்கியமான பணி. விற்பனையைக் கவனிக்கும்படி தனது பணியாளரிடம் சொல்லி விட்டு, தனது அறையில் இருந்து வேலையைப் பார்க்கத் துவங்கினார். அப்போது ஒரு வாடிக்கையாளர் வந்தார். புத்தகங்களைப் புரட்டிப் பார்த்துக் கொண்டே இருந்தார். நீண்ட நேரத்துக்குப் பின் ஒரு புத்தகத்தை எடுத்தார்.

விற்பனையாளரிடம் அதன் விலை என்ன என்றார்.

ஒரு டொலர் என்றார் விற்பனையாளர். விலை அதிகமாக இருக்கிறதே என்றவர், இன்னொரு புத்தகத்தைத் தேடி எடுத்தார். அதன் விலையைக் கேட்டார்.

இதுவும் ஒரு டொலர் தான், என்ற விற்பனையாளரிடம்,தம்பி! இதன் விலை தொடர்பாக, நான் உங்கள் முதலாளியிடம் பேச வேண்டும். அவரை வரச்சொல்லுங்கள், என்றார்.

ஐயா! அவர் முக்கியமான பணியில் இருக்கிறார். தங்களிடம் பேசும் அளவுக்கு நேரமில்லை. நீங்கள் இந்த விலையைக் கொடுத்து புத்தகத்தை எடுத்துச் செல்லுங்கள், என்றார்.

விற்பனையாளரிடம் கடுமையாக வாதாடி, உரிமையாளர் இங்கே வந்தே ஆக வேண்டுமென அடம்பிடித்தார்.

வேறு வழியின்றி ஊழியர் பிராங்க்ளினிடம் சென்று விஷயத்தைச் சொன்னார்.

பிராங்க்ளின் வெளியே வந்தார். ஐயா! இந்தப் புத்தகம் எனக்கு வேண்டும். ஒரு டொலர் என்பது அதிகமாக இருக்கிறது. குறைத்துச் சொல்லுங்கள், என்றார். பிராங்க்ளின் மறுத்தார்.

சிறிதுநேரம் வாக்குவாதம் தொடர்ந்தது. கடைசியாக இதன் விலையைக் கூறுங்கள், என்றார் வந்தவர்.

ஒரு டொலர் 25 செண்ட். என்றார் பிராங்க்ளின். வாடிக்கையாளருக்கு அதிர்ச்சியாகி விட்டது.

நான் குறைக்கச் சொன்னால் நீங்கள் உயர்த்திச் சொல்கிறீர்களே! எதற்கு? என்றார். புத்தகத்தின் விலை ஒரு டொலர் தான். நான் நேரத்தைப் பொன்னாக மதிப்பவன்.

என் பணியை இவ்வளவு நேரம் கெடுத்தீர்களே! அதற்கு 25செண்ட், என்றார் பிராங்க்ளின்.

வந்தவரோ விடாக்கண்டன். குறைத்தே ஆக வேண்டுமென அவரிடம் வாதிட, இரண்டு டொலர் என்றார் பிராங்க்ளின்.

வாடிக்கையாளர் கோபம் கொப்பளிக்க நின்ற போது, ஏன் மேலும் உயர்த்தினீர்கள்? என்றார்.

நான் நேரத்தின் அருமையை உணர்ந்தவன். நீங்கள் உணரவில்லை. அதற்காகத்தான் இந்த விலை உயர்வு, என்றார்.

வந்தவர் இரண்டு டொலரைக் கொடுத்துவிட்டு நடையைக் கட்டினார்.

உலகத்தில் விலை மதிப்பற்ற பொருள் நேரம் மட்டுமே. பணக்காரனாவதற்கு ஒரே தகுதி காலத்தின் அருமையை உணர்வது தான். சரிதானே!


● தமிழில் : ஜெயகம்

# சிங்க வேட்டை

(சென்ற வாரத் தொடர்ச்சி)

*'பீட்டரால் அசையவே முடியவில்லை. சிங்கத்தின் கோரப் பற்கள் தன் தலையை நோக்கித் தாழ்வதை அவதானித்தான்.*

*"அவ்வளவு தான். என் கதை முடிந்தது."*




சபுன்கா கிராமத்தை அடைந்த பீட்டரும், சாலியாவும் சற்றும் ஓய்வெடுக்கவில்லை. கொடிய சிங்கம் அந்த இரவில் எந்நேரத்திலும் இரைதேடி வரக்கூடும். எனவே, முன்னெச்சரிக்கையுடன் சில நடவடிக்கைகளை அவர்கள் மேற்கொண்டனர்.

அடர்ந்த முட்புதர்களை வெட்டி ஒரு கூடு ஒன்றை அவசர அவசரமாக அமைத்தனர். அதற்குள் படுத்திருந்த இருவரின் கைகளிலும் தயார் நிலையில் ஆயுதங்கள்.

சுற்றிலும் ஒரே அமைதி.

காட்டில் அன்று பகற்பொழுது முழுவதும் அலைந்ததால் இருவருக்கும் நல்ல அசதி. தம்மையும் அறியாமல் அவர்கள் சற்றே உறங்கிப்போனார்கள்.

திடீரென ஒரு சத்தம். விழித்துக் கொண்ட பீட்டர் என்னவென்று புரிந்து கொள்ள முதலே காதைக் கிழிக்கும் ஒரு கதறல். அந்தக் கதறலால் சபுன்கா கிராமமே அதிர்ந்தது.

அவ்வளவு தான். சத்தம் வந்த திசை நோக்கித் வேகமாகப் பீட்டரும் சாலியாவும் ஓடினார்கள். அவர்களது கைகளில் ஆயுதங்கள் மின்னிக் கொண்டிருந்தன.

ஓட்டத்தின் முடிவில் மரணபீதியுடன் கதறிக் கொண்டிருக்கும் ஒரு மனிதனைக் கண்டார்கள். அவன் இவர்களைக் கண்டதும் இன்னும் பலமாக அழத் தொடங்கினான். நீண்ட நேர ஆசுவாசப்படுத்தலுக்குப் பின்னரே தன் அழுகைக்கான காரணத்தை சொல்லத் தொடங்கினான்.

"இன்று அதிகாலை என் மனைவி இயற்கை உபாதையைக்கழிப்பதற்காக குடிசைக்கு வெளியே வந்தாள்.

அப்போது....

அப்போது....

வெளியே பதுங்கியிருந்த ஆட்கொல்லிச் சிங்கம் சப்தமில்லாமல் பாய்ந்து எனது மனைவியின் காலைக் கவ்வி இழுத்துக் கொண்டு, என் கண்முன்னாலேயே மின்னல் வேகத்தில் விரைந்து விட்டது." என்று அழுகை பாதி புலம்பல் பாதியாக சொல்லி முடித்தான்.

விடிகாலை 5.00 மணியாகிவிட்டது. பீட்டரும் சாலியாவும் டோர்ச் வெளிச்சத்தில் அந்த இடத்தை ஆராய்ந்தார்கள்.

சிங்கத்தின் கால் தடங்கள், பெண்ணொருத்தி போராடியதற்கான தடயங்கள் என்பன அந்த வெளிச்சத்தில் துல்லியமாகத் தெரிந்தன. பீட்டரும், சாலியாவும் அந்தத் தடங்களைப் பின் தொடர்ந்து மிகமிக அவதானத்துடன் முன்னேறத் தொடங்கினர்.

பீட்டர் வேட்டையில் கில்லாடி. ஏராளமான சிங்கங்களையும், புலிகளையும் அநாயசமாக வேட்டையாடிய அனுபவம் அவனுக்குண்டு. எனவே, ஒரு வெறிபிடித்த சிங்கம் எப்படித் தாக்கும் என்பது அவனுக்கு நன்றாகவே தெரியும். நூறு மீற்றர் தூரத்தை மூன்றே விநாடிகளில் கடந்து எதிரியைத் தாக்கும் வல்லமை சிங்கத்துக்குண்டு.

முன்னேறிக் கொண்டிருந்த சாலியா திடீரென சிலைபோல் நின்றான். சில கணங்களுக்குப் பின்னர் அடிமேல் அடி வைத்துப் பின்நோக்கியும் நகரத் தொடங்கினான். இதன் காரணம் பீட்டருக்குப் புரியவில்லை. ஒரு சந்தேகம் தோன்றவே டோர்ச் லைட்டுக்கு உயிரூட்டினான். அங்கே..... அவனுக்கு முன்னே தரையில் இரத்தத்தில் தோய்ந்தபடி ஒரு மனிதக்கை.

கூடவே ஒருவித நாற்றமும் அங்கே வீசத் தொடங்கியது. சிங்கம் சர்வநிச்சயமாகத் தமக்கு வெகு அருகில் இருப்பதைப் பீட்டர் புரிந்துகொண்டான்.

பீட்டர் சுதாகரிப்பதற்கிடையில் இருபதடி தூரத்திலிருந்து பிரமாண்டமான சரீரத்துடன் பீட்டரை நோக்கி உறுமிக் கொண்டு பாய்ந்தது சிங்கம். பயத்தில் பீட்டரின் கை நடுங்கியது. குருட்டாம் போக்கில் கையில் இருந்த துப்பாக்கியின் விசையை அழுத்தினான்.

'டுமீல்...!'

அது சிங்கத்தின் விலா எலும்புக்குப் பக்கத்தில் பாய்ந்தது. ஆனால், சிங்கத்துக்கு எந்தப் பாதிப்பும் இல்லை. ஒரே பாய்ச்சலில் சிங்கம் பீட்டரை விழுத்தியது.

கையிலிருந்த துப்பாக்கி எங்கோ தெறித்து விழ, பீட்டர் அப்படியே தரையில் உருண்டு விழுந்தான். சிங்கம் அவனுக்கு மேல் பாய்ந்து அழுத்தியது. ஒரு மலையே தன்மேல் அழுத்துவதைப் போல் உணர்ந்தான் பீட்டர்.

ஒரு இரையைக் கொல்வதற்குச் சிங்கம் கைக்கொள்ளும் முறை என்னவென்று பீட்டருக்கு அத்துப்படி. நெற்றிப் பொட்டில் சிங்கம் தன் பற்களை ஆவேசத்தோடு பதித்து மூளை வரை செலுத்தும். அடுத்தகணம் உடனடி மரணம் தான்.

இயற்கை எப்படியான ஒரு அறிவை இந்த மிருகத்திற்குக் கொடுத்திருக்கிறது? என்று உயிர் ஊசலாடும் அந்தக்கணத்திலும் நினைத்தான் பீட்டர்.

பீட்டரால் அசையவே முடியவில்லை. சிங்கத்தின் கோரப்பற்கள் தன் தலையை நோக்கித் தாழ்வதை அவதானித்தான்.

"அவ்வளவு தான். என் கதை முடிந்தது."

கண்ணை இறுக மூடிக் கொண்டான். ஆனால், அதற்குள் சாலியா தன் கூரான நீண்ட ஈட்டியால் சிங்கத்தின் முதுகில் மிகப் பலமாகக் குத்தினான். வலியால் துடித்த சிங்கம் தன்னைப் புறமுதுகில் தாக்கும் அடுத்த எதிரி யார் என்ற தோரணையோடு திரும்பியது. கையில் ஈட்டியோடு நின்ற சாலியாவைக் கோபத்தோடு பார்த்தது. ஒரே பாய்ச்சல். அடுத்தகணம் சிங்கத்தின் பிடிக்குள் சாலியா சிக்கிக் கொண்டான்.

சிங்கத்தின் பிடியிலிருந்து மீண்டெழுந்த பீட்டர் பதற்றத்தோடு தொலைந்து போன தன் துப்பாக்கியைத் தேடத் தொடங்கினான். ஆனால், அந்த மங்கலான வெளிச்சத்தில் துப்பாக்கி எங்கே விழுந்தது என்று கண்டுபிடிப்பது கடினமாக இருந்தது.

சாலியாவை எப்படியும் காப்பாற்றிவிட வேண்டும். தாமதிக்க நேரமில்லை. ஏதாவது செய்தாக வேண்டும். சிங்கத்தின் வாயிலிருந்து தப்பிக்க சாலியா அவனது கைகளை அங்கும் இங்குமாக ஆட்டிக் கொண்டிருந்தான். இதனைப் பீட்டர் அவதானித்தான். தாமதிக்கும் ஒவ்வொரு வினாடியும் சாலியாவின் உயிருக்கு ஆபத்தானது. அந்த நேரத்தில் பீட்டரின் கண்ணில் சாலியாவின் ஈட்டி தட்டுப்பட்டது.

ஒரு கணம் கூட வீணாக்கப் பீட்டர் விரும்பவில்லை. ஈட்டியோடு வெறி கொண்டவன் போல சிங்கத்தின் மீது பாய்ந்தான். காடே அதிரும் வகையில் கத்திக் கொண்டு உயிரை விட்டது சிங்கம்.

சாலியா பலமான காயங்களுக்கு உள்ளாகியிருந்தான். உடனடியாகப் பீட்டர் அவனை தூக்கிக் கொண்டு 75 மைல் தொலைவிலிருந்த வைத்தியசாலைக்கு விரைந்தான்.

சபுன்கா கிராமமே மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்தது. அந்த ஊர் மக்கள் அன்றைய நாளை ஒரு திருவிழாவாகவே கொண்டாடி மகிழ்ந்தனர்.

பீட்டரும் மன நிறைவோடு மக்களிடமிருந்து பிரியாவிடை பெற்றான். அடுத்த வருடமும் அவன் வேட்டைக்கு வரும்போது [illegible] அவனுக்காகக் காத்திருக்கின்றோம்'



## இன்னும் உயிர்வாழும் குண்டு!

இரண்டாம் உலக யுத்தத்தில் போடப்பட்ட குண்டு ஒன்று இப்போது ஜேர்மனியில் மீட்கப்பட்டுள்ளது. ஏறக்குறைய 100 கிலோகிராம் எடையைக் கொண்ட இந்தக் குண்டு வெடித்திருந்தால் அந்தப் பகுதியை நாசமாக்கியிருக்கும். நல்லவேளையாக அது வெடித்திருக்கவில்லை. போரின் இறுதிக் கட்டத்தில் நேசநாட்டுப் படைகளாலேயே இது வீசப்பட்டுள்ளது. நீண்ட காலமாக யாராலும் சீண்டுவாரற்று உறங்கிக் கிடந்த இந்தக் குண்டை அண்மையில் காடழித்து நகரை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்த பணியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். உடனடியாகவே அவர்கள் இது குறித்து பாதுகாப்புத் தரப்புக்குத் தெரியப்படுத்த, உடனடியாகவே குண்டுகளைச் செயலிழக்கச் செய்யும் பிரிவு அங்கு விரைந்தது. இன்னமும் வெடிக்கக்கூடிய உயிர்ப்புநிலையில் இருந்த குண்டைப் பத்திரமாக விமானத்தில் ஏற்றி அப்புறப்படுத்தியுள்ளனர்.




ஒருநாள், சிற்றெறும்புகள் எல்லாம் ஒன்று கூடின. தலைவர் எறும்பு பேசியது:

"அன்புச் சிற்றெறும்புகளே! ஒரு விஷயத்தைப் பற்றி விவாதிக்கத்தான் நாம் இங்கு கூடியுள்ளோம். நம்மைப் படைத்ததும் அந்தக் கடவுள் தான். கொடிய விஷப் பாம்பு களைப் படைத்ததும் அந்தக் கடவுள்தான். ஆனால், கடவுள் படைப்பு விஷயத்தில், ஓரவஞ்சனை செய்துவிட்டார். பாம்பு கடித்தால் மனிதர்கள் செத்துவிடுகின்றனர். நாம் கடித்தால் அவர்கள் சாவதில்லை!"

"ஆமாம்! தாங்கள் சொல்வது சரிதான். கடவுள் நம் விஷயத்தில் ஓரவஞ்சனை தான் செய்துவிட்டார்!" என்றன மற்ற சிற்றெறும்புகள்.

"இந்த விஷயத்தைக் கடவுளிடமே சொல்லி முறையிடுவோம். நாம் கடித்தாலும் மனிதர்கள் சாகவேண்டும் என்ற வரத்தைக் கேட்போம். அதன் பிறகு நம்மை நசுக்கிக் கொல்ல ஒரு மனிதனும் இந்த உலகில் இருக்க மாட்டான். நீங்கள் என்ன சொல் கிறீர்கள்?" என்று கேட்டது தலைவர் எறும்பு.

"தாங்கள் சொல்வதை அப்படியே ஆமோதிக்கிறோம்!" என்றன மற்றய சிற்றெறும்புகள்.

உடனே, அவைகள் அனைத்தும், கடவுளை எண்ணித் தவமிருக்கத் தொடங்கின.

சில நாள்களுக்குப் பின் எறும்புகள் முன்னே கடவுள் தோன்றினார்.

"சிற்றெறும்புகளே! உங்களுக்கு என்ன வரம் வேண்டும்?" என்று கேட்டார் கடவுள்.

மற்ற எறும்புகளின் சார்பாக, தலைவர் சிற்றெறும்பு தங்கள் கோரிக்கையைக் கடவுளின் முன்னே வைத்தது.

"நாங்களும் கடித்தால், சாக வேண்டும் கடவுளே!"

"சரி! அப்படியே ஆகட்டும்!"

வரம் கொடுத்து விட்டுக் கடவுள் மறைந்தார்.

சிற்றெறும்புகளுக்கு ஒரே ஆனந்தம். அந்த ஆனந்தத்தில் கண்ணிற்பட்ட மனிதர்களையெல்லாம் கடித்தன.

கோபம் கொண்ட மனிதர்கள் அவற்றை விரல்களுக்கு இடையே வைத்து நசுக்கிக் கொன்றனர்.

தப்பிப் பிழைத்த சிற்றெறும்புகள் திகிலோடு மீண்டும் ஒன்று கூடின.

"என்ன கொடுமை? மனிதர்கள் மீண்டும் நம் இனத்தைக் கொல்கின்றனரே. கடவுள் என்ன வரம் கொடுத்தார்?" என்று கூக்குரலிட்டன.

"தெரியவில்லை. எங்கோ தவறு நடந்திருக்கிறது. மீண்டும் தவமிருப்போம். கடவுள் வரட்டும். முறையிடு

# கடித்தால் சாகவேண்டும்!



வோம்!" என்றது தலைவர் சிற்றெறும்பு.

மீண்டும் அவை கடவுளை வேண்டித் தவமிருந்தன. சில நாள்களில் கடவுள் தோன்றினார்.

"மீண்டும் உங்களுக்கு என்ன பிரச்சினை?" என்று கேட்டார் கடவுள்.

"நாங்கள் கடித்தால் சாகவேண்டும் என்று வரம் கேட்டோம். ஆனால், நாங்கள் செத்துக் கொண்டிருக் கிறோம். உங்கள் வரம் எங்களுக்கு எதிராக வேலை செய்வதை எங்களால் ஜீரணித்துக் கொள்ளவே முடியவில்லை!" என்றது தலைவர் சிற்றெறும்பு.

"நாங்கள் சாக வேண்டும் என்று நீங்கள் தானே வரம் கேட்டீர்கள். அதைத் தானே நானும் கொடுத்தேன். இப்போது என்னையே குறை சொல்கிறீர்களே. என்ன அநியாயம் இது!" என்று குறைபட்டுக் கொண்டார் கடவுள்.

சிற்றெறும்புகள் ஒன்றை, ஒன்று பார்த்துக் கொண்டன.


"அடக் கடவுளே! நாங்கள் கடித்தால் சாக வேண்டும் என்று குறிப்பிட்டது மனிதர்களை. விஷப் பாம்புகள் கடித்தால் மனிதர்கள் சாகிறார்களே... அதுபோன்று மனிதர்களைக் கொல்லும் விஷத்தைத் தான் உங்களிடம் நாங்கள் கேட்டோம். எங்களை நாங்களே அழித்துக்கொள்ள வரம் கேட்போமா?" என்று சொல்லிவிட்டு அழுதன.

கடவுள் கோபத்தோடு சிற்றெறும்புகளைப் பார்த்தார்.

"யார் சாகவேண்டும் என்று நீங்கள் தெளிவாகச் சொல்லவில்லை தவிர உங்கள் ஆசை மிகவும் மோசமானது; கோடிக் கணக்கில் உற்பத்தியாகும் உங்களுக்குப் பாம்பின் விஷத்தைக் கொடுத்தால் மனித இனத்தையே அழித்துவிடுவீர்கள். நான் ஆக்க, நீங்கள் அழிப்பதா? அது ஒருபோதும் நடக்காது. நான் ஒருமுறை வரம் கொடுத்தது கொடுத்ததுதான். அதை மாற்ற முடியாது. கடித்தால் மனிதர்களால் நசுக்கப்பட்டு சாகவேண்டும் என்பதைத்தான் உங்கள் தலையில் எழுதியிருக்கிறேன். அதையும் என்னால் மாற்ற முடியாது. உடனடியாக இங்கே இருந்து போய்விடுங்கள்!" என்று எச்சரித்துவிட்டு மறைந்தார் கடவுள்.


சிற்றெறும்புகள் அவமானத்தால் குறுகி, சோகத்துடன் அந்த இடத்தைவிட்டு அகன்றன.

# கும்பகர்ணன் 15



நீங்கள் எதை மேம்படுத்த விரும்பினாலும், அதற்கு வழி காட்டும் எண்ணச் சுடர்களை உருவாக்கும் 61 மந்திரக் கேள்விகளை அடுத்த அத்தியாயத்தில் காணலாம். எதையும் அபிவிருத்தி செய்ய வேண்டுவது ஏன் என்பதை அதற்கு முன்பு தெரிந்து கொள்ள வேண்டும்.

இது மிக எளிமையானது. அபிவிருத்தி செய்கிற மேம்படுத்துகிற ஒருவர் மேம்பாட்டுக்கான வழியைக் கூறுகிற ஒருவர் -அதற்கான பெருமையைப் பெறுகிறார். பதவி உயர்வை அடைகிறார். அதன் வாயிலாக மேலும் செல்வந்தராகிறார். அது மட்டுமல்ல பெரும் புகழும் அவருக்குக் கிட்டுகிறது. ஒரே ஒரு உருப்படியான யோசனை உங்களைப் பணக்காரராக்கிவிடும் அதே போன்ற பத்து உருப்படியான யோசனைகள் உங்களைச் சீக்கிரம் செல்வந்தராக்கிவிடும். வளர்ச்சிக்கு, மேம்பாட்டுக்கு- லாபகரமான- யதார்த்தமான- உருப்படியான மேம்பாட்டுக்கான யோசனைகளை விடாமல் சொல்லி வருகின்ற ஒருவர், அவர் யாராக இருந்தாலும் சரி- எந்தப் பதவியில் இருந்தாலும் சரி, தான் விரும்புகிற



# நேரமும் பணமும்!

ஊதியத்தை அவர் பெற்று விட முடியும்.

மேம்பாட்டுக்கான யோசனைகள் தான் நீங்கள் உற்பத்தி செய்யக் கூடியவற்றில் அதிக மதிப்பு வாய்ந்தது.

மேம்பாட்டுக்கான யோசனைகளைத் தொடர்ந்து வழங்குகிறவர்தான் அத்தியாவசியமானவர். அத்தகைய ஒருவரோ ஒருத்தியோ செய்கின்ற வேலைகளைத் தானியங்கி யந்திரமோ கம்பியூட்டரோ செய்துவிட முடியாது. ஏன்? கம்பியூட்டர்களால் எண்ணங்களை யோசனைகளை உருவாக்க முடியாது. எண்ணங்கள் யோசனைகளால் ஏற்படும் பலன்களைத் தான் கம்பியூட்டர்கள் கணக்கிட்டுச் சொல்ல முடியும். எண்ணங்கள் யோசனைகள் இல்லையென்றால் கம்பியூட்டர்கள் பிறகு எதைக் கணிக்க முடியும்? ஆகவே எண்ணங்கள் யோசனைகள் இல்லையென்றால் எதையுமே உருவாக்க முடியாது.

ஆக, உங்களுடைய நேரத்தை நீங்கள் பயனுள்ள முறையில் செலவழிப்பது என்றால் அதற்கு வழி, உருப்படியான யோசனைகளை உருவாக்குவதுதான். பிறகு அந்த யோசனைகளால் அதிக அளவு இலாபம் கிடைக்கும் துறையில் அவற்றைப் பயன்படுத்த வேண்டும்.

எண்ணங்களை, யோசனைகளை எப்படி உருவாக்குவது? இது மிகவும் எளியது. நீங்கள் மேம்படுத்த விரும்பும் எந்த ஒரு விஷயமாகட்டும் துறையாகட்டும் அதை அபிவிருத்தி செய்திட வேண்டுமானால் அதற்கான சாத்தியக்கூறுகள் எவை? மாற்று வழிகள் எவை? என்று சிந்தித்துப் பார்த்தால் போதும்.

இங்கு 61 மந்திரக் கேள்விகளை எப்படிப் பயன்படுத்துவது என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

01. எதை நீங்கள் மேம்படுத்த விரும்புகிறீர்களோ, அதற்குப் பொருத்தமான கேள்விகளை நீங்களே கேட்டுக்கொள்ளுங்கள்.

02. பொதுவாக எல்லாக் கேள்விகளுமே உங்கள் நோக்கத்திற்குப் பொருந்தி வருவதாக இருக்காது சில கேள்விகள் உங்கள் நோக்கத்துக்குப் பொருத்தமாக இருக்கும். அத்தகைய கேள்விகள் தான் மேம்பாட்டுக்கான எண்ணச் சுடர்களைத் தோற்றுவிக்கும். பரிசுக் குவியலைப் பெறுவதற்கு- வெற்றிகளைக் குவிப்பதற்கு உருப்படியான யோசனை ஒரே ஒரு யோசனை போதும் என்பதை மறவாதீர்கள். ஒரே ஒரு யோசனை- ஒரு எண்ணப்பொறி - உங்களைப் பணக்காரர் ஆக்கி விடும். அதே போன்ற பத்துப் பன்னிரெண்டு யோசனைகள் உங்களைச் சீக்கிரம் செல்வந்தராக்கிவிடும்.

03. மேம்படுத்துவதற்கான யோசனைகள் தோன்றும் போதே அவற்றை எழுதிவைத்துக் கொள்ளுங்கள். அது முக்கியம். ஒரு யோசனை உங்கள் உள்ளத்தில் உதயமான உடனே அப்போதே அதை எழுதி வைத்து விடுங்கள். அந்த யோசனையின் பயன்கள் என்ன? விளைவு என்ன? என்று சிந்திக்கத் தொடங்கிவிடாதீர்கள். அதைப் பிறகு பார்த்துக்கொள்ளலாம். தீப்பொறி போல எண்ணங்களை- யோசனைகளை உருவாக்குவது, உடனே அவற்றை எழுதி வைப்பது.

உங்களுக்குத் தோன்றும் யோசனைகளை நீங்களே விமர்சனம் செய்து கொண்டிருக்காதீர்கள். அப்படி விமர்சனம் செய்யத் தொடங்கினால் யோசனைகள் உதய மாவதில் தடங்கல் ஏற்படும். உங்களுக்குத் தோன்றும் யோசனைகளைப் பிறகு சீராக்கலாம். மாற்றங்கள் செய்யலாம். ஆகவே உங்களுக்குத் தோன்றுகிற யோசனைகளை உடனடியாக எழுதி வைத்து விடுங்கள்.

4. மந்திரக்கேள்வி ஒவ்வொன்றையும் நீங்கள் படிக்கும் போது-உங்கள் யோசனைக்கும் அதற்கும் உள்ள வாய்ப்பு-சாத்தியக்கூறு இவை பற்றிப் பகுத்துப் பாருங்கள். மாற்று வழிகள் அனைத்தையும் பரிசீலனை செய்யுங்கள். அப்போது தோன்றும் தீப்பொறி போன்ற யோசனைகள் ஒவ்வொன்றையும் எழுதி வைத்து விடுங்கள்.

5. உங்களுடைய யோசனைக்குப் பொருந்தி வருகின்ற மந்திரக் கேள்வியை உங்களுக்கு நீங்களே கேட்டுக் கொள்ளும் போது, உங்கள் மனது வரம்பின்றி எல்லையின்றி காட்டுத்தனமாக அலைவதற்கு அனுமதியுங்கள். நடக்கவே முடியாததைக் கூட கற்பனை செய்து பாருங்கள். சிந்திக்கக் கூடாதவைகளைப் பற்றிக் கூடச் சிந்தித்துப் பாருங்கள். உங்கள் நோக்கம் என்ன? யோசனைகளை உற்பத்தி செய்வது. அந்த யோசனை நல்லதாக இருந்தாலும் தீயதாக இருந்தாலும் தரக்குறைவாக இருந்தாலும் அது பற்றிக் கவலைப்படாதீர்கள். அவ்வகையில் ஒரு யோசனை உதயமானால் அது எப்படிப்பட்ட யோசனையாக இருந்தாலும் கவலைப்படாமல் உடனே அதை எழுதி வையுங்கள்.

6.மந்திரக் கேள்விகளில் இருந்து தேவையான யோசனைகளைத் தோண்டி எடுத்தாகி விட்ட பிறகு அந்த யோசனைகளை எழுத்தில் எழுதி வைத்து விட்டபிறகு ஆழ்ந்த சிந்தனை செலுத்தி (மனத்தளவில்) -அந்த யோசனை ஒவ்வொன்றின் தராதரத்தையும் சீர்தூக்கிப் பாருங்கள். அந்த யோசனையை ஏற்றுக் கொள்ளுங்கள். நிறைவேற்றுங்கள் - மாறுதல் செய்யுங்கள் மேம்படுத்துங்கள். செம்மையாக்குங்கள். இத்தனைக்கும் பிறகு குறிப்பிட்ட ஒரு யோசனை பயனற்றது என்று நீங்கள் கருதினால் அந்த யோசனையைக் கைவிட்டுவிடுங்கள்.

7. நான் சொல்லிக் கொடுத்துள்ள வழிமுறையின் வாயிலாக உருவாகும் எந்த ஒரு யோசனையும் முழுக்க முழுக்கப் பயனற்றதாக இருக்காது. இந்த வழிமுறையின் வாயிலாகப் பெறப்படுகிற யோசனைகள் எல்லாம் உங்களுடைய அடிமனதிலிருந்து -உள் மனதில் இருந்து தோன்றுகின்றன. உங்களுக்கே சொந்தமான எல்லையற்ற அறிவாற்றலுக்கு உங்களுடைய உள் மனம் தான் பாதையாகும். ஆகவே யோசனையில் தவறு எதுவும் இருக்காது. ஒரு குறிப்பிட்ட யோசனைக்கு நீங்கள் கொள்ளக்கூடிய பொருளில் பிழை இருக்கலாம். உங்கள் உள்ளத்தில் தீப்பொறி போல் திடீர் என்று தோன்றிய உண்மையான யோசனையை நீங்கள் தவறாகப் புரிந்து கொண்டிருக்கலாம். நீங்கள் இப்போதும் பின்னரும் புரிந்து கொள்ளக் கூடியதை விட அந்தக் குறிப்பிட்ட யோசனைக்கு ஆழமான அர்த்தங்கள் இருக்கலாம்.

யோசனையை மாற்றி மேம்படுத்த முடியவில்லை என்றால், அத்தகைய யோசனைகளை எண்ணத்தைக் கைவிட்டு விடுங்கள். பயனுள்ள -செயல்படுத்தக் கூடிய- புரிந்து கொள்ளக்கூடிய யோசனைகளை மட்டுமே நடைமுறையில் கடைப்பிடியுங்கள்.

நீங்கள் எதை மேம்படுத்த விரும்பினாலும் அதற்கான யோசனைகளை நீங்கள் பெறுவதற்கு- எண்ணச் சுடர்களை எப்படி உருவாக்குவது என்பது பற்றி- அடுத்த அத்தியாயத்தில் கற்கலாம்.

யார் விஷயங்களைத் தொடர்ந்து மேம்படுத்தி வருகிறார்களோ- யார் விஷயங்களை எப்படி மேம்படுத்துவது என்று வழி சொல்கிறாரோ அவர் தான் புகழ் பெறுகிறார். பதவி உயர்வு பெறுகிறார்- செல்வம் பெறுகிறார் அத்துடன் மட்டுமல்ல, பிரபலமானவரும் ஆகிவிடுகிறார்.

ஒரே ஒரு யோசனை உங்களைப் பணக்காரர் ஆக்கிவிடும். பத்துப் பன்னிரண்டு உருவான யோசனைகள் உங்களை சீக்கிரம் செல்வந்தர் ஆக்கிவிடும்.

அபிவிருத்திக்கான உங்களுடைய யோசனைகளை எப்படி அறிமுகப்படுத்துவது? எப்படிப் பயன்படுத்துவது? எப்படிப் பிறருக்கு எடுத்துக் கூறுவது? அதன் வாயிலாக எப்படிப் புகழ் பெறுவது? எப்படிப் பதவி உயர்வு பெறுவது? எப்படிப் பணம் சம்பாதிப்பது? எப்படிப் பிரபலமடைவது? என்பதையெல்லாம் இப்புத்தகத்தின் அடுத்து வரும் அத்தியாயங்கள் உங்களுக்கு காட்டிக் கொடுக்கும்.

அடுத்த அத்தியாயத்தில் 61 மந்திரக் கேள்விகளின் பட்டியல் இடம்பெற்றுள்ளது. நீங்கள் எதை மேம்படுத்த விரும்பினாலும் அந்த 61 கேள்விகளோடு பொருத்திப் பாருங்கள் எண்ணச்சுடர் உருவாகும். யோசனைகள் உற்பத்தியாகும் எல்லாவற்றையும் அபிவிருத்தி செய்யலாம். மேம்படுத்தலாம் பிறகென்ன நீங்கள் சீக்கிரம் செல்வந்தராகி விடலாம்.

எண்ணச்சுடர்கள்! எல்லாவற்றையும் மேம்படுத்தும் யோசனைகளைத் தூண்டிவிடக் கூடிய 61 மந்திரக் கேள்விகள்.

எதுவாக இருந்தாலும் சரி, அதை மேம்படுத்த முடியும். எந்த ஒரு பொருள் அல்லது விஷயமாக இருந்தாலும் சரி உற்பத்திப் பொருள்களை, நிறுவனங்களை, அமைப்புக்களை, திட்டங்களை, வழிமுறைகளை இன்னும் இது போன்ற எந்த ஒரு விஷயமானாலும் சரி; அதை அபிவிருத்தி செய்கிறவர், மேம்படுத்துகிறவர், அதற்கான பெருமையைப் பெறுகிறார் அவருக்குப் பதவி உயர்வு கிட்டும். அவரிடம் செல்வம் குவியும். இவை மட்டுமின்றி அவர் பிரபலமாகிப் புகழும் பெறுவார் ஒரு யோசனை உங்களைப் பணக்காரர் ஆக்கும். பத்துப் பன்னிரண்டு யோசனைகளைச் செயல்படுத்தினால் நீங்கள் சீக்கிரம் செல்வந்தராகி விடுவீர்கள்.

**சுடர் ஒளி வாசகர்களே !**

**குடத்தில் இட்ட விளக்காக உங்களுக்குள் மறைந்து கிடக்கும் படைப்புத் திறன்களை குன்றின் மேல் தீபமாக்கிட சுடர் ஒளி காத்திருக்கிறது.**

**சிறுகதை, கவிதை, கட்டுரை, துணுக்குகள், எதுவானாலும் அனுப்பிவையுங்கள். தரமானவை பிரசுரிக்கப்படும்.**

படைப்புக்களை அனுப்பவேண்டிய முகவரி:

சுடர் ஒளி,
இல.361
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# அஞ்சலியின் காதலன் யார்?



தென்னிந்திய சினிமாவில் இப்போதைய சூடான-பரப்பான -விவாதப்பொருள் அஞ்சலியின் தலைமறைவு தான். 'அங்காடித்தெரு', 'எங்கேயும் காதல்', 'சேட்டை' போன்ற படங்களில் நடித்து தமிழின் முன்னணி நாயகியாக உயர்ந்துகொண்டிருந்தவர் அஞ்சலி. வெறும் கவர்ச்சியை நம்பாமல் நடிப்பிலும் வெளுத்துக்கட்டியவர். அப்படிப்பட்டவர் திடீரென படப்பிடிப்பு நடந்துகொண்டிருந்த சமயம் மாயமாகிவிட்டார். அவர் ஏன் தலைமறைவானார்? அப்படி என்ன பிரச்சினை? என்ற கேள்விகள் உங்கள் தலைக்குள் குடைச்சல் கொடுத்துக்கொண்டிருக்கும். அவற்றுக்கெல்லாம் தீர்வு காண அஞ்சலியின் நேர்காணலை உங்களுக்குத் தருகிறோம்.

***சுடர்ஒளி:**
தமிழில் சடுதியாக முன்னிலைக்கு வந்துகொண்டிருந்த நேரத்தில் ஏன் இப்படியொரு தலைமறைவு?

**அஞ்சலி:**
பல உண்மைகளை நான் சொல்லவேண்டியிருந்தது. அதற்கு வெளியிலிருந்தால் எனக்குப் பாதுகாப்பில்லை. அதனால் தான் விரும்பியோ, விரும்பாமலோ இந்த முடிவை எடுத்தேன்.

**சுடர்ஒளி:**
அப்படி என்ன உண்மைகள்?

**அஞ்சலி:**
இதுவரை என்னுடைய அம்மா என்று என்கூடவே ஒருவரை அழைத்து வருவேன். உண்மையில் அவர் என் அம்மாவே இல்லை. என் அம்மாவின் தங்கைதான் அவர். சிறு வயதிலேயே அம்மா வெளிநாட்டுக்கு வேலை பார்க்கப் போய்விட்டதால், சித்திதான் என்னைத் தத்தெடுத்து வளர்த்தார். ஆரம்பத்தில் தன் மகள் போலவே என்னைப் பார்த்துக்கொண்டார். ஆனால், பணம் வரத்தொடங்கியதும் ஆளே மாறிவிட்டார்.

***சுடர்ஒளி:**
அப்படி என்ன செய்தார்?

**அஞ்சலி:**
நான் சம்பாதிக்கும் பணம், சொத்து என்பவற்றைத் தன்னுடைய பேருக்கு மாற்றிக்கொண்டார். நான் கேட்டால் கொலை செய்துவிடுவேன் என்று மிரட்டுவார். அவருடன் இயக்குநர் மு.களஞ்சியமும் சேர்ந்துகொண்டார். இருவரும் சித்திரவதை செய்யாத குறையாக என்னை மிரட்டுவார்கள். என்னுடன் கூடப்பிறந்த அண்ணா, அக்காவோடு கூட கதைப்பதற்கு அனுமதிக்காமல் வைத்திருந்தார்கள்.

***சுடர்ஒளி:**
உங்களுடைய காதலரின் சொல்லைக் கேட்டுத்தான் இப்படி அபாண்டமாகத் தங்கள் மீது பழி போடுகிறீர்கள் என்று உங்கள் சித்தியும், இயக்குநர் களஞ்சியமும் சொல்லியிருக்கிறார்களே?

**அஞ்சலி:**
அதெல்லாம் தங்கள் மீது நான் சொல்லும் குற்றங்களை மறைப்பதற்காக அவர்கள் சொல்லும் தந்திரக்கதைகள்.

***சுடர்ஒளி:**
சரி, அப்படியானால் உங்கள் காதலர் யார்? நடிகர் ஜெய்தானே?

**அஞ்சலி:**
இந்த நேரத்தில் இப்படியொரு கேள்வி தேவையா? நேரம் வரும்போது இந்தப் பிரச்சினைகளெல்லாம் தீர்ந்த பின்னர் நானே எனது காதலர் யாரென்று சொல்கிறேன்.



# விஜய்தான் பாட்ஷா

இளையதளபதி விஜய்தான் அடுத்த பாட்ஷா. விரைவில் அவர் பாட்ஷா படத்தில் நடிக்கவுள்ளார். 'என்னது ரஜனியின் பாட்ஷாவில் விஜயா?' என்று நீங்கள் குழம்புவது புரிகிறது. விஜய் நடிக்கவிருப்பது ரஜினியின் பாட்ஷாவல்ல.

தெலுங்கில் ஜூனியர் என்.டி.ஆர்.-காஜல் அகர்வால் நடிப்பில் வெளிவந்த சக்கைபோடு போடும் 'பாட்ஷா' பட ரீமேக்கிலேயே விஜய் நடிக்கவுள்ளார். 'ஜில்லா' படத்தையடுத்து பாட்ஷா படத்தில் விஜய் இணைந்துகொள்வார் என்று கூறப்படுகிறது.



# குத்தாட்ட நா

ஒரு பாட்டுக்கு கு
ஆனால் ஒற்றைப்பாட
முன்னாள் நாயகன் ஒ
பாண்டியராஜன்தான்.
ஒரு காலத்தில் த
செய்து, வெற்றிநாயக
அதன் பின்னர் வாய்ப்
திரையுலகப் பக்கமே
மறந்துபோயிருந்தார்.
பின்னர் 'அஞ்சாதே
ஆர்ப்பாட்டமில்லாத
அசத்தியிருந்தார்.
ஆனால், அதன் பி
அஞ்ஞாதவாசம்தான்.
பாண்டியராஜனை மற
நேரத்தில், 'இரட்டைக்
திரைப்படத்தில் "தில்
மச்சான் காதலிக்க தி
வேணும்டா" என்ற
குத்துப்பாடலில் ஆடி
அமர்க்களப்படுத்தியி
றார். அந்தப் பாடல்
வெற்றி பெற்றால்,
அநேக
திரைப்படங்களில்
ஒற்றைப் பாடலுக்கு
ஆட வரும்
பாண்டியராஜனைக்
காணமுடியும். (ஒரு
ரகசியம்:
பாண்டியராஜனுக்கும்
தன் குருநாதர்
பாக்கியராஜைப்
போல
ஆட்டமென்றால்
'அலேர்ஜிக்')



# விஜயின் பக்கம் ஸ்ருதி

சன் ரீவியில் அநேகரின் வரவேற்பைப் பெற்ற தொலைக்காட்சித் தொடரான 'தென்றல்'நாயகி ஸ்ருதி இப்போது விஜய் ரீவியிலும் தலைகாட்டத் தொடங்கியுள்ளார்.

அலுவலகத்தில் நடைபெறும் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட புத்தம் புதிய தொடரான 'ஒப்பிஸ்' என்ற படைப்பில் ஸ்ருதிதான் நாயகி. பொதுவாகவே சன் ரீவி தொடர்களில் நடிப்பவர்களை விஜய் ரீவி தொடர்களில் நடிக்க அனுமதிப்பதில்லை. ஆனாலும் ஸ்ருதிக்கு இரட்டை தொலைக்காட்சிகளில் தோன்றும் பாக்கியம் கிட்டியிருக்கிறது.

ஒரு பாட்டுக்கு குத்தாட்டம் போடும் நடிகைகளைத் தெரியும்.
ால் ஒற்றைப்பாட்டுக்கு குத்தாட்டம் போட வந்துள்ளார்
னாள் நாயகன் ஒருவர். அவர் வேறு யாருமல்ல
ண்டியராஜன்தான்.
ஒரு காலத்தில் தன் முழிக்கண்களாலேயே குறும்பு
து, வெற்றிநாயகனாக உலா வந்தவர் பாண்டியராஜன்.
ன் பின்னர் வாய்ப்புகள் வற்றிப்போக, நீண்டகாலமாக
ரயுலகப் பக்கமே தலைவைப்பதை
துபோயிருந்தார்.
பின்னர் 'அஞ்சாதே' திரைப்படத்தில்
ப்பாட்டமில்லாத வில்லனாகத் தோன்றி
த்தியிருந்தார்.
ஆனால், அதன் பின்பு
ஞாதவாசம்தான். எல்லோருக்குமே
ண்டியராஜனை மறந்துபோயிருக்கும்
த்தில், 'இரட்டைக் கதிர்' என்ற
ரப்படத்தில் "தில்லு வேணும்டா
ான் காதலிக்க தில்லு
ணும்டா" என்ற
துப்பாடலில் ஆடிப்பாடி,
ர்க்களப்படுத்தியிருக்கி
அந்தப் பாடல்
றி பெற்றால்,
நக
ரப்படங்களில்
றைப் பாடலுக்கு
வரும்
ண்டியராஜனைக்
ணமுடியும். (ஒரு
யம்:
ண்டியராஜனுக்கும்
குருநாதர்
கியராஜைப்
ல
டமென்றால்
லர்ஜிக்')



# ட நாயகன்



அருந்ததி
படம் — சுண்டாட்டம்






ஹிந்தியில் வெளியாகி வசூல் ரீதியில் வெற்றி பெற்ற திரைப்படமான 'டெல்லி பெல்லி' படத்தின் தமிழ்ப் பதிப்பே 'சேட்டை' திரைப்படம். ஆர்யா, சந்தானம், பிறேம்ஜி, ஹன்சிகா, அஞ்சலி ஆகியோரின் நடிப்பில் வெளிவந்துள்ள இந்தத் திரைப்படம் முழுக்க முழுக்க நகைச்சுவையை அடிப்படையாகக் கொண்டது.

ஆனாலும், நகைச்சுவை என்ற போர்வையில் சந்தானத்துக்கு அடி வயிறு கலக்குவதும், அடிக்கடி மலசல கூடம் போவதும், வாயு பிரிவதும் மட்டுமே அநேக காட்சிகளை நிறைக்கின்றன. இதனால் மூக்கைப் பொத்தியபடி படத்தைப் பார்ப்பது போன்ற பிரமை பார்வையாளர்களுக்கு ஏற்படவே செய்கிறது.


படத்தின் கதையொன்றும் அவ்வளவு புதுமையானதல்ல. வில்லனின் வைரப் பார்சலும், நாயகியின் மருத்துவ பரிசோதனைக்கான மலப் பார்சலும் கைமாறிவிடுகின்றன. கைவிட்டுப் போன வைரங்களைத் தேடியலைகின்றார் வில்லன் நாசர். ஆனாலும், அந்த வைரங்களை அடைந்து கோடீஸ்வரர்களாக மாறத் துடிக்கின்றனர் ஆர்யா, பிரேம்ஜி, சந்தானம் கூட்டணியினர். இவர்கள் மூவரும் பத்திரிகை நிறுவனம் ஒன்றில் பணியாற்றுபவர்கள். இவர்கள் நினைத்தது போன்று வைரங்களை அடைந்தார்களா அல்லது நாசர் வென்றாரா என்பதே 'சேட்டை' படத்தில் தேடிக் கண்டு பிடிக்க வேண்டிய கதை.

1980 களில் வெளிவந்த திரைப்படங்களில் அரைத்துத் துவைத்துக் கழுவிக் காய வைத்த கதைதான். அதை புதுமைப்படுத்திய விதம் கூட அவ்வளவு திருப்தியாக அமையவில்லை. ஒன்றுக்கு இரண்டு நாயகிகள் இருந்தும் அவர்களை ஏதோ ஒப்புக்காகப் பயன்படுத்தியிருக்கிறார்கள். அஞ்சலியுடன் காதல் முறிந்த அடுத்த காட்சியிலேயே ஹன்சிகாவின் இதழ்களைக் கடிக்கிறார் ஆர்யா. மொத்தத்தில் காதலையும் கண்களையும் நாறடிக்கிறது சேட்டை.

## ஈழத்தமிழர் ஆதரவு உண்ணாவிரதக் காட்சிகளில்....





# ஸ்கூட்டியும் இறைச்சியும்

ஊருக்கை என்ன நடந்தாலும் நான் போகாமல் விடுகிறதில்லைப் பாருங்கோ.. ஆயிரந்தான் வெளியிடத்தில போய், என்னவாக கௌரவம் கிடைச்சாலும், ஊருக்கை போகேக்கை "வாங்கோ" என்டு வாய் நிறைய சொல்லிக் கூப்பிடேக்கை. அதில ஒரு தனி சுகம் இருக்குப் பாருங்கோ.... ஆயிரந்தான் இருந்தாலும், பிறந்து தவழ்ந்த மண் போல வருமோ?....

இந்த 2013 பிறந்த உடனே. ஊருக்கு முதன் முதல் போகவேண்டி வந்தது ஒரு துக்ககரமான நிகழ்விற்கு... கண்ணை உடைச்ச "ராசா.... தம்பி... வா வந்திட்டீங்கள்" என்று அன்போடும், பரிவோடும் பண்பாகக் கேட்கிற ஒரு மனுசன்.... அந்தவரின் மரணவீடு செத்த வீடு... கடுமையான வருத்தமாக இருக்கேக்கை ஒருக்கால் வந்து பார்க்கேல்லை என்ற மனக்குறை என்ர மனதைத் துளைக்குது தான்... ம்... என்ன செய்யிறது?

மௌனமாக நின்டு அஞ்சலி செலுத்திப்போட்டு வந்தால்... "காரோட ஆக்களோட கதை...." "என்னத்தில வந்தனீங்கள்...?" என்டு ஒரு கேள்வி.. இது என்ன புதுக் கேள்வியாக்கிடக்குது என்டு, வழமை போல "பஸ்ஸிலை தான்... என்ர சயிக்கிளில தான்" என்று பதிலளிக்கப்போட்டு வேர்வையைத் துடைக்க... "ஆ! சயிக்கிளிலயோ?" என்று விசாரித்தவர் விசாரித்துவிட்டு, அவராகவே "அதுவும் நல்லதுதான்... ஒரு எக்ஸசைசாய் இருக்கும்... என்னால இப்ப சயிக்கிள் ஓட ஏலாது.. அதுதான் பிள்ளைகள் ஒரு மோட்டச் சயிக்கிள் எடுத்துத் தந்தவங்கள்... இப்ப அதிலதான் திரியிறது...." என்று என்ர வயித் தெரிச்சலைக் கிளறிற மாதிரி ஒரு விளக்கம்.

நானும் மெள்ள, எதிர்க்கேக்கை நிறைய ஒப்புக்கு ஆறுதல் சொல்லிப்போட்டு, வருவதை வீட்டில கொண்டு போய்க் குடுக்கேக்கை, வன்னியில தொலைச்சுப்போட்டு வந்த மோட்டச் சயிக்கிளுக்குப் பதிலாக ஒரு மோட்டச் சயிக்கிள், கடனில ஒரு 'செக்கண்காண்ட் பைக்' என்டாலும் வாங்கித் தருங்கள் என்று பார்த்தன். 'ம்...' கிடைக்கேல்லை... அந்த வயித்தெரிச்சலோடை சயிக்கிள் உழக்கி இங்கவர... இங்கை இப்படி ஒரு கேள்வி....

"வீட்டில ஒரு மோட்டச் சயிக்கிள் எடுக்கச் சொல்லிச் சொல்லிக் காசு தந்தது கள் தான்.. நான்தான் வேணாம் என்டிட்டன்" என்று சொல்லி என்ர முகத்தில் வழிந்த அசடை... சொறி... வியர்வையைத் துடைத்துக் கொண்டேன். அதில ஒரு கதிரையைப் பற்றிக் கொண்டு கொஞ்சம் விலத்தி இருக்க, பக்கத்தில சின்னமாணி அக்கா வந்து இருந்தா... "ஆ.... மருமோன் என்னத்தில வந்தனீங்கள்..."

வழக்கம் போல என்ர பதில் "சயிக்கிளில" என்டன். சின்னமாணி அக்கா, "சயிக்கிளிலயோ..? இந்த வெய்யிலுக்குள்ளால? ஒரு மோட்டச் சயிக்கிள்ள வாறது... இல்லாட்டில் ஒரு ஓட்டோ பிடிச்சு வாறது... இந்தக் கொழுத்துற வெய்யிலுக்குள்ளால சயிக்கிளிலயோ வாறது? என்டு கேட்டா. "போன கிழமைதான் எங்கடை மூத்தவனுக்கு ஒரு 'பல்சர்' எடுத்துக் குடுத்தனாங்கள்.... நான் தகப்பன் எங்கையெண்டாலும் போறதெண்டால் அதில கொண்டு போய் விடுவான்.... இப்ப 'பல்சர்' விலை கூடிப்போட்டுதாம் எல்லே" என்று தன் பல்லைக் காட்டினா சின்னமாணி அக்கா. "வாறன் மருமோன். நேரம் போயிட்டுது" என்று புறப்பட்டா சின்னமாணி அக்கா. அவ எங்களை மாதிரி முறையானவ என்றாலும், சின்னனிலை தொட்டுச் சின்னமாணி அக்கா, 'சின்னமாணி அக்கா' என்டுதான் நாங்கள் சொல்லுறனாங்கள். அவ அங்காலை போய் ஆரோடை போயோ கதைச்சுக் கொண்டு நிக்கிறது, அந்த செத்த வீட்டு அழுகைக் குரலுக்குள்ளாலையும் தெளிவாகக் கேட்டுது.. அவையிட்டையும் "என்னத்தில வந்தனீங்கள்... நாங்கள் பல்சரில வந்தனாங்கள்" என்டு சொல்லிக் கொண்டு நிக்கிறது தெளிவாகக் கேட்டுது.

இனி இங்க செத்தவீடு எதற்கும் வாறதெண்டால் ஒரு மோட்டச் சயிக்கிள்ள தான் வரவேணுமெண்டு தீர்மானிச்சுக் கொண்டன்.

ஒரு மாதிரி ஒரு 'பிளசர்' வாங்கியாச்சு.. கையுக்கை 'பிறேக்..' ஏதாவது போட்டால், புத்தகம் வாங்கினால், சீற்றைத் திறந்தால நிறைந்து, தூக்கிவிட்டு, அதுக்கை வைச்சிடலாம். ஒரு பெட்டி மாதிரிக் கணக்கான ஒரு இடம் இருக்குது. முந்தி சயிக்கிளில என்டால் காக்கட்டுக்கை எல்லே இதுகளை வைச்சுக்கொண்டு கான்டில் பிடிச்சு ஓட வேணும். இந்தப் 'பிளசரில' ஒரு வசதி என்னெண்டால், சாமான் வேண்டிப்போட்டு ஓடலாம். ஆராவது பனங்கிழங்கு ஒடியல் தந்தாலும், சீற்றுக்குக் கீழ இருக்கிற பெட்டியில வைச்சுக்கொண்டு வரலாம்.

உப்பிடித்தான் ஒரு நாள் சந்தைக்குப் போயிற்று வரேக்கை... என்னத்துக்குப் போனனான்...ம் பென்சன் எடுக்கப் போயிட்டு வந்தனான். பிளசரில தான். பென்சன் நாளில வீட்டில நான்தானே ராசா. ஒரு ஒன்றரைக் கிலோ 'சிக்கின்' புறொயிலர் கோழி இறைச்சி வாங்கி பிளசர் சீற் பெட்டியுக்கை வைச்சிட்டு, ஒரு கால் போத்தல் வாங்கி கால் சட்டைப் பொக்கற்றுக்குள்ள வைச்சிட்டு நிக்க போன் வந்துது. மனுசி ஏதோ அவசரமா எடுக்க சந்தைக்கு வந்தவவாம். மகனோடை வந்தவ. மகன் அப்பிடியே விட்டிட்டு சிநேகிதனுக்குப் போய்விட்டானாம். தான் கன்னாதிட்டிச் சந்தியடிக் கடைப் பக்கத்தில நிக்கிறவவாம், தன்னையும் என்ர பிளசரில ஏற்றிக்கொண்டு போகச் சொல்லி போன் பண்ணினவா....

அங்க போனால் கன பொருள்கள் வாங்கி 'பாய்க்' கில அடுக்கினபடி என்ர 'வெறிக்கிளைப்' பார்த்துக் கொண்டு நின்றா. நல்ல வேளை மகனோடை வரேக்கை 'ஹெல்மெட்டும்' கொண்டு வந்தவ.

ஏற்றிக் கொண்டு வந்து விட்டிட்டன். சமையல் தடல்புடலா நடந்தது. குசினிக்கை இருந்து கமகம வாசனை. புறொயிலர் பொரிக்கிற மணமும், சத்தமும் ஒரு இதமாக இருந்துது. மெல்லமா பின் பக்கம் போய் காற்சட்டைப் பொக்கற்றுக்குள்ள இருந்த, காலை எடுத்து மடக்... மடக்... ரெண்டு மடக்கில அது காலி. கக்கூசு பிளாற்றுக்கு மேல எறிஞ்சு மெல்லமா எட்டி வைச்சிட்டு வந்தன். சாப்பிடேக்கை "கோழிக்கறி அந்த மாதிரி" என்டு ஒரு சேட்டிபிக்கற்றும் மனுசிக்குக் குடுத்தன். உச்சி குளிர்ந்து போனா. "பார்த்து நல்ல கோழி இறைச்சி வாங்கினதால, கறி நல்லா இருந்தது" என்டு மனுசியும் சொல்லிச்சுது. எனக்குச் சந்தோஷமெண்டா சந்தோஷம்... இப்பத்தான் ஒருக்கா என்ர மனுசி, என்ர சொப்பிங்கைப் பாராட்டியிருக்குது என்டு நினைக்கிறன்.

இப்பிடியே ரெண்டு மூண்டு நாளாய் வெளியில ஒரு இடமும் போகேல்லை இருந்திட்டன். கராஜ் பக்கமாக இருந்து ஒரு நாற்றம் அடிப்பாக்கிச்சுது. கராஜைத் திறந்து பார்த்தால் 'ம்...' ஒரு இழவையும் காணேல்லை. ஆனால், என்னவோ செத்து நாறுற மணம் தொடர்ந்துது... ஏதாவது பிராணி என்ர பிளஸருக்குள்ளை அகப்பட்டு இழுபட்டு வந்து அதுதான் மணக்குதோ என்டு, சேவிஸ் ஸ்ராண்டில விட்டிட்டு சில்லைச் சுத்திப் பார்த்தன்... ம்... ஒன்றும் அகப்படயில்லை... பிளசரை வெளியில கொண்டுவந்து நிற்பாட்டினன். இப்ப கராஜுக்கை மணம் இல்லை. ஆனால், என்ர பிளசரைச் சுற்றி ஒரு மணம்.. சீற்றைத் திறந்து, அந்தப் பெட்டியுக்குள்ள பார்த்தால்... அன்றைக்கு நான் வாங்கின புறொயிலர் அப்பிடியே கிடக்குது... ஒன்று ரெண்டு புழுத்தான் பாய்க்குக்கை நெளிந்து சிரிக்கத் தொடங்கியிருந்து.

மனுசியைக் கூப்பிட்டு "அன்றைக்கு நான் வாங்கிக்கொண்டு வந்த புறொயிலர் சமைக்கவில்லையோ?" என்டு கேட்டன்.... "நீங்கள் புறொயிலர் வாங்கினது என்னத்துக்கு நான் என்ன சாத்திரம் பார்க்கிறதே...?" என்று மனுசி ஏறி விழுந்திச்சுது. "அப்ப அன்றைக்குச் சமைச்ச புறொயிலர்?" என்டு நான் என்ர சந்தேகத்தைக் கேட்டேன். "அதோ... அது நான் அண்ணைக்கடை 'கூப்பன் மாக்கற்றில' வாங்கி வந்த புறொயிலர்... என்ன செய்ய தெரியுமோ?... நீங்கள் வாங்கினதாய் இருந்தால் அப்பிடி நல்லா இருந்திருக்குமோ?.... நான் பார்த்தெல்லே வாங்கிறனான்... அதில இருந்தெண்டாலும் விளங்கியிருக்க வேணும்." ஏதேதோ பொரிந்து தள்ளிக் கொண்டிருந்துது மனுசி... பிளசர் மணக்கிற மணம். நான் இனி அதைக்கழுவிச் சுத்தம் செய்ய வேணும். கடவுளே! ஒரு 15 நாள் வெருற இந்த புறொயிலர்



## 'என்கிட்டே மோதாதே!'



சாதுவான யானைக்கு கூட தன் குட்டிகளுக்கு ஆபத்து என்றால் அந்நியன் போல் ஆக்ரோஷம் வந்துவிடும். பொஸ்வானாவில் உள்ள தேசிய வன விலங்குப் பூங்காவில் யானைக் குட்டி ஒன்றை குதறவந்தன கழுதைப் புலிகள். ஆனாலும் அவற்றினைத் துணிச்சலோடு எதிர்கொண்ட தாய் யானை புகுந்து விளையாடியதில் காயங்களோடு கழுதைப் புலிகள் 'தப்பினோம் பிழைத்தோம்' என்று ஓடிவிட்டன. இந்தக் காட்சியை அமெரிக்கப் படப்பிடிப்பாளர் ஜெயெஸ் மேதா தனது கமராவுக்குள் சிறைப் பிடித்துக் கொண்டார்.





## ஆசீர்வாத முத்தம்

புதிய பாப்பரசராகப் பொறுப்பேற்றிருக்கும் முதலாவது பிரான்சிஸுக்கு குழந்தைகள் என்றால் கொள்ளைப் பிரியம்.

ஆராதனைகளில் கலந்து கொள்ளச் செல்லும்போது கண்ணில் தென்படும் குழந்தைகளை உச்சிமுகர்ந்து முத்தமிட்டு ஆசீர்வதித்து விட்டுத்தான் நகர்வார்.

சென்.பீற்றர்ஸ் சதுக்கத்தில் கடந்த 3ஆம் திகதி வாராந்த ஆராதனைக்காகப் பாப்பரசர் சென்று கொண்டிருந்த போது ஓர் அழகிய ஆண் குழந்தை அவரைப் பார்த்து கையசைத்தது. விடுவாரா பாப்பரசர்? வழக்கம் போல அந்தக் குழந்தைக்கும் முத்தமிட்டு ஆசீர்வாதம் கொடுத்த பின்னே அப்பால் சென்றார்.




நீங்கள் மாட்டு வண்டிச் சவாரி பார்த்திருப்பீர்கள். ஆனால் தீக்கோழிச் சவாரி பற்றி அறிந்திருக்கிறீர்களா?

அமெரிக்காவின் அரிசோனா மாநிலத்தில் வருடம் தோறும் தீக்கோழிச் சவாரி இடம்பெறுகின்றது. அரிசோனா மாநிலத்தின் தனித்துவமான இந்தத் தீக்கோழிச் சவாரியில் பங்குபற்றவும், பார்வையிடவும் இலட்சக்கணக்கானோர் வருவதுண்டு. கடந்த 5 ஆம் திகதி நடைபெற்ற தீக்கோழிச் சவாரியின் சில காட்சிகள்.



## அடேயப்பா!



படத்தில் பார்ப்பது ஏதோ 'ரக்பி' பந்து என்று நினைத்து விடாதீர்கள். உண்மையில் இது ஒரு முட்டை. அதுவும் 17 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பறவை ஒன்றின் முட்டையே இது. இந்த இராட்சத முட்டையை அண்மையில் கண்டுபிடித்துள்ள ஆய்வாளர்கள் அது குறித்து ஆராய்ச்சிகளைத் தீவிரப் படுத்தியுள்ளனர்.



## மிச்சேல் விவசாயி?

ஆனானப்பட்ட அரசனின் மனைவியாக இருந்தாலும் கூட குடும்பத்தைக் கவனிப்பது பெண்களின் பொறுப்பு. இதற்கு அமெரிக்க அதிபரின் மனைவி மிச்சேல் ஒபாமாவும் விதிவிலக்கல்லவே.

குடும்பப் பொறுப்புக்களை தலையில் சுமக்கும் உலக வல்லரசு அதிபரின் மனைவிக்கு வீட்டுத் தோட்டத்திலும் நாட்டம் அதிகம்.

மாலை நேரங்களில் தனது பிள்ளைகளுடன் வெள்ளை மாளிகையில் சமையற் கூடத்துக்கு அருகே உள்ள வளாகத்தில் விதவிதமாக காய்கறிகளை வளர்த்து வருகிறார் மிச்சேல். இந்தத் தோட்டத்தைப் பார்க்க அவரின் பிள்ளைகளின் பள்ளித் தோழர்களும் அடிக்கடி வரத்தொடங்கியுள்ளார்களாம்.

# அடக்கமுடியாப் பூதம்!

● நீலன்



**"நகத்தால் கிள்ளி எறிய வேண்டிய பொதுபலசேனாவைக் கோடரியால் வெட்ட வேண்டிய நிலைக்கு அரசு கொண்டு வந்துள்ளது. இருப்பினும் இந்த அமைப்பை அரசு தடை செய்யாது ஏனெனில் இந்த அமைப்பை ஆரம்பித்து வைத்தது அரசு தானே"**

இலங்கையில் வாழும் சிறுபான்மையினர் மதங்களை இலக்கு வைத்து பௌத்த கடும் போக்குச் சக்திகளால் முன்னெடுக்கப்பட்டு வரும் செயற்பாடுகள் எல்லைமீறிச் சென்று கொண்டிருக்கின்றன. இது கவலைக்குரியதொரு நாட்டின் ஒருமைப்பாட்டுக்கும் கேடு விளைவிக்கக் கூடியது.

பொதுபலசேனா, சிஹல ராவய போன்ற கடும் போக்கு அமைப்புக்கள் "இலங்கை ஒரு பௌத்த நாடு" இங்கு பௌத்த மதமும் பௌத்த கலாசாரமும் மாத்திரமே பின்பற்றப்பட வேண்டும்" என்று தொடர்ச்சியாகப் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றன.

முன்னைய போதும் இவ்வாறான சிங்கள மக்கள் இக்கடும் போக்கு அமைப்புக்களின் தவறான வழிகாட்டல்களின் பின்னால் அள்ளுண்டு செல்லத் தொடங்கியிருக்கின்றனர். இதன் விளைவாகவே நாட்டில் சிறுபான்மையின தமிழ், முஸ்லிம் மக்களின் மதத் தலங்கள் தாக்குதல்களுக்குள்ளாகி வருகின்றன.

2011 ஆம் ஆண்டு அநுராதபுரத்தில் உள்ள பல நூற்றாண்டுகள் பழமை வாய்ந்த தர்கா ஒன்று பௌத்தர்களின் முன்னிலையில் தகர்க்கப்பட்டது. கடந்த வருடம் தம்புள்ள பள்ளிவாசல் பௌத்த பிக்குகளின் தலைமையிலான குழுவினரால் தாக்கப்பட்டது.

அதன் தொடராக இவ்வருடம் மாத்திரம் 50க்கும் மேற்பட்ட முஸ்லிம்களின் மத மற்றும் கலாசார விடயங்களை இலக்கு வைத்துத் தாக்குதல்கள் நடந்தேறிவிட்டன.

இஸ்லாமிய சமூகம் மாத்திரமன்றி கிறிஸ்தவ சமயமும் பௌத்த கடும்போக்குச் சக்திகளின் புதிய இலக்காக உருவெடுத்துள்ளதை அண்மைக்காலமாக அவதானிக்க முடிகிறது. கடந்த சில வாரங்களுக்கு முன்னால் கண்டியில் இடம்பெற்ற கூட்டமொன்றில் உரையாற்றிய போது பொதுபலசேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் "எமது அமைப்பின் அடுத்த இலக்கு இந்த நாட்டில் இயங்கிவரும் கிறிஸ்தவ நிறுவனங்களே என்று குறிப்பிட்டிருந்தார்.

மன்னார் சாவற்கட்டு புனித அந்தோனியார் சொரூபம் வைக்கப்பட்டிருந்த கண்ணாடிப்பேழை கடந்த மாதம் 21 ஆம் திகதி நள்ளிரவு இனந்தெரியாத விஷமிகளால் தாக்குதலுக்குள்ளாகியது. மனித மலமும் வீசப்பட்டு ஆலயத்தின் புனிதமும் களங்கப்படுத்தப்பட்டது. அதேபோன்று சில வாரங்களுக்கு முன்னர் அம்பாந்தோட்டை நகரில் கிறிஸ்தவ மத போதகர் ஒருவரின் இல்லத்தைச் சுற்றி வளைத்த பௌத்த பிக்குகள் தலைமையிலான குழுவினர் குறித்த மதபோதகரை அங்கிருந்து வெளியேறுமாறும் வழிபாடுகளில் ஈடுபடக் கூடாதெனவும் அச்சுறுத்தல் விடுத்திருந்தனர்.

இவ்வாறு கடந்த ஒரு வருட காலத்திற்குள் மாத்திரம் 12க்கும் மேற்பட்ட கிறிஸ்தவ வணக்கஸ்தலங்கள் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தினால் வெளியிடப்பட்டுள்ள புதிய அறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்தவாரம் கொழும்பு நிப்பொன் ஹோட்டலில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பொன்றின் போது ஏகாதிபத்திய எதிர்ப்பு மக்கள் இயக்கத்தின் ஏற்பாட்டாளரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான தம்பர அமில தேரர் உரையாற்றுகையில் "சிங்கள பௌத்த மக்களின் வாக்கு வங்கிகளைத் தக்க வைத்து நாட்டின் ஆட்சியைத் தொடர்வதற்காக ஜனாதிபதியால் ஏவிவிடப்பட்ட அடிப்படைவாதக் குழுவே பொதுபலசேனா. இப்போது அது தனது தலைமைத்துவத்தின் கட்டளையை மீறிச் செயற்படுகின்றது.

நாட்டிலுள்ள சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களிடையே மோதலினை ஏற்படுத்தும் 2 ஆம் அத்தியாயம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த அடிப்படைவாதக் கொள்கை நடவடிக்கையைத்தான் பொதுபலசேனா மேற்கொண்டு வருகின்றது. நகத்தால் கிள்ளி எறிய வேண்டிய பொதுபலசேனாவைக் கோடரியால் வெட்ட வேண்டிய நிலைக்கு அரசு கொண்டு வந்துள்ளது. இருப்பினும் இந்த அமைப்பை அரசு தடை செய்யாது ஏனெனில் இந்த அமைப்பை ஆரம்பித்து வைத்தது அரசு தானே!" என்று கூறியிருந்தமை கவனத்திற் கொள்ளப்படத்தக்க ஒன்று.

நாட்டில் சட்டம் ஒழுங்கு ஜனநாயகம் போன்றவற்றை மதிக்காது சீருடை அணியாத பொலிஸ்காரர்களாகச் செயற்பட்டுவரும் பொதுபலசேனா அமைப்பை உடனடியாகத் தடை செய்து நாட்டின் சாந்தத்தையும் சமூக நீதியையும் நிலை நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமெனப் பிரிட்டனில் உள்ள சிறீலங்கா முஸ்லிம் புலம்பெயர்ந்தோர் அமைப்பு இலங்கை அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

"சிறீலங்கா முஸ்லிம் காங்கிரசின் மறைந்த தலைவரான எம். எச். எம். அஷ்ரப் ஒரு சமயம் இரண்டு கொள்கலன்களில் ஆயுதங்களை இரகசியமாக அம்பாறைக்கு கொண்டுவந்தார் என்று" பொதுபலசேனாவின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் பாணந்துறையில் இடம்பெற்ற பொதுக்கூட்டமொன்றில் பகிரங்கமாகத் தெரிவித்திருந்தார். பொதுபலசேனா அமைப்பின் முஸ்லிம் எதிர்ப்பு நடவடிக்கைகள் குறித்து [illegible] இப்போது புதிய [illegible] "இந்தப் பொய்யான [illegible] இலங்கை வாழ் முஸ்லிம்களின் [illegible] தலைவராகத் திகழ்ந்த [illegible] அவமதிக்கும் செயல்" என்று [illegible] முறையாக வந்து கொண்டுள்ளன.

பொதுபலசேனாவைத் தடை செய்வதற்கு இலங்கை அரசு [illegible] அழுத்தம் கொடுக்குமாறு [illegible] நாட்டில் [illegible] இலங்கைக்கான தூதுவர்களைச் சந்தித்து வேண்டுகோள் [illegible] முஸ்லிம் உரிமைக்கான அமைப்பு கேட்டிருக்கின்றது. இதேவேளை பொதுபலசேனா [illegible] முதல் இதுவரை அந்த அமைப்பு முஸ்லிம்களுக்கு எதிராக [illegible] சம்பவங்கள் அனைத்தையும் [illegible] பட்டியலையும் அந்த [illegible] ஒப்படைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பொதுபலசேனா [illegible] முழுக் கதவடைப்பு [illegible] ஆம் திகதி [illegible] வெற்றிகரமாக அனுஷ்டிக்க முஸ்லிம் உரிமைகளுக்கான அமைப்பு [illegible] கொழும்பில் [illegible] ஒன்றையும் நடத்த முடிவு செய்துள்ளது.


இந்துக் கோவில்களை இலக்கு வைத்தும் [illegible] மக்கள் செறிந்து வாழும் [illegible] பௌத்த ஆலயங்களை நிறுவுவதற்கும் [illegible] வரும் முயற்சிகளும் இந்தக் காலத்தில் [illegible] வேண்டியவையாகும்.

[illegible] சிங்கள மக்களைக் குடியேற்றுவதும் பௌத்த கலாசாரங்களை உட்புகுத்துவதும் [illegible] வாழும் தமிழ் மக்களைப் [illegible] விசனத்திற்குள்ளாக்கியுள்ளன.

நாட்டில் சிறுபான்மை மக்களையும், அவர்கள் பின்பற்றும் மதங்களையும் இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்டு வரும் தாக்குதல்களும் [illegible] பிரசாரங்களும் அதிகரித்துச் செல்கின்ற போதிலும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் [illegible] இக்கடும் போக்கு சக்திகளுக்கு [illegible] உற்சாகத்தைக் கொடுத்து வருகின்றது.

# ஆரம்பிக்குமா அணு யுத்தம்?

■ ஸாஹர்



கொரியத் தீபகற்பத்தில் யுத்தப் பதற்றம் அதிகரித்துள்ள நிலையில், அணுவாயுதயுத்தம் ஒன்று ஆரம்பமாகுமா? என்பதே இப்போது உலக அரசியல் ஆய்வாளர்களிடையே எழுந்துள்ள வினாவாகவுள்ளது. உலகில் போர் யுத்தத்தின் போது அணுவாயுதம் பயன்படுத்தப்பட்ட நிகழ்வு ஒரு முறை மட்டுமே நிகழ்ந்துள்ளது.

இரண்டாம் உலகமகா யுத்தத்தின் போது ஜப்பானின் ஹிரோஷிமா, நாகசாகியென்ற இரு நகரங்கள் மீதும் அமெரிக்கா அணுகுண்டுத் தாக்குதல் நடத்தியிருந்தது. இதனால் பாரிய உயிர் மற்றும் பொருட் சேதம் விளைந்தது. இன்றுவரை அந்த இரு நகரங்களும் வாண்ட பிரதேசங்களாகவும் கடைக்கப்படாத பிரதேசங்களாக காட்சி தருகின்றன. இந்தச் சம்பவம் ஏனைய போருக்குத் தடையாக அமைய இரண்டாம் உலகயுத்தமும் முடிவுக்கு வந்தது.

இதன் பின்னர் மனுக்குலத்தின் மீது இவ்வாறான கொடூரத் தாக்குதல் மீண்டும் தொடுக்கப்படக் கூடாது என்பதற்காக நாடுகள் ஒன்று சேர்ந்து ஐக்கிய நாடுகள் சபையை ஸ்தாபித்தன. இதன் மூலம் அணு ஆயுதப் பாவனையில் நாடுகளுக்குக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. இருந்தும் குறிப்பாக அமெரிக்கா தன்னை தவிர வேறு எவரிடமும் அணு ஆயுதங்கள் இருக்கக் கூடாது என்பதில் அவதானமாக உள்ளது. உலகில் எந்தெந்த நாடுகள் அணுப்பரிசோதனையை மேற்கொள்கின்றன என்பதில் அமெரிக்கா தீவிரகவனம் செலுத்தி வருவதுடன், அந்த நாடுகளுக்கெதிராக கண்டனக் குரல் எழுப்பியும் வருகின்றது.

**புதியதலைமைத்துவமும் அணுச் சோதனையும்**

வடகொரியாவின் தலைவர் கிம் ஜொங் இல் மரணமானதைத் தொடர்ந்து 30 வயதிலும் குறைந்த அவரதுமகன் கிம் ஜொங் உன் புதிய தலைவராக தேர்வு செய்யப்பட்டார். இதன்பிறகு வடகொரியாவில் மீண்டும் அணு ஆயுதச் சோதனைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. இவர் தன்று பயமறியாது என்பதற்கு எடுத்துக்காட்டாக இவர் அமெரிக்க எதிர்ப்புக் கொள்கைகளிலும் தீவிரமாய்ச் செயற்பட்டு வருகின்றார்.

இந்நிலையில் கடந்த பெப்ரவரி 12 ம் திகதி வடகொரியா தனது மூன்றாவது அணுவாயுதப் பரிசோதனையை மேற்கொண்டதிலிருந்து கொரியவலயத்தில் பதற்றநிலை அதிகரித்துள்ளது. இதனால் அமெரிக்க ஆதரவுடன் ஐ.நா சபையிலே வடகொரியாவிற்கு பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டிருந்தது. இதனைத் தொடர்ந்தும் வடகொரியா தனது செயற்பாடுகளை தீவிரமாக முன்னெடுத்து வருகின்றது. இன்னொரு கொரிய யுத்தத்தை வடகொரியா தொடுக்கும் அபாயம் உள்ளதால், தென் கொரியாவுடனான தனது உறவைப் பலப்படுத்தும் செயற்பாடுகளில் அமெரிக்கா இறங்கியுள்ளது.

தென்கொரிய சமுத்திரத்தில் அமெரிக்காவுடன் கூட்டு இராணுவத் திட்டத்தில் கைச்சாத்திட்டுள்ளது. இத்திட்டம் மூலம் வடகொரியாவில் இருந்து மேற்கொள்ளப்படக் கூடிய மட்டுப்படுத்தப்பட்ட சிறிய தாக்குதல்களைக் கூட இவ்விரு நாடுகளும் இணைந்து சமாளிக்கத் தயாராகவுள்ளன என்று கூறப்படுகின்றது. தற்போது தென்கொரியாவில் 28,000 அமெரிக்கப்படைகள் வரை முகாமிட்டு இருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. அமெரிக்க போர்க் கப்பல்களும் கொரிய கடற்பரப்பிலே நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் வடகொரியாவுக்கு எதிரான போரில் தம்முடன் கைகோர்க்கும்படி சீனாவுக்கும், ரஷ்யாவுக்கும் அமெரிக்கா மறைமுக அழைப்பு விடுத்துள்ளது. இதனை உறுதிசெய்யும் முகமாக இரு நாட்டின் அரசியல் தலைவர்களும் கருத்து வெளியிட்டுள்ளனர். வடகொரியாவின்; பாணியிலான வார்த்தைகளையும் செயற்பாடுகளையும் சீனாகடுமையாக எதிர்ப்பதாகவும் வடகொரியாவில் உள்ள எந்தத் தரப்பாக இருந்தாலும் இது கண்டிக்கத்தக்கது என்றும் தனது நாட்டின் மக்களைப் பாதிக்கக் கூடிய எந்த ஒருதகராறையும் தவிர்க்க சீனாமுழுமையாகச் செயற்படும் என்றும் தெரிவித்திருந்தார். இதேவேளை கொரியவலயத்தில் போர்ப் பதற்றத்தைத் தணித்து நிலைமையை சாதாரண நிலைக்குக் கொண்டுவர ரஷ்யா அழுத்தம் தெரிவிக்கும் என அந்நாட்டின் வெளியுறவுத் துறைஅமைச்சர் செர்கெய் லவ்ரோவ் உம் செவ்வாய்க்கிழமை ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார்.

**எதையும் கண்டுகொள்ளாத வடகொரியா**

இவை எதைப்பற்றியும் கவலைப்படாமல் வடகொரியா தன்பாட்டிற்கு செயற்பட்டு வருகின்றது. கடந்த மாத இறுதியில் தனது பலத்தை உலகத்திற்கு வெளிப்படுத்தும் வகையில் வடகொரியா பாரிய இராணுவ அணிவகுப்பொன்றை நடத்தியது. சனிக்கிழமை வடகொரியா விடுத்த அறிக்கையில், இன்றிலிருந்து, நாடுநாட்டின் உறவுமுறையுத்த தேசங்களுக்குரிய நிலைப்பாட்டுக்கு (State of War) மாற்றமடைகிறது. இனிமேல் தென் கொரியாவுடனும், அதன் நட்பு நாடுகளுடனுமான எந்தவொரு நடவடிக்கையும் இந்த யுத்தநிலைப்பாட்டின் கீழ் எடுக்கப்படும் என்று யுத்த அறிவிப்பையும் வடகொரியா விடுத்துள்ளது. அத்துடன் தனது நாட்டிலுள்ள வெளிநாட்டுத் தூதுவர்களை வெளியேறும் படியும் வடகொரியா கோரிக்கை விடுத்துள்ளது.

இவ்வாறு அடுக்கடுக்காக வடகொரியா போர் முழக்கமிட்டு வருவதன் உள்நோக்கம் என்ன என்பதை அறியமுடியாது இருக்கின்றது. சில வேளைகளில் வடகொரியா யுத்தத்தின் போது அணு ஆயுதங்களை பயன்படுத்தலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன் உலகில் அணுவாயுதப் பரிசோதனை மற்றும் யுத்தம் காரணமாக பொருளாதாரத் தடை விதிக்கப்பட்ட சிரியா, ஈரான் மற்றும் வடகொரியா ஆகிய நாடுகள் தமக்கிடையே ஐ.நா இன் ஆயுதக் கட்டுப்பாட்டு விதிமுறைகளை மீறி ஆயுதப் பரிமாற்ற ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளதாகப் பரபரப்புச் செய்தி வெளியாகியுள்ளது.

இந்த மூன்றுநாடுகளும் உலகின் வெவ்வேறு பகுதிகளில் இருந்து அமெரிக்காவிற்கு அச்சுறுத்தலை கொடுக்கும் போது அமெரிக்கா நிலைகுலையும் வாய்ப்பும் உள்ளது. எனவே அமெரிக்காவிற்கு எதிராக வடகொரியா வெளிப்படையாகச் செயற்படத் தொடங்கியிருப்பது உலகம் மற்றுமொரு யுத்தத்தை நோக்கி நகர்வதைப் போன்று காட்டுகின்றது.

## தோள்பட்டை நோவுக்கு காரணம் இதயநோயா?



**ஆர். சுதர்சன், பூநகரி.**

**கேள்வி :** எனக்கு வயது 42. ஆண். அடிக்கடி தோள்பட்டை வலி இடது புறத்தில் வருகிறது. Gastritis என சிகிச்சை செய்தும் அவ்வப்போது கடும் வேலை செய்தால் ஏற்படுகிறது. இது இருதய வியாதியாக இருக்கலாமென சந்தேகம் இருப்பதாக மருத்துவர் கூறினார். இருதய நோய் தோள்பட்டைக்கு வரலாமா?

**பதில்:** இருதய நோய்கள் அதில் பிரதானமாக மாரடைப்பு (Heart Attack) நெஞ்சு நோவாக மட்டுமேவெளிக்காட்டப்படும் என பலர் நம்புகின்றனர். ஆனால், சிலரில் இடது கை, தோள்ப்பட்டை என்பன மட்டுமேவலிக்கும் . இது நோயாளி வைத்தியர் இரு தரப்பையும் ஏமாற்றும் மாரடைப்பு வியாதியாகும். நெஞ்சு வலி இல்லை எனில் மார டைப்பு கிடையாது என அடித்துச் சொல்ல முடியாது. மாரடைப்பு பல்வேறு குணங் குறிகளைக் காட்டக் கூடும். முக்கியமாக இடது கை, தோள் போன்ற பகுதிகளில் இருக்கும் வலி கவனிக்கப் பட வேண்டும். அதுவும் வேலை செய்யும்போது மட்டும் வருகிறது. நீண்ட நாள் தொடர்ந்து இருக்கின்ற தாயின், கொலஸ்திரோல் முதலிய கொழுப்புக்கள் இரத்தத்தில் அளவுக்கு மிஞ்சி உள்ளதாயின் இன்னும் அவதானமாக இருப்பது அவசியம். (E.C.G. Electrocardiogram) பரிசோதனை மட்டும் போதாது. அதில் பிரச்சினை எதுவுமில்லை என்றாலும் Exercise E.C.G Echocardiogram முதலிய பரிசோதனைகள் செய்யப்படுவது சிறந்தது. சாதாரண (E.C.G) பரிசோதனை செலவு குறைந்த முதல்படி. ஆனால் அத்துடன் மட்டும் நின்றுவிட முடியாது. அதுவும் வலி உள்ளவர்களுக்குத் தொடர்ந்து உள்ளதாயின் இரத்தப் பரிசோதனை அவசியம். மாரடைப்பு உயிரிழப்பிற்கு முதலிடத்தில் உள்ளது. எனவே நாம் உயிருடன் விளையாட முடியாது.

நீங்கள் உங்கள் கொலஸ்திரோல் (Triglyceride) ஆகிய கொழுப்பு வகைகள் அதிகரித்துள்ளதா? அது பரிசோதிக்கப்பட்டதா? என்பதையும் புகைப்பவரா? என்பதையும் கூற வில்லை. 12 மணித்தியாலயம் பட்டினி இருந்து இவற்றைப் பரிசோதிக்கலாம். கொலஸ்திரோலை விட இதயத்திற்கு பாதிப்புத் தரும் மாரடைப்பை ஏற்படுத்துவதில் (Triglyceride) என்ற கொழுப்பு வகையே முதலிடத்தை வகிக்கிறது.

**டொக்டர். எஸ்.சுரேந்திரஜித்**

இது 150Mg என்ற மட்டத்தை தாண்டினால் மாரடைப்பு உள்ளதெனக் கருத வேண்டும். இவற்றை பரிசோதித்து உங்களுக்கு ஆபத்து உண்டாயின் சிகிச்சை உடனே அவசியமாகும். இதயத்தி லுள்ள வலி இவ்வாறு ஆச்சரியப்படத் தக்க விதமாக தோள்ப் பட்டை, கை, என பரவுகிறது. இது மருத்துவத்தில் இடமாறிய வலி (Referred Pain) என அழைக்கப் படும். இருதய நோய் சிகிச்சை நிபுணர் மூலம் நீங்கள் மேலதிக ஆலோசனைகளையும் சிகிச்சையும் பெறலாம். புகைப்பவராயின் உடன் அதை நிறுத்த வும்.

மாரடைப்பு தவிர தசை, எலும்பு, நோவுகளாகக் கூட இவை இருக் கலாம். எனினும் உடலில் மூளை, இதயம், சுவாசப்பை ஆகியன முக்கிய உறுப்புக்களுக்கு இரத்தம் போதாமையினால் உயிரிழப்பு மிக விரைவில் நிகழும். மாறாக குடல் முதலிய பகுதிகள் செயலிழந்தால் ஊசி மூலம் ஊட்டச் சத்துக்களை ஏற்றியாவது உயிரைப் பிடித்து வைத்திருக்க முடியும். சிறுநீரக செயலிழப்பு கூட திடிரென நிகழ் வதை விட வருடக்கணக்காக மெதுமெதுவாக நடப்பதே அதிகம். இதற்காக இந்த உறுப்புக்கள் தேவையற்றன என அர்த்தமல்ல. இவையும் உயிர் வாழ அவசியமே!

# மௌன மனவெளிகள்

● நா. யோகேந்திரநாதன்

69



சீதேவிப்பாட்டியின் வார்த்தைகள் இளையவனின் மனதை சாட்டையாய்க் குத்திவிட்டன என்பதைச் சொர்ணம் புரிந்து கொண்டாள். அவள் கோபத்தின் உச்சிக்கே போய்விட்டாள்.

"என்ன கதையனை நீ இப்ப கதைச்சனீ?"

"ஏன்? இப்ப நான் என்ன சொல்லிப்போட்டன்?"

"அவன் மனுஷன் தானே உன்ர கதையில அவன்ர மனம் என்ன பாடுபட்டிருக்கும் தெரியுமோ?"

கிழவி சில விநாடிகள் மௌனத்தின் பின் "அவன் ஒண்டும் நினையான். அவனிலை நான் எவ்வளவு பாசம் வைச்சிருக்கிறன் என்று அவனுக்கு விளங்கும்" என்றாள்.

"ஒண்டும் நினையாமலே நீனா இடத்தை விட்டு மூச்சுப் பேச்சில்லாமல் விட்டிட்டுப் போனவன்?"

கிழவிக்கு இப்போ தன் வார்த்தைகளின் தாக்கம் புரிய ஆரம்பித்தது.

"வாடி போய் அவனிட்ட உன்னையெண்டு சொல்லேல்லையாம் ஏதோ வாயில் வந்தாற்போல் சொல்லியிட்டனாம் எண்டு சொல்லிப்போட்டு வாடி."

"நீ போய்ச் சொல்லு!"

"போய்ச் சொல்லெண்ணுறன்... பெரிய விண்ணாணம் கொட்டுகிறாய்?"

"நீ வந்தும் இதைப் பிசகாய் சொல்லுறது. பிறகு நான் போய் அவனைக் கெஞ்சிறது" என்று முணுமுணுத்தவாறே படலையை நோக்கிப் போனாள் சொர்ணம்.

படலையில ஏற ஆயத்தமாகிக் கொண்டிருந்த இளையவனின் அருகில் போன சொர்ணம் "என்ன ஆச்சியின்ர கதையில கோபம் வந்திட்டுது போலை" என்றாள்.

எங்கோ வானவெளியைப் பார்த்தவாறே "அப்படி ஒன்றுமில்லை. உங்களை விரும்பிற முட்டாள்தனத்தைச் செய்யிறதுக்காகத் தான் கவலைப்படுறன்."

"அது முட்டாள்தனமில்லை?"

"காதல்.. எல்லா எதிர்ப்பையும் உடைத்தெறிந்த கலியாணத்திலை முடியவேணும் காதல்" சொர்ணத்தின் குரலில் உருக்குப் போன்ற உறுதி தொனித்தது.

"இப்பிடிக் கதைக்கிற ஆச்சி..." என்று விட்டு இடை நிறுத்தினான் அவன்.

"என்னைப்பற்றி முடிவெடுக்கிறது நான் பாட்டியில்லை. ஐயாவுமில்லை" என சொல்லிய போது அவள் கண்களில் நெருப்பு எரிந்தது.

அவள் தொடர்ந்தாள் "நான் படிப்பன் உன்னை நினைச்சு உனக்காகவே படிப்பன்" இரண்டு வருஷத்தில நான் கட்டாயம் மருத்துவப் படிப்புக்கு எடுபடுவன். பிறகு கொழும்பு யூனிவர்சிற்றியில் ஐந்து வருஷம் மருத்துவப் படிப்பு. அதுக்குப்பிறகு நான் மருத்துவர். சுதந்திரமாக உன்னை அங்கேயே கூப்பிட்டுக் கலியாணம் செய்வேன். நாங்கள் அங்கேயே இருப்பம். இது சத்தியம்"

ஒரு சொல்லிய தயக்கத்துடன் "நடக்குமோ?" என இளையவன் கேட்டான்.

"எட்டு வருஷங்களில காலம் எவ்வளவோ மாறியிடும். எதிர்ப்பு இருக்கத்தான் செய்யும். ஆனால். இப்ப மாதிரி இராது... அதாலை நடக்கும்.. நடக்கும்.. நடக்கும்.." எனச் சொல்லி விட்டு சொர்ணம் வீட்டை நோக்கி நடந்தாள்.

அவள் குளிக்காமலே வீட்டிற்குள் புகுந்து உடுப்பு மாற்றினாள். ஏனோ கிழவியும் எதுவும் சொல்லவில்லை.

அடுத்த நாள் காலையில் சிவஞானம் கமலி வீட்டுக்குப் போயிருந்தான். அவளில் ஒரு புதிய பொலிவும். மென்மையும் இளையோடுவதாகவே அவனுக்குத் தோன்றியது.

சிறிது நேரம் பாடசாலையைப் பற்றியும் படிப்பைப்பற்றியும் விசாரித்த அவன் "நீங்கள் படிக்கிறது எனக்கு வலு சந்தோஷம். என்றாலும் உள்ளூர ஒரு பயமும் இருக்குது" என்றான்.

"கமலி வியப்புடன் பயமோ... என்னது?" எனக்கேட்டாள்.

"இல்லை. காலப்போக்கில் நீங்களும் ஒரு கன்னியாஸ்திரியாய் மாறி விடுவியளோ எண்டு..." என இழுத்தாள் அவள்.

அவள் கலகலவெனச் சிரித்தாள்.

"நான் காதலிச்சது... கலியாணம் கட்டினது... படிக்கிறது எல்லாமே வாழ்க்கையை அனுபவிக்கத்தான். அவையின்ர புனிதம். கருணை. ஒழுக்கம் எல்லாத்தையும் உயர்வாய் மதிக்கிறன். அவ்வளவுதான்"

சிவஞானத்திடமிருந்து ஒரு நீண்ட நிம்மதிப் பெருமூச்சு வெளிப்பட்டது. அவன் மேலும். தொடர்ந்தான்.

"நீங்கள் என்னிலை வைச்சிருக்கிற அன்பு. அக்கறை. ஏன் காதல் எண்டு கூடச் சொல்லலாம். அதை நான் உணர்கிறேன். காதலின்ரை தவிப்பையும். தாகத்தையும் நான் அனுபவிச்சவன். உங்கடை அன்பை நிராகரிக்கிற அளவுக்கு நான் ஒரு மரப்பிறப்பில்லை... ஆனால்...!"

"ஆனால் ...! சிங்கனை நிறைச்சு வைச்சிருக்கிற நெஞ்சிலே இன்னொருத்தரை எப்படி ஏற்க முடியும்?" சிவஞானம் எதுவுமே பேசாது அமைதிகாத்தான். அவள் மீண்டும் பேச ஆரம்பித்தாள்.

"ஒரு பெண்ணின்ரை அன்புக்கான ஏக்கம். உடல் உணர்வுகளின்ரை தாகம் எல்லாமே எனக்கும் இருக்கு. ஆனால். சின்னன் மாமியைப் போல் புருஷன் இல்லாமல் பிள்ளை பெற என்னால் முடியாது" சிவஞானம் அவசரப்பட்டுக் குறுக்கிட்டான்.

"ஐயையோ அப்படி ஒரு நாளும் உங்களை நான் எதிர்பார்க்கவில்லை"

"அது எனக்குத் தெரியும்... நீங்கள் அப்படியானவரில்லை" என்றாள் கமலி.

"நான் சிங்கன் இருக்கிற நெஞ்சிலை ஒரு மூலையில எனக்கும் சிறு இடம் தரச்சொல்லித்தான் கேட்கிறன்"

அவள் தலையைக் குனிந்தவாறு சொன்னாள்.

"அது இப்பவும் இருக்கு.... ஆனால். அது காதலாய் மாறுமோ இல்லையோவெண்டு தான் என்னாலை முடிவெடுக்க முடியேல்லை"

"மாறும் வரை நான் காத்திருக்கத் தயார்"

கமலி நிமிர்ந்து சிவஞானத்தின் முகத்தை வாஞ்சையுடன் நோக்கினாள்.

பின்பு. "நான் ஒரு விதவை. என்னை வேட்டையாட நாயள் கலைக்கும் என்று எனக்குத் தெரியும். எனக்கு நிச்சயமாய் ஒரு வேலி தேவை என்று நான் முடிவெடுக்கேக்கை அது நீங்களாய்த் தான் இருக்கும்."

"ஆனால். நான் படிப்பிக்க வேணும்... ஒரு ரீச்சராய் வரவேணும். எங்கடை சமூகத்தை முன்னேற்ற வேண்டும்... அது தான் என்ர ஒரே இலட்சியம்" எனச் சொல்லி முடித்தாள். சிவஞானம் உணர்ச்சி வசப்பட்டு விட்டான்.

"கமலி நீங்கள் விதவையில்லை. நானும் சிவஞானமில்லை. சிங்கன்... சிங்கன்..."

"ஓம்... ஓம்... எனக்கு சிங்கன்... சிங்கன்... தான்! ஆனால். இப்ப இல்லை..."

"அப்ப எப்ப...?"

"நான் ரீச்சரான பிறகு..."

"ஓ...! அது வரையும் நல்ல நண்பர்களாயிருப்பம்"

"நிச்சயமாக" என்று விட்டுக் குனிந்து சிவஞானத்தின் நெற்றியில் முத்தமிட்டாள் கமலி.

அந்த முத்தம் அவள் அவனில் கொண்ட ஆழ்ந்த அன்பைத் தன் உடல் முழுவதும் பரவ விடுவதையும் சிவஞானம் உணர்ந்தான்.

(முற்றும்)

**அன்புக்குரிய வாசகர்களுக்கு!**


கடந்த 69 வாரங்களாக நீங்கள் எங்கள் ஆக்கங்களில் ஒன்றி எங்களுடன் உறவாடினீர்கள். எங்கள் சந்தோஷம் கண்டு சிரித்தீர்கள். சோகம் கண்டு கவலைப்பட்டீர்கள். துணிவு கண்டு வியப்படைந்தீர்கள். எங்கள் காதல் வெறும் மன உணர்வுகளின் வடிகால் என்ற எல்லைக்குள் அடங்கி விடவில்லை. சமூகத்தில் புரையோடிப்போன கொடுமைகளுக்கு எதிரான போராட்டமாகவும் விரிந்தது. இக் கதை இடம்பெறும் காலம் சாதியமைப்பு சற்றும் தளராத நாள்கள். அந்த நாள்களின் தகிப்பினூடே நாம் வளர்ந்தோம். நாம் நிச்சயம் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கையுடன் எங்கள் பயணத்தைத் தொடர்கிறோம்.

மீண்டும் சந்தர்ப்பம் கிடைத்தால் ''மௌனம் கலைந்த மனவெளிகளில் சந்திப்போம்'' எனக்கூறி விடைபெறுகிறோம்.

இப்படிக்கு
இ.சொர்ணவதி
இ.கமலி.

# சீன நீர்மூழ்கிகள்: மர்மம் என்ன?

● ஹரன்



உலகின் கடற்படைகளில் நீர்மூழ்கிக் கப்பல்களின் செல்வாக்கு இன்று பரந்துபட்டிருக்கின்றது. இரண்டாம் உலகமகாயுத்தம் தொடக்கம் இறுதியாக இலங்கைத் தீவில் இடம்பெற்ற தமிழர்களின் ஆயுதப்போராட்டம் வரை அனைத்திலும் நீர்மூழ்கிக் கப்பல் கப்பல்களுக்குத் தனியிடம் உண்டு. இரண்டாம் உலகமகா யுத்தத்தின் பின்னரான சூழ்நிலையில் ஹிட்லர் நீர்மூழ்கிக் கப்பல்களால் வெளியேற்றப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் இன்றும் நிலவுகின்றது. தமிழர்களின் விடுதலைப் போராட்டத்திலும் முள்ளிவாய்க்கால் சாகசத்துக்குப் பின் விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனும் நீர்மூழ்கி கப்பலின் ஊடாக தப்பித்திருக்கலாமோ என்ற சந்தேகம் இன்றும் நிலவுகின்றது. முல்லைத்தீவின் புதுமாத்தளன் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்ட கப்பல்கள் எனக் கூறி சிறிய, பெரிய நீர்மூழ்கிக் கப்பல்கள் காட்சிக்கு விடப்பட்டுள்ளமை இச்சந்தேகத்தின் கோணத்தை அதிகரிக்கிறது. இக்கப்பல்களை பார்வையிட இலங்கை வந்த சீன கடற்படை அதிகாரிகள் முன்னைய யுத்தங்களை போர்களின் போது நீர்மூழ்கிக் கப்பல்களின் செல்வாக்கை பறை சாற்றியிருக்கிறது. நீர்மூழ்கிக் கப்பல்களின் நடவடிக்கைகள் இன்று இந்திய பெருநிலப்பரப்பின் பாதுகாப்பையே கேள்விக்குள்ளாக்கும் அளவிற்கு பரிமாணம் பெற்றிருக்கின்றன. இதை உறுதிப்படுத்து வதைப்போல தினம் தினம் சீன அரசின் நீர்மூழ்கிக் கப்பல்கள் இந்தியாவை அண்டிய கடற்பகுதியில் நடமாடி வருகின்றது. இதன் மூலம் தெற்கு திபெத் என அழைக்கப்படும் அருணாசல பிரதேசத்தை மையமாக வைத்து இடம்பெற்று வந்த இந்திய சீன களமுனைகள் சீன புதிய வருகையின் மூலம் இந்தியாவை சுற்றியுள்ள கடற்பகுதியிலும் திறக்கப்பட்டிருப்பதான சந்தேகம் மேலெழுகின்றது. 1962 ஆம் ஆண்டு ஒக்டோபர் 20 ஆம் திகதியளவில் ஜம்மு காஷ்மீரின் அக்சாய்சின் பகுதியில் இடம்பெற்ற இந்திய சீன நேரடிப் போரின் பின் மீண்டும் போர் மூளும் அபாயத்தை இந்த நீர்மூழ்கிகள் ஏற்படுத்தியிருக்கின்றன.

“ பங்களாதேஷின் துறைமுகமான சிட்டகாங் துறைமுகத்திலும் மியான்மாரின் சித்வே துறைமுகத்திலும் பாகிஸ்தானின் குவாடர் துறைமுகத் திலும் சீனா தனது காலை வலுவாக பதித்திருக்கின்றது. சிசெல்ஸ் தீவில் தமது கப்பல்களை நிறுத்தும் உரிமையை சீன அரசு ஏற்கனவே பெற்றுவிட்டது. ”

அண்மையில் 22 இற்கும் மேற்பட்ட நீர்மூழ்கிக் கப்பல்களின் நடமாட்டங்கள் இந்திய கடற்படையின் கண்காணிப்பு காமராக்களில் அவதானிக்கப்பட்டிருக்கின்றன. இலங்கைக்குத் தெற்கேயும் இப்படகுகள் நடமாடுவதாகத் தகவல்கள் வெளிவந்த வண்ணமிருக்கின்றன. இந்தத் தகவல்களை இலங்கைக் கடற்படை மறுத்திருக்கின்ற போதிலும் இந்திய கடற்படை உறுதிப்படுத்தியிருக்கின்றது. இது தொடர்பான சமிக்ஞைகள் தமக்கு கிடைத்திருப்பதாகவும் இலங்கைக்கு அண்மையில் சுமார் 13 நீர்மூழ்கி கப்பல்கள் நடமாடியதற்கான ஆதாரங்கள் இருப்பதாகவும் டெல்லியைத் தளமாக கொண்டியங்கும் ஹெட்லைன்ஸ் ருடே நாளேட்டுக்கு தெரிவித்திருக்கின்றனர் இந்திய கடற்படை அதிகாரிகள். அந்தவகையில் இந்திய பெருநிலப்பரப்பை சுற்றியுள்ள கடற்பகுதியிலும் இந்தியாவை சுற்றியுள்ள மியான்மார், இலங்கை, அந்தமான், நிக்கோபார் தீவுகளின் கடற்பகுதிகளிலும் இந்த அடையாளமற்ற வெளித் தெரியாத சீன நீர்மூழ்கி கப்பல்கள் நடமாடிக் கொண்டிருப்பதான தகவல்கள் வெளிவந்த வண்ணம் இருக்கின்றன. இந்திய கடற்பரப்பை அண்டிய பகுதிகளில் நிறுவப்பட்டுள்ள அமெரிக்காவிடம் இருந்து வாங்கிய சோனார் கருவிகள் மூலம் இது தொடர்பான ஆதாரபூர்வமான சமிக்ஞைகள் கிடைத்திருப்பதை இந்திய கடற்படையும் உறுதிப்படுத்தியிருக்கிறது.


பாகிஸ்தான் கடல் எல்லைக்கு உட்பட்ட பிரதேசங்களூடாக இந்திய கடல் எல்லைக்குள் புகும் இந்த சீன நீர்மூழ்கிக்கப்பல்கள் அடிக்கடி இந்தியாவை மையமாக வைத்தே சஞ்சரித்து வருகின்றன. அண்மையில் கூட அந்தமான் நிக்கோபார் தீவுகளுக்கு 90வது உட்பட்ட கடற்பரப்பில் நவீன வசதிகளுடன் கூடிய சீன நீர்மூழ்கிக் கப்பல் பல நடமாடியதைஇந்திய கடற்படையினர் கண்டறிந்தனர். இந்த நீர்மூழ்கிகளின் நடமாட்ட நோக்கம் வேவு நடவடிக்கைகளுக்கு அப்பால் இந்திய கடற்படையின் பலம் மீது தாக்கத்தைச் செலுத்துவதாக இருக்கலாம் எனவும் சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளது.

ஏற்கனவே, இந்திய நிலப்பரப்பிற்கு அருகில் உள்ள நாடுகளின் வியாபாரங்களிலும் துறைமுக நடவடிக்கைகளிலும் சீனா அளவுக்கு மீறிக் கால் பதித்துவிட்டது. பங்களாதேஷின் துறைமுகமான சிட்டகாங் துறைமுகத்திலும் மியான்மாரின் சித்வே துறைமுகத்திலும் பாகிஸ்தானின் குவாடர் துறைமுகத் திலும் சீனா தனது காலை வலுவாக பதித்திருக்கின்றது. சிசெல்ஸ் தீவில் தமது கப்பல்களை நிறுத்தும் உரிமையை சீன அரசு ஏற்கனவே பெற்றுவிட்டது. இந்நிலையில் சீன அரசின் நீர்மூழ்கிகள் ஊடாக அடுத்த நகர்வு இந்தியா மீதான முற்றுகைப் போரே என எதிர்பார்க்கப்படுகின்றது.

அண்மையில் கடலுக்கு அடியில் 5 கிலோ மீற்றர் ஆழத்தில் சென்று நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடிய நவீன நீர்மூழ்கிப் பரிசோதனையை சீன அரசு மேற்கொண்டிருந்தது. எனவே, இந்திய பெருங்கடல் மீதான நீர் முற்றுகைப்போர் சீனாவின் நீர்மூழ்கிகள் மூலமாக நெருக்கப்பட்டிருக்கின்றது. இந்த நீர்மூழ்கிக் கப்பல்களின் வினைத்திறனைப் பார்க்கும் போது இந்தியக் கடற்படையின் அச்சம் இன்னும் அதிகமாகின்றது. நவீன காமராக்கள் மற்றும் கருவிகளின் கண்களில் மண்ணைத் தூவும் திறன் மேற்பரப்பில் வரும் எவ்வித கப்பல்களின் நடமாட்டங்களை இலகுவாக உணரக்கூடிய ஆற்றல் இந்திய கடற்படையை அச்சமுற வைத்திருக்கின்றது.

இத்தகைய சீனாவின் கடல் முனை நகர்வுகளுக்கு அப்பால் ஏனைய நாடுகளுடன் கூட்டுச் சேர்வதன் ஊடாக இந்தியா மீதான பாதுகாப்பு முற்றுகையை சீனா அதிகரிக்கும் வருவதையும் காணக்கூடியதாக இருக்கின்றது. இதற்கு ஏதுவாக இலங்கை, பாகிஸ்தான், மியான்மார் தீவுகளுக்கு அடிக்கடி சீன பாதுகாப்பு அதிகாரிகள் விஜயம் செய்த வண்ணமிருக்கின்றனர். அண்மையில் கூட சீன பாதுகாப்பு அதிகாரிகள் குழு ஒன்று யாழ்ப்பாணம் வருகை தந்திருக்கின்றனர். மறுபக்கத்தில் இலங்கையின் மீள் கட்டுமானப் பணியாளர்கள் எனக் கூறி சீன பாதுகாப்பு உளவாளிகள் ஊடுருவியிருக்கலாம் என்ற அச்சம் இந்தியத்தரப்பிடம் தலைதூக்கியிருக்கிறது.

எனவே, தற்போது அமைதியாக இருக்கும் இந்திய சீன உறவுநிலை இந்த நீர்மூழ்கிக் கப்பல்களின் வருகைகள் மூலமும், சீனாவின் சினமூட்டும் நடவடிக்கைகள் மூலமும் கொந்தளிக்கலாம் என்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.



மீண்டும் போர் மூளும் அபாயத்தை இந்த நீர்மூழ்கிகள் ஏற்படுத்தி யிருக்கின்றன.

# தள்ளாடியைத் தாக்



சில நாள்களுக்கு முன்னர்....

கொழும்பு பொலிஸ் தலைமையகம் வழக்கம் போல இயங்கிக் கொண்டிருந்தது. திடீரென அவசர தொலைபேசி இலக்கத்துக்கு ஓர் அழைப்பு. தொலைபேசி றிசீவரைக் காதில் பொருத்திக் கொண்ட அதிகாரியின் முகம் சட்டென மாறியது. 'ஏஸி' குளிரிலும் அவருக்கு வியர்த்துக் கொட்டத் தொடங்கியது.

"மன்னார் தள்ளாடி இராணுவ முகாமைத் தாக்க புலிகள் வந்துள்ளார்கள். பேசாலையில் உள்ள ஒரு முன்னாள் பெண்போராளி தலைமையில் இந்தத் தாக்குதல் நடத்தப்படவுள்ளது தள்ளாடியைத் தாக்குவதற்காக திட்டமிடல் கூட்டம் பேசாலையில் உள்ள இரகசிய இடம் ஒன்றில் நடைபெறவுள்ளது" என்று அவசர தொலைபேசிக்கு வந்த தகவல். கூடவே தாக்குதல் தளபதி என்று அந்த அநாமதேய தொலைபேசிக்கு வந்த தகவல் கூடவே ஒரு முன்னாள் பெண் போராளியின் பெயர், முகவரியையும் கொடுக்கத் தவறவில்லை.

அவ்வளவுதான் அடுத்த நொடி பே அந்த அலுவலகத்தில் பரபரப்பு பற்றிக் கொண்டது. எல்லோரும் காலிலே சக்கரம் கட்டிக் கொள்ளாத குறையாக அங்கும் இங்கும் ஓடித் திரிந்தனர். தொலைபேசிகள் ஓயாமல் அலறத் தொடங்கின. மன்னார் பொலிஸ் நிலையத்துக்கு தகவல் பறந்தது.

**"ஒரு வேளை இந்தியாவுக்குள் ஊடுருவி இலங்கை தாக்குதல் நடத்தப் போகிறதோ தெரியவில்லை" என்று வேடிக்கையாகச் சொன்னார் நண்பர் ஒருவர்.**



வன்னி மீதான இறுதிப் போரின் ஆரம்பப் புள்ளி தள்ளாடி முகாமில் இருந்தே ஆரம்பித்தது. மன்னார், உயிலங்குளம் ஊடாக புலிகளின் முன்னரங்க நிலைகளை தகரப்பதற்கான சகல திட்டமிடுதல்கள், தயாரிப்புகள், விநியோகம் என்பனவெல்லாம் தள்ளாடி முகாமிலேயே மேற்கொள்ளப்பட்டிருந்தன. இதன் காரணமாக விடுதலைப் புலிகளின் விமானக் குண்டு வீச்சுக்கும் தள்ளாடி முகாம் இலக்காகி இருந்தது.

தங்களுக்கு மிக அருகில் உள்ள தள்ளாடி முகாம் தாக்கப்பட்டால் தங்களுக்கு சேதம் ஏற்படக் கூடுமோ என்ற அச்சம் அவர்களுக்கு கலக்கத்தைக் கொடுத்திருக்கவேண்டும் உடனேயே 'தள்ளாடி தாக்குதல் தளபதி' என்று சொல்லப்பட்ட முன்னாள் போராளியை விசாரிக்கவும், தொலைபேசி அழைப்புக்களை பரிசீலிக்கவும் அனுமதி வேண்டி மன்னார் நீதிவான் நீதிமன்றுக்கு ஜீப்பில் விரைந்தனர்.


ஆனால், ஒரு அனாமதேய அழைப்பை நம்பி குறித்த முன்னாள் பெண் போராளியை விசாரணை செய்வதற்கான அனுமதி கிடைக்கவில்லை. அதனால் பொலிஸார் தலையைத் தொங்கப் போட்டுப்

# ...க்கு புலிகள் தயார்?

● குறுக்கால போவான்



புலம்பெயர் நாடுகளின் முனைப்புப் பெற்றுள்ள புலிகளின் செயற்பாடுகளின் விளைவாக ஈழத்திலும் காலப்போக்கில் புலிகள் மீளுருவாக்கம் நிகழ்ந்து விடுமோ என்று அரசு அஞ்சத் தொடங்கியுள்ளது.
இது போதாதென்று தமிழக மாணவர்கள் விடுதலைப் புலிகள் அமைப்பை தாங்கள் மீண்டும் ஆரம்பிக்கப் போவதாக சூளுரைத்துள்ளார்கள். இதுவும் இலங்கைக்கு கலக்கத்தை உண்டு பண்ணியுள்ளது.




கொண்டு இருப்பு வேண்டியிருந்தது. எப்போது புலிகள் தாக்குதல் நடத்தப் போகிறார்களோ! என்ற நெஞ்சிடியோடு அன்றைய இரவைப் படைத்தரப்பு கழிக்க நேர்ந்தது. எனினும் படைத்தரப்பு பயந்தது போல தள்ளாடி மீது தாக்குதல் நடைபெறவே இல்லை. ஒரு துப்பாக்கி வேட்டுக் கூட தீர்க்கப்படவில்லை. தொலைபேசி அழைப்பில் சொல்லப்பட்டது போன்று பேசாலையில் தாக்குதலுக்கான இரகசியத் திட்டம் தீட்டப்படவில்லை.

அப்படியானால் அந்த அநாமதேய தொலைபேசி அழைப்பின் நோக்கம் என்ன?

குறித்த முன்னாள் போராளியை ஏதாவது சாட்டுச் சொல்லி அவரை உள்ளே தள்ளுவது தான். புனர்வாழ்வின் பின்னர் முன்னாள் போராளிகள் சமூகத்தோடு ஒன்றிணைக்கப்பட்டு விட்டதாக அரசு கூறிக் கொண்ட போது கத்திமேல் நடப்பது போன்றே அவர்களின் வாழ்வு இன்னமும் உள்ளது. தமது அடுத்தகட்ட வாழ்வு தொடர்பான சிக்கல்களின் போது ஏராளமான சவால்களை அவர்கள் சந்திக்க வேண்டியுள்ளது. அவர்கள் எதற்கும் முரண்படக்கூடாது என்றும், செருப்பால் அடித்தால் கூட அதை சிரித்த முகத்தோடு வாங்கிக் கொள்ளவேண்டும் என்றும் சமூகம் எதிர்பார்க்கிறது. தீண்டத்தகாத ஜந்து ஒன்றைப் போலவே அவர்கள் நோக்கப்படுகிறார்கள்.

இவற்றையெல்லாம் மீறித் தமது உணர்ச்சியை அடக்க முடியாமல் இந்த முன்னாள் போராளிகள் கொஞ்சம் கோபப்பட்டுவிட்டால் போதும். அடுத்த நொடி போ “அவன்/அவள் திரும்பவும் புலிகளுக்கு வேலை செய்யிறமாதிரித் தான் கிடக்கு” என்று கதை கிளைபரப்பத் தொடங்கிவிடும். அத்தகைய கிளைபரப்பலின் உச்சக்கட்டமாகவே “தள்ளாடி இராணுவமுகாமைத் தாக்குவதற்கு பேசாலையில் உள்ள முன்னாள் பெண்போராளியின் தலைமையின் கீழ் புலிகள் தயாராகின்றனர்” என்ற அவசரத் தொலைபேசி அழைப்பு நிகழ்ந்திருக்கின்றது.

இத்தகைய அநாமதேய தொலைபேசி அழைப்புக்கள் புலிகளை ஒழித்து விட்டதாக அரசு அறிவித்து நான்கு வருடங்கள் நிறைவு பெறவுள்ள நிலையிலும் கூட படைத்தரப்பு நம்பி, பதறியடிக்கவே செய்கிறது. அந்த அளவுக்கு புலிகளின் மீள் வருகை பற்றிய பயம் படைத்தரப்பிடம் மிக ஆழமாகவே உண்டு. வெளித்தோற்றத்திற்கு “புலிகள் இனி உருவாகவே முடியாது” என்று அரசதரப்பு கூறிக் கொண்டாலும் உள்ளூர பயப் பலப்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஏனைய படைப்பிரிவுகளைப் போல ஆழஊடுருவும் படையணியையும் போர் அற்ற காலத்திலும் கட்டமைத்துக் கொள்ளவேண்டிய தேவை மரபார்ந்த இராணுவத்திற்கு இருக்கவேண்டியதில்லை. ஏனெனில் போர் முடிந்த பின்னரும் எல்லைகளைக் காத்தல், பிற நாட்டுப் படைகளின் ஊடுருவல்களை கண்காணித்தல் போன்ற செயற்பாடுகளுக்காக இராணுவத்தில் ஏனைய பிரிவுகளை நவீனமயமாக்கி, விரிவுபடுத்துவது வழமையான ஒன்று. ஆனால், அத்தகைய படைப்பிரிவுகள் போன்றதல்ல ஆழ ஊடுருவும் படையணி. இந்தப் படையணி புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசங்களுக்குள் ஊடுருவி, புலிகளின் விநியோக மார்க்கங்கள் மீதும், தளபதிகள் மீதும் கிளைமோர் தாக்குதல்களை நடத்துவதற்கென்றே விசேடமாக உருவாக்கப்பட்டிருந்தது. ஏற்கனவே இந்தப் படைப்பிரிவு இருந்தாலும், அதனை இலங்கை இராணுவத்தின் முதுகெலும்பாக மாற்றியவர் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாதான்.

ஆழஊடுருவும் படையணியின் தாக்குதல்களால் புலிகளின் நகர்வுகள் மட்டுப்படுத்தப்பட்டன. முக்கியமான தளபதிகளை அவர்கள் பறிகொடுக்கவேண்டியிருந்தது. ஒரு வேளை குறித்த தளபதிகள் இருந்திருப்பார்களேயானால் இறுதிக்கட்டப் போரின் முடிவு வேறாகவும் அமைந்திருக்கக் கூடும். இத்தகைய ஊடுருவித் தாக்குதல் நடத்துவதற்காக மட்டுமே உருவாக்கப்பட்ட ஆழஊடுருவும் படையைப் போர் முடிவுற்ற பின்னர் இப்போது அவசர அவசரமாக விரிவாக்கம் செய்வது ஏன் என்பது எவருக்குமே புரியவில்லை?

“ஒரு வேளை இந்தியாவுக்குள் ஊடுருவி இலங்கை தாக்குதல் நடத்தப்போகிறதோ தெரியவில்லை” என்று வேடிக்கையாகச் சொன்னார் நண்பர் ஒருவர்.


ஆனால், அரசு வேடிக்கைக்காக மட்டும் ஆழஊடுருவும் படையணியை பலப்படுத்தவில்லை. உண்மையில் புலிகள் மீண்டும் வந்து விடுவார்களோ என்ற பயம் அரசதரப்பிடம் மெல்ல மெல்ல வேரூன்றத் தொடங்கிவிட்டது. அந்தப் பயத்தின் இன்னொரு விளைவே தள்ளாடியில் தாக்குதல் நடக்கப்போவதாக வந்த அநாமதேய அழைப்புக்குக் கொடுக்கப்பட்ட முக்கியத்துவம்.

ஆத்திரக்காரனுக்கு புத்திமட்டம் என்பார்கள். பயந்தவனுக்கும் அதே நிலை தான். இல்லாவிட்டால் தமக்கு வந்த அநாமதேய அழைப்பை ஒன்றுக்கு இரண்டு தரம் ஆழ அலசி ஆராய்ந்திருந்தால் அது தவறான தகவல் என்பதை அவர்களாகவே இனம் கண்டு கொண்டிருப்பார்கள். தாக்கப்படப் போவதாகச் சொல்லப்பட்ட தள்ளாடி முகாமுக்குத் திட்டம் தீட்டப்படுவதாகக் கூறப்பட்ட பேசாலைக்கும் இடையேயான தூரம் 23.5 கிலோமீற்றர்கள். ஒரு முகாமைத் தாக்குவதற்கு இவ்வளவு தொலைவில் வைத்துத் திட்டமிடமாட்டார்கள் என்பது சிறு பிள்ளைக்கும் தெரிந்த போரியல் செய்தி. அத்துடன். ஏனெனில் ஒரு போராளிக்குழு தலைமறைவாக செயற்படுவதற்குரிய எந்தவொரு சாதகமான புவியியல் அமைப்பும் பேசாலையில் கிடையாது. அது கடலும் கடல் சார்ந்த பகுதிகளையும் கொண்ட அழகான அமைதியான பகுதி. அவ்வளவு தான். அதைத் தவிர இராணுவரீதியான கேந்திர முக்கியத்துவங்கள் அதற்கில்லை.

அத்தோடு குறித்த பெண் போராளி பற்றிய விபரங்களை அவர் தடுப்பில் இருந்த காலத்தில் படைத்தரப்பு அக்குவேறு ஆணிவேறாக அறிந்து வைத்திருக்கும். இந்த நிலையில் தமது விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு, புனர்வாழ்வின் பின் விடுவிக்கப்பட்ட ஒருவர் மீது அநாமதேய அழைப்பு அள்ளிக் கொட்டிய குற்றங்களை அப்படியே நம்புகிற நிலையில் தான் படைத்தரப்பு இருக்குமானால், ஏனைய முன்னாள் போராளிகள் மீதும் இவ்வாறு ஆதாரமில்லாத குற்றச்சாட்டுகளை நம்பிக் கொண்டு படையினர் பாயமாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்? படையினருக்கு வந்த தள்ளாடித் தாக்குதல் பற்றிய பயம் போய்விட்டது. ஆனால், சின்னச் சின்ன கோபதாபங்களால் தமக்கு எதிரானவர்கள் சொல்லும் அவதூறுகளை நம்பி படையினரின் இரும்புக் கரங்கள் தம்மை நோக்கியும் நீளுமோ என்ற அச்சம் ஒவ்வொரு முன்னாள் போராளியிடத்தேயும் உருவாகியிருக்கிறது.

# கயிறிழுப்பு ஆரம்பம்

– அபிஜித்




இந்திய அரசியலின் இரு பிரதான தேசியக் கட்சிகளான ஆளும் காங்கிரசும் பாரதிய ஜனதாவும் அடுத்த ஆண்டு லோக்சபா தேர்தலுக்கு தத்தமது பிரதமர் வேட்பாளர்களை உத்தியோகபூர்வ மற்ற முறையில் அறிவித்து விட்டன எனுமளவுக்கு அவ்விரு வேட்பாளர்களும் ஒருவர் மீது மற்றவர் தாக்குதல் கணைகளைத் தொடுக்க ஆரம்பித்துள்ளனர். பாரதிய ஜனதாவின் நரேந்திர மோடியும் காங்கிரஸின் ராகுல் காந்தியும் தத்தமது கட்சிகளில் சமீபத்தில் புதிய பதவிகளில் அமர்த்தப்பட்டது அவர்களுக்கு பிரதமர் பதவி பட்டாபிஷேகம் போல அந்தந்தக் கட்சித் தலைவர்களால் கொண்டாடப்பட்டு வருகிறது. பாரதிய ஜனதாவின் மத்திய பாராளுமன்ற குழுவின் புதிய உறுப்பினராக மோடியும் காங்கிரஸ் கட்சியில் முதல் தடவையாக ஒரு துணைத் தலைவர் பதவி உரு வாக்கப்பட்டு அதற்கு ராகுல்காந்தியும் நியமிக்கப்பட்டமை முக்கிய நிகழ்வாகக் கருதப்படுகிறது. இது போதாதென்று ஒருவரை ஒருவர் மறைமுகமாக வசைபாடுவதும் தொடங்கி இருக்கிறது. இத்தனைக்கும் மோடி தான் தமது பிரதமர் வேட்பாளர் என பி.ஜே.பி அறிவிக்கவில்லை. மூத்த தலைவர் அத்வானி பிரதமராக வேண்டியவர். அவருக்கு வாய்ப்புக் கிடைக்காமல் போனது கட்சியில் பல தலைவர்களுக்கு மனவருத்தம் தரும் விடயமாகும். அத்வானி, வாஜ்பாய் இருவருமே ஏக காலத்தில் கட்சியில் முக்கியத்துவம் பெற்று ஒற்று மையாகக் கட்சியை வளர்த்தெடுக்கப் பெரும் பங்காற்றிய இரு மூர்த்திகள் ஆவர். வாஜ்பாய் வெளிப்படையாக மதவாதம் பேசாததால் அவர் முஸ்லிம்களும் ஏற்கத்தக்க தலைவராக அங்கீ காரம் தரப்பட்டு 1998இல் கூட்டணி அரசின் பிரதமர் ஆனார். குறிப்பாக கூட்டணிக் கட்சிகள் அத்வானியைத் தவிர்த்து வாஜபாயையே விரும்ப முக்கிய காரணம் பாபர் மசூதியை 1992 டிசம்பர் 6இல் இடித்துத் தள்ளியதில் முக்கிய பங்கு வகித்தவர் அத்வானி என்பதே.

வாஜ்பாய் பிரதமராக கூட்டணிக் கட்சிகள் இணங்கியிருந்தாலும் அத்வானி குட்டையைக் குழப்பி இருந்தால் வாஜ்பாய் அரியணை ஏறியிருக்கவே முடியாது. யதார்த்த நிலையை உணர்ந்த அத்வானி பிரதமராவதற்கும் பதவியில் சுமுகமாக தொடர்வதற்கும் வாஜ்பாய்க்கு பெரிதும் ஒத்தாசையாக இருந்து வந்தார். 2 ஆவது இடம் என்ற அடிப்படையில் துணைப் பிரதமர் பதவி அத்வானிக்கு வழங்கப்பட்டது. வாஜ்பாய் 2004 இல் தோற்பதை எதிர்பார்க்கவில்லை. தமது கூட்டணி வெல்லும் என்றே கருதியிருந்தார். வென்று ஓரிருவருடம் ஆண்டபின் முறைப்படி அத்வானியிடம் மீதிக் கால பிரதமர் பதவியை வழங்குவது என்பது அவரது திட்டமாக இருந்தபோது அது நடக்கவில்லை. அதற்கு 5 ஆண்டுகளுக்குப் பிறகு 2009 இலும் அத்வானியே கூட்டணிக்குத் தலைமை தாங்கியும் அவரால் வெல்ல முடியாது போக இனிமேல் வாழ்நாளில் அவர் பிரதமராகவே முடியாது என்றே ஊகங்கள் எழுந்தன. பாபர் மசூதியை இடித்த பழிபாவம் அத்வானியைத் துரத்துகிறது என்றே பலரும் கூறினர். துரதிர்ஷ்டசாலி என்று அவர் கருதப்பட்டார் எனினும் திடீரென அதிஷ்டக் காற்று காங்கிரஸிடமிருந்து திசைதிரும்பி எதிர்த் திசையில் வீசத் தொடங்கி இருப்பதால் அடுத்த ஆண்டு எப்படியும் ஆட்சியைப் பிடித்துவிடலாம் என்ற நியாயமான ஆர்வம் பாரதிய ஜனதாக் கட்சித் தலைவர் களிடையேயும் தொண்டர்களிடமும் எழுந்துள்ளதை மறுக்க முடியாது. இதன் பலனைப்பெற அத்வானியே உரிமையுள்ளவர் என கட்சியின் தலைவர்களில் ஒருவரும் நடிகருமான சத்ருக்கன் சின்ஹா கூறியுள்ளார். அதுவும் மோடிக்கு புதிய பதவி தரப்பட்டு அவர் அடிக்கடி டில்லி வந்து போகத் தொடங்கிய பிறகு அத்வானிக்கு ஆதரவான குரல்கள் எழத் தொடங்கியுள்ளன. மோடியைக் குஜராத் பிரதமராக்கி அவரது அரசியல் ஆசானாக, ஆத்மார்த்த குருவாக விளங்கியவரே அத்வானி தான். அப்படி இருக்க அவரை நெட்டித் தள்ளிக் கொண்டு முன்னேறிக் குருவை மிஞ்சிய சிஷ்யராகிவிட்டார் மோடி. குஜராத்தில் 2002, 2007, 2012 என தொடர்ந்து 3 முறை தேர்தல்களில் வென்று முதல்வரானதாலும் 2002 கலவரத்தில் முஸ்லிம்களை கொன்று குவித்ததாலும் இந்துத்வ வெறியர் களான பி.ஜே.பி கட்சியினரிடம் மோடியின் செல்வாக்கு அத்வானியை மிஞ்சி உயர்ந்திருப்பதில் வியப்பில்லை. ஆனால், மோடியை ஏற்க விரும்பாத கூட்டணிக் கட்சிகள் அத்வானி, சுஷ்மா ஸ்வராஜ், அருண் ஜேட்லி என வேறு எந்தப் பிசாசையும் ஏற்கத் தயார் என்ற பாணியில் கருத்து வெளியிட்டு வருவ தால் மோடியே பிரதமர் வேட்பாளர் என அறிவிப்பதில் பி.ஜே.பிக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது. இரண்டாவது தடை அத்வானி இன்னமும் பிரதமர் போட்டியிலிருந்து விலகிவிட்டார் எனவே மோடியைத் தான் அவர் அங்கீரிக்கிறார் என பகிரங்கமாக இன்னமும் அறிவிக்காததாகும். இது பிரதமராகும் கனவில் அத்வானி இன்னமும் உள்ளார் என்பதையே காட்டுகிறது எனலாம்.

மோடியோ இது எதைப்பற்றியும் கவலைப்படாதவராக பிரதமர் வேட்பாளர் என்ற தோரணையில் புதிதாகப் பேசத் தொடங்கியுள்ளார். இப்போது கெட்ட பெயர்பெற்று ஊழல் உள்ளிட்ட பல குற்றச்சாட்டுகளில் தள்ளாடும் காங்கிரஸ் கட்சியினர் பழியை பிரதமர் மன்மோகன் மீது போட்டுவிட்டு, "ராகுல்காந்தி புதியவர் அவர் நாட்டை மீட்பார்" என்ற தொனியில் பிரசாரத்தைத் தொடங்க உத்தேசித்துள்ளனர். இளைஞர் பட்டாளத்தை வசீகரித்து வாக்கு வங்கியாக்க ராகுலின் பிரவேசம் உதவுமென காங்கிரஸ் கருதுகிறது. மோடி பதவி உயர்த்தப்பட்டபின் வரும் முதல் தேர்தல் அடுத்த மாதம் 5ஆம் திகதி நடக்கவுள்ள கர்நாடக மாநில சட்டசபைத் தேர்தலாகும். அங்கு ஆட்சியிலுள்ள பாரதிய ஜனதா ஊழல் மேல் ஊழல் புரிந்து கடைசியில் மூத்த தலைவர் எடியூரப்பா கட்சியை உடைத்து உச்சபட்ச மக்கள் எதிர்ப்பை சம்பாதித்துக் கொண்டுள்ளதால் காங்கிரஸ் கட்சி வெற்றிபெற்று ஆட்சியைக் கைப்பற்றும் என்று தெரிகிறது. இதனால் இங்கு ராகுல் தீவிர பிரசாரம் செய்யவுள்ளார். மோடி கர்நாடகா செல்வதை முடிந்தவரை தவிர்த்து ஓரிரு பிரசாரக் கூட்டங்களில் மட்டும் உரையாற்றும் வகையில் பி.ஜே.பியின் ஏற்பாடுகள் அமைந்துள்ளன. கர்நாடக தேர்தல் அம்மாநில நிலைமைகளைப் பொறுத்து முடிவுகளைத் தரும், அது தேசிய தேர்தல்களின் முடிவுகளுக்கு ஒரு முன்னோட்டமாக அமையாது என்பதே உண்மை. எவ்வாறாயினும் தடுமாறும் காங்கிரசுக்கு கர்நாடக வெற்றி உற்சாகம் தரக்கூடும் என்பதுடன் பி.ஜே.பி ஆட்சி செய்யும் மாநிலங்களின் எண்ணிக்கை இதன் மூலம் குறுகிவிடும். தெற்கே உள்ள 4 திராவிட மொழி மாநிலங்களில் கர்நாடகாவில் மட்டுமே பி.ஜே.பி பெருத்த சிரமத்தின் பின் ஆட்சிக்கு வந்தாலும் அதுவும் சொதப்ப லாகவே முடிந்துள்ளது. அவ்வகையில் மோடி அங்கு பிரசாரம் செய்தால் 'முதல் கோணல் முற்றும் கோணல்' என்பதாக அதைக் கோடிட்டு பிரசாரம் செய்ய காங்கிரஸ் கட்சிக்கு வாய்ப்பு கிடைக்கும். தொடர்ந்து ஒக்ரோபரில் மத்திய பிரதேசம், ராஜஸ்தான், சத்தீஷ்கர், டில்லி ஆகிய மாநிலங்களில் சட்டசபைத் தேர்தல்கள் நடக்கவுள்ளன. இந்த 4 மாநிலங்களுமே ஹிந்தி மொழி பிரதேசங்களாகும். இரண்டில் காங்கிரசும் இரண்டில் பி.ஜே.பியும் தற்போது ஆட்சியிலுள்ளன.

இந்த ஹிந்தி மாநிலங்கள் நான்கிலும் பி.ஜே.பி வென்றால் அதன் மதிப்பு உயர்ந்து அக்கட்சியின் பிரதமர் வேட்பாளர் மோடி தான் என்ற நிலைய நிராகரிக்க கூட்டணிக் கட்சிகளால் முடியாது போகலாம். மாறாக காங்கிரஸ் வென்றால் லோக்சபா தேர்தலை முன்கூட்டி நடத்த காங்கிரஸ் முடிவெடுக்கக் கூடும்.

இதேவேளை மோடி பி.ஜே.பியின் வேட்பாளர் என அறிவிக்கப்படும் பட்சத்தில் முஸ்லிம்கள் அவருக்கெதிராகத் திரண்டு காங்கிரசுக்கு தமது முழு ஆதரவைத் தெரிவிக்கக் கூடும் என்பதால் காங்கிரசும் பி.ஜே.பியும் அல்லாத 3ஆம் அணி கட்சிகள் கலக்கமடைந்துள்ளன. பீஹார், மேற்கு வங்கம், உத்தர பிரதேசம், கேரளா என்பவற்றில் கணிசமான முஸ்லிம்கள் வாழ்கின்றனர். இவர்களின் வாக்கு காங்கிரசுக்கு அல்லது பிராந்திய கட்சிகள் மற்றும் இடதுசாரிகளுக்கே பாரம்பரியமாகக் கிடைத்து வந்தன. அதுவும் தேசிய தேர்தலான லோக்சபா தேர்தலில் காங்கிரசுக்குத்தான் முஸ்லிம்கள் வாக்களிப்பர். மோடி பி.ஜே.பியின் பிரதமர் வேட்பாளர் மோடி எனில் காங்கிரசுக்கு இவ்வாக்குகள் முழுமையாகக் கிடைத்து மற்றைய பிராந்திய கட்சிகளின் நிலை பரிதாபகரமாக மாறும். உதாரணமாக உத்தரப் பிரதேசத்தில் ஆளும். முலாயம் சிங்கின் கட்சிக்கே மாநில சட்டசபைத் தேர்தலின் போது முஸ்லிம்கள் வாக்களிப்பது வழக்கம். மோடி வேட்பாளரானால் மோடி வெல்வதைத் தடுக்க வாக்குகள் பிரிந்துவிடாபடி முஸ்லிம்கள் ஒட்டுமொத்தமாக காங்கிரசுக்கு வாக்களித்தால் இது தலைகீழாக மாறி முலாயம் கட்சி பாதிக்கப்படும். இதேபோல மேற்கு வங்கத்தில் இடதுசாரிகளும் முதல்வர் மம்தா பானர்ஜியின் கட்சியும், கேரளாவில் இடதுசாரிகளும் பாதிக்கப்பட இடமுண்டு. இதனால் குழப்பமடைந்து கலவரமுற்ற முலாயம் சிங் "அத்வானி சிறந்த தலைவர்" என அவருக்கு புதிதாக வக்காலத்து வாங்கத் தொடங்கியுள்ளார். மோடி வேட்பாளராகாமல் தடுத்து அத்வானியை பி.ஜே.பி முன்னிறுத்தினால் ஓரளவாவது முஸ்லிம் வாக்குகளை பிரித்து காங்கிரஸிடம் இருந்து பறிக்கலாம் என்பது முலாயம் நம்பிக்கை. இவ்வாறே மம்தாவும் மோடியை எதிர்க்க இடமுள்ளது. மோடியோ மம்தாவை புகழ்ந்து தனது அணிக்கு இழுக்க தூபமிட்டு வரும் மம்தாவின் மேற்கு வங்க மாநிலத்தில் 24% என்ற மிகப் பெரிய சதவீதத்தில் முஸ்லிம்கள் உள்ளனர். இவர்களை வளைக்காமல் மம்தாவோ, இடதுசாரிகளோ, காங்கிரசோ எந்தக் கட்சியும் மேற்கு வங்க மாநிலத்தின் லோக்சபா தொகுதிகளில் கணிசமான வெற்றியைப் பெற முடியாது.

எனவே மம்தா மோடி தலைமையிலான பி.ஜே.பியின் கூட்டணியில் சேர்வதில் அதாலும் சிக்கல்கள் உள்ளன. எனினும் முன்பு வாஜ்பாய் அரசில் மம்தா கட்சி பங்காளிக் கட்சியாக கூட்டணியில் ஒரு காலத்தில் இணைந்திருந்ததும் இப்போது காங்கிரஸ்-மம்தா இடையே கடும் பகை நிலவுவதாலும் அவரை மீண்டும் வலையில் வீழ்த்தலாம் என்ற நப்பாசை பி.ஜே.பிக்கும் மோடிக்கும் உள்ளது. மம்தாவின் மாநிலத்தில் பி.ஜே.பிக்கு பெரிதாக செல்வாக்கு எதுவும் கிடையாது. மம்தாவின் தோளில் சவாரி செய்தால் 4-5 இடங்களாவது தேறலாம். தமிழகத்தில் ஜெயலலிதா, வங்காளத்தில் மம்தா என பி.ஜே.பியின் திட்டம் விரிகின்றமை குறிப்பிடத்தக்கது. எனினும் கூட்டணி இதை விடவும் வலுவாக-இன்னும் சில மாநிலக் கட்சிகள் குறிப்பாக பீஹாரின் ஜே.டி. யு, ஒரிசாவின் பி.ஜே.டி ஆந்திராவில் நாயுடு கட்சி என்பன சேராவிட்டால் பி.ஜே.பி அணி கரை சேர்வது சந்தேகமே.

*** *** ***

# உன் மனைவி ஹன்சிகாவா..?

## பித்தன் பதில்கள்

எல்லாம் மாறிக்கொண்டு போகேக்க பித்தர் மட்டும் என்னண்டு மாறாமல் இருக்க முடியும்? இந்த வருஷப் பிறப்போட பித்தருக்கும் வயது ஏறிட்டுது. அதால இந்த முறையில இருந்து வேற ஸ்ரைல்ல என்ர பதிலை எழுதுவம் எண்டு பாக்கிறன்.



M. நிரேஸ், மீசாலை.

**கே: புலிகள் இப்போது இல்லாத போதும் பொலிஸாரினதும் இராணுவத்தினரதும் செயற்பாடுகளே மீண்டும் புலிகளை உயிர்ப்பிக்கச் செய்யும் போலுள்ளதே. இது பற்றி உமது கருத்தென்ன பித்தரே?**

ப: மாடு இருக்கும் மட்டும் தான் உண்ணிக்கும் வாழ்க்கை. அதை மாதிரி புலிகளை வைச்சுப்பாடியே காலத்தை ஓட்டின ஆக்கள் இப்ப ஆரை வைச்சு பாடுறது எண்டு முழுசுகினம். புலிகள் இல்லாட்டி இவையின்ர பிழைப்பு அவ்வளவு தான். அதால எப்பிடியாவது புலிகளை உயிர்ப்பிக்கிற மாதிரி நடக்க வெளிக்கிடுகினம்.

ம. சந்திரகலா, அம்பன்.

**கே: பித்தா! மனைவிதான் உலகம் என்று சொல்லி விட்டு வேறு பெண்களுடன் திரிபவர்களைப் பற்றி..?**

ப: உங்களுக்கு விறகு வெட்டியான்ர கதை தெரியாது போல.

அவனொருவன் விறகு வெட்டேக்க கோடாலி தவறிப் போய் ஆத்துக்க விழுந்திட்டுது. பிறகு அவன்ர அழுகையைக் கேட்டு கடவுள் வந்து "எது உன்ர கோடாலி?" எண்டு கேட்டு தங்கம், வெள்ளி, இரும்பு கோடாலியளைக் காட்டினாராம் எங்கடை ஆள் வலு நேர்மை. தங்கத்தை விட்டிட்டு தன்ர கோடாலியை மட்டும் காட்டி வாங்கினானாம். உடன அவன்ர நேர்மையில மயங்கின கடவுள் மூண்டு கோடாலியையும் அவனுக்கே குடுத்திட்டார்.


இதே விறகு வெட்டி தனது மனுசியோட அதே ஆத்துப்பக்கமா இன்னொரு நாள் போனானாம். கோடாலி மாதிரி மனுசியும் ஆத்துக்க விழுந்திட்டா. திரும்பவும் வேலையில்லாத கடவுள் வந்தாராம். ஏன் அழுகிறாய் எண்டு அவர் கேக்க "ஆத்துக்க விழுந்த மனுசியை மீட்டுத்தா" எண்டு எங்கடை ஆள் சொன்னானாம். உடனே கடவுள் உவள் நடிப்புச் சிறக்கி ஹன்சிகாவைக் காட்டி "இவளோ உன்ர மனுசி?" எண்டு கேட்டாராம் உடன எங்கடை ஆளும் "ஓமோம் இவதான்" எண்டு வலு புளுகமாகச் சொன்னானாம். அதுக்கு கடவுள் "எட அறுவானே! இவள் உன்ர மனுசி இல்லை எண்டு உனக்கும் தெரியும் எனக்கும் தெரியும். பிறகு ஏன் பொய் சொன்னனி?" எண்டு கோபமாக் கேட்டாராம். அதுக்கு எங்கடை ஆள் "கடவுளே உன்னைப்பற்றி எனக்குத் தெரியும். முதல்ல நீ ஹன்சிகாவைக் காட்டுவாய் அவாவும் இல்லை எண்டு நான் சொல்ல கடைசியாய் என்ர மனுசியைக் காட்டுவாய். நானும் இவாதான் எண்டு தலையாட்ட நீ என்ர நேர்மையைப் பாராட்டி மூன்று பேரையும் வைச்சிரு எண்டு சொல்லுவாய்.

ஒண்டைபே சமாளிக்கேலாமல் நாக்குத் தொங்குது. இந்தச் சீத்துவத்தில மூண்டையும் வைச்சு நான் என்ன செய்ய?" எண்டு சொல்லிப் போட்டு ஹன்சிகாவோட ஓடியாய்ப் போனானாம்.

அவன் சூடுகண்ட பூனை அதால அடுப்பங்கரையை நாடமாட்டான். நாலைஞ்சு பேரோடை திரியிறவை இன்னும் முறையான சூடு காணேல்லைப் போல.

மு. சுகந்தன், துன்னாலை கிழக்கு.


**கே: பித்தரே! வாழ்க்கையில் காதல் தான் அடிவாசி என்பார்களே இதை நீர் ஏற்பீரா? காரணம் தாருங்கள்.**



ப: உண்மையைச் சொல்லப்போனால் காதல் தான் முழுவாழ் வாழ்க்கை. புருஷன் பெண்சாதி காதல் தான் பிள்ளைகள் பிறக்கக் காரணம். பிறகு தாய் பிள்ளை காதல். கல்வி மீது காதல். விளையாட்டு மீது காதல். பெண் மீது காதல் பொன் மீது காதல். இப்படி வாழ்க்கை முழுக்கக் காதல் தானே கடைசியில மண்ணின் மீது மண் காதல் கொள் வைக்கிறதால தான் வாழ்க்கையே முடியுது

---

## சொற்சிலம்பம் போட்டி இல: 569



அனுப்புபவர் பெயர் ........................................

விலாசம் ........................................

........................................

கையொப்பம் ........................................

### மேலிருந்து கீழ்

1. சாமியார்
2. ஆறு
3. பொறுப்பில் இரு
4. அச்சமடையச் செய்
5. பிழை
6. மலைத்தல்
8. இது வரவை விட மிகைத்திருக்கக் கூடாது
10. பதற்றப்படு
11. கீழ்நிலை
12. வருந்தித் தவி
13. வெம்மை
14. (முயன்று முடியாததை) நிறைவேற்றல்
15. திரும்பப் பெற்றுக்கொள்ளல்
17. சிறையில் இருப்பவன்
18. மேளம்

### இடமிருந்து வலம்

1. பிறருக்கு வெளிப்படுத்தப்படும் ஒருசெய்தி
4. பிரிவு
7. பணத்தை வைப்பிலிடும் இடம்
8. மனிதனால் உண்டாக்கப்படுவது
9. தலைமயிர்
10. வலிமையுற
11. அழிவுக்குள்ளாகும்
12. விருப்பு
14. அமைதியான இயல்புடைய
16. பெரியோருக்கான மரியாதைச் சொல்
18. கணவன்
19. உணவை மெல்ல உதவுவது
20. நெறிமுறை

## சொற்சிலம்பம் போட்டி இல. 569

சொற்சிலம்பம் 569 போட்டிக்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2013 ஆம் ஆண்டு மே 01 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் 2013 ஆம் ஆண்டு மே 08ஆம் திகதிய சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

முதலாவது பரிசாக ரூபா 250உம் இரண்டாவது பரிசாக ரூபா 150 உம் மூன்றாவது பரிசாக ரூபா 100உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்பவேண்டிய முகவரி:

சுடர் ஒளி யாழ்.அலுவலகம்,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## சொற்சிலம்பம் போட்டி இல: 567 க்கான விடைகள்

**மேலிருந்து கீழ்**

1. பிரகாசம், 2. வாசி, 3. தலைவி, 4. அகம், 5. வில், 6. பலதார மணம், 10. சாட்சி, 12. புத்தகம், 13. வடை, 19. குடி,

**இடமிருந்து வலம்**

1. பிடிவாதம், 4. அவி, 6. சிலை, 7. பகல், 8. காய், 9. விசாலம், 11. சப்பு, 14. சிரட்டை, 15. கதவு, 16. மடை, 17. தக்க, 18. பிணக்கு, 20. தம்படி,

## போட்டி இல. 566 இல் பரிசு பெற்றோர்

**1ஆம் பரிசு** சி. உதயகுமார், கைதடி மேற்கு, கைதடி.

**2ஆம் பரிசு** எஸ். ஜீவா, இல. 15/4, கல்லூரி ஒழுங்கை, திருகோணமலை.

**3ஆம் பரிசு** முகுந்தா ஜெயசோதி, இல. 93 2/5, பீட்டர்சன் வீதி, கொழும்பு-6.

## பாராட்டுப் பெறுவோர்

**(1) எம். எம். மலர்விழி ஜேசுதாசன்,**
இயேசு இல்லம்,
இல. 155/07, ஜெம்பட்டா வீதி,
கொழும்பு-13.

**(2) சு. புவனேஸ்வரி,**
இல. 34/1, முதலாவது சப்பல் லேன்,
கொழும்பு-06.

**(3) ஆர். மஞ்சுளா,**
பிரதேச வைத்தியசாலை,
வேரவில், பூநகரி.

**(4) எச். அனித்தா,**
இல. 15-4/5, பிரான்சஸ் வீதி,
வெள்ளவத்தை.

**(5) தவளாம்பிகை நாகேந்திரன்,**
இல. 11-3/1, நெல்சன் இடம்,
வெள்ளவத்தை, கொழும்பு-2.

**(6) செ. தர்மினி,**
துல்லை வீதி,
அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி.

**(7) சி. குகராஜா,**
இல. 33/35, கண்டி வீதி,
சுர்மதகம, திருகோணமலை.

**(8) லசந்த பிரியன்,**
இல. 64/22, கொட்டாஞ்சேனை வீதி,
கொழும்பு-13.

**(9) வே. கார்த்திகேசு,**
விபுலானந்தர் வீதி,
வாழைச்சேனை.

**(10) திருமதி வஸந்தா பாலேந்திர,**
இல. 21, நெல்சன் பிளேஸ்,
கொழும்பு-06.

## ஆசியப் போட்டிக்கு அனித்தா



தமக்குள் நிறையத் திறமைகள் இருந்தும் களம் கிடைக்காததால் இலைமறை காய்களாக இருப்போர் ஏராளம் பேர். இவர்களுக்கு வாய்ப்புக் கிடைத்துவிட்டால் பிளந்துகட்டி விடுவார்கள். யாழ்ப்பாணத்தில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி வீராங்கனை ஜெ. அனித்தாவும் அப்படிப்பட்டவர் தான். 17 வயதுப் பிரிவு பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் தேசியத்தில் முதலிடம் பிடித்துள்ளார். தொடர்ந்து வரும் போட்டிகளிலும் இதே திறமையை வெளிப்படுத்தினால் சீனாவில் நடைபெறவுள்ள ஆசிய இளைஞர்களுக்கான போட்டியில் அனித்தா கலந்துகொள்ள முடியும். அனித்தாவின் கனவு மெய்ப்படட்டும்.

## மீண்டும் உறுமல்



ரைகர் வூட்ஸ். கோல்ப் விளையாட்டில் இவரது பேரைக் கேட்டாலே சும்மா அதிரும். அந்த அளவிற்கு கோல்ப் விளையாட்டில் ரைகர் வூட்ஸ் ஒரு புலி. மிக நீண்ட காலம் தரவரிசையில் முதலிடத்தில் இருந்து சாதனை படைத்தவர். கூடவே உலகில் அதிகம் சம்பாதிக்கும் விளையாட்டு வீரர் என்ற பெருமையும் இவருக்கு உண்டு. தான் சென்ற எல்லாப் போட்டிகளிலும் வாகைசூடிய வூட்ஸ், வாழ்க்கையில் மட்டும் தவறி விட்டார். இந்தத் தவறு அவரது கவனத்தைப் பெண்கள் பக்கம் திருப்பியது. அடித்த பந்துகள் எல்லாம் இலக்கை எட்டாமல் வேறெங்கோ போக, கோல்ப் விளையாட்டின் மணிமுடி வூட்ஸின் தலையில் இருந்து இறங்கியது.

ஆனாலும் ஓய்ந்து விடவில்லை அவர். வாழ்க்கைப் புயலில் இருந்து மீண்ட வூட்ஸ் மீண்டும் கோல்ப் விளையாட வந்தார். எனினும், ஆரம்பப் போட்டிகள் அவருக்குச் சாதகமாக இருக்கவில்லை. ஆயினும், இப்போது மீண்டும் வெற்றிக் கனிகள் அவரது மடியில் விழத் தொடங்கியுள்ளன. கோல்ப் தரவரிசையில் முதலிடத்தைத் திரும்பவும் ரைகர் வூட்ஸ் பிடித்து விட்டார். புலியின் உறுமல் தொடரும்.



## சறுக்கல் ஷரபோவா

ரஷ்யாவின் ரென்னிஸ் புயல் மரியா ஷரபோவா அண்மைக் காலமாக சறுக்கி வருகிறார். உலகில் முதன் நிலை வீராங்கனையாக இருந்த ஷரபோவா இறுதிப் போட்டிகளுக்கு முன்னேறினாலும், கிண்ணத்தை வெல்ல தவறி விடுகிறார். அபாரமான விளையாட்டுத் திறமையால் மட்டுமல்லாமல் கவர்ச்சியாலும் ரசிகர்களைக் கிறங்கடித்த ஷரபோவா தரவரிசையில் பின்னடைவைச் சந்தித்துள்ளார். செரீனா, வீனஸ், லீ-நா, வோஸ்கியாக்கினி போன்றோரின் எழுச்சியான ஆட்டத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் அடிக்கடி காயங்களுக்கு உள்ளாவதாலே அவர் முன்னரைப் போன்று பிரகாசிக்கத் தவறுகிறார் என்று ஷரபோவாவின் பயிற்சியாளர் கூறுகிறார்.

## 16அடி பாயும் குட்டி



மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணியின் நம்பிக்கை நட்சத்திரம் ஷிவ்நரேன் சந்தர்போல். அணியை முன்வரிசைத் துடுப்பாட்ட வீரர்கள் கைவிட்டாலும் மிக நிதானமாக ஆடி எதிர்த் தரப்பை வெறுப்பேற்றி கடைசி வரை வெற்றிக்காகப் போராடும் வீரர். அமைதியானவர். கண்களின் கீழே விநோதமான ஸ்ரிக்கரை ஒட்டி பலரது கவனத்தை ஈர்த்தவர். இப்போது இவரது மகன் தஹிநரேன் சந்தர்போலும் கிரிக்கெட்டுக்குள் நுழைந்துவிட்டார். தந்தை எட்டடி பாய தனயன் பதினாறு அடி பாயத் தொடங்கிவிட்டார். உள்ளூர்ப் போட்டிகளில் அபாரமாக ஆடி வரும் தஹிநரேன் விரைவில் மேற்கிந்திய அணிக்குள் உள்வாங்கப்பட உள்ளார். இதனால் கிரிக்கெட் ரசிகர்கள் முதன் முறையாக தந்தையும், தனயனும் இணைந்து விளையாடுவதைக் காண முடியும்.

# நடிப்பின் ஆளுமை



● கைதடியூர், நி.ஹரன்

**தான் ஏற்கும் பாத்திரங்களுக்குரிய குணாம்சங்களை நடைமுறை வாழ்க்கையிலிருந்து கண்டுபிடித்து அதைத் திறம்படச் செய்யும் திறமை இவரிடம் இருக்கின்றது.**



## பிரான்சிஸ் ஜெனம் பற்றிய குறிப்புகள்

ஈழத்து அரங்க வரலாறு நீண்ட தொடர் அரங்கப் பாரம்பரியத்தைத் தன்னகத்தே கொண்டு காணப்படுகின்றது. கூத்துப் பாரம்பரியம், இசை நாடகப் பாரம்பரியம், நவீன நாடகப் பாரம்பரியம் என அரங்க வரலாறு வளர்ந்துகொண்டே இருக்கின்றது. இவ்வாறான எமது அரங்க பாரம்பரியத்தில் தடம் பதித்துக் கொண்டவர்களில் ஒருவராக பிரான்சிஸ் ஜெனம் விளங்குகின்றார். நடிப்பு, நெறியாள்கை, எழுத்துருவாக்கம், வேட உடை, ஒப்பனை, அரங்கப் பயிற்சிப் பட்டறை என்பவற்றில் திறமைமிக்கவராக செயற்பட்டாலும் இவற்றுள் நடிப்பே இவரை சிகரத்தைத் தொட வைத்தது.

நடிப்பு என்பது நடிகனின் கலை என்பர். நடிப்புத் துறையிலே ஒருவர் தன்னைத் திறம்பட வெளிக்காட்ட வேண்டுமானால் அவருக்கு உழைப்பு அவசியமானதாகும். குறிப்பாக தீவிர குரல் பயிற்சியும், உடற் பயிற்சியும், உளப் பயிற்சியும், இயல்பான தனித்திறமையும், சிறந்த கற்பனைத் திறனும், அர்ப்பணிப்பும் இன்றியமையாதவையாகும். இவ்வாறான விடயங்களைக் கருத்தில் எடுத்துக் கொண்டு நடிப்புத் துறையிலே தனது ஆளுமைகளை மிகச்சிறப்பாக வெளிப்படுத்திக் கொண்டவராக ஜெனம் விளங்குகின்றார். இவரது அரங்க ஆளுமைகளை அறிந்து கொண்ட இலங்கை அரசு 2010ஆம் ஆண்டில் கலாபூஷணம் எனும் உயர் விருது வழங்கி இவரைக் கௌரவித்தது.

யாழ்ப்பாணத்தில் சில்லாலை என்னும் கிராமத்தில் 1941ம் ஆண்டில் பிறந்த ஜெனம் சிறுவயது முதலே நாடகங்களில் ஈடுபாடு கொண்டவராகத் திகழ்ந்தார். சில்லாலை றோமன் கத்தோலிக்க ஆண்கள் பாடசாலையில் ஐந்தாம் வகுப்பில் கல்வி கற்ற காலத்தில் பூதத் எனும் பெண் பாத்திரம் ஏற்று நடித்து அனைவரது பாராட்டுக்களையும் பெற்றுக் கொண்டார். இதுவே இவரது அரங்க செயற்பாட்டின் முதல் கால்தடம் ஆகும். இதனைத் தொடர்ந்து பெண் பாத்திர நடிகராகத் தன்னை ஆரம்ப காலங்களில் இனங்காட்டிக் கொண்டார்.

யாழ்ப்பாணத்தில் இயங்கிக் கொண்டிருந்த பெரும்பாலான நாடகக் குழுக்களோடு இணைந்து நடித்த பெருமை ஜெனத்தையே சாரும். அந்தவகையில் கலையரசு சொர்ணலிங்கத்தின் 'ஹரியன்ற் ஸ்போட்ஸ் அன் டைன் ஆட்ஸ் சொசைட்டி' குழுவோடு இணைந்து வழி தெரிந்தது, தேரோட்டி மகன் போன்ற நாடகங்களிலும் பண்டிப்பற்று மலர்ச்சி மன்றத்துடனும் இணைந்து ஆழுது அசடா, மல்லியம் மங்களம் போன்ற நாடகங்களிலும் நடித்தார்.

மேலும், வண்ணைக் கலைவாணர் மன்றத்தினால் S.T. அரசின் நெறியாள்கையில் பிரமாண்டமாக தயாரிக்கப்பட்ட திப்பு சுல்தான் நாடகத்தில் பேகம் சாஹிபா எனும் பிரதான பெண் பாத்திரம் ஏற்று நடித்து அனைவரினதும் பாராட்டுக்களைப் பெற்றார். ஜெனம் நாடகங்களில் மட்டுமல்ல கூத்துக்களிலும் தன்னை சிறந்த ஒரு நடிகனாகக் காட்டிக் கொண்டார். அந்தவகையில் யாழ். நவரச நாட்டுக்கூத்துக் கலாமன்றத்தில் இணைந்து பூந்தான் ஜோசேப்பின் அண்ணாவியத்தில் கருங்குயில் குன்றத்துக்கொலை, எஸ்தாக்கியார், புரட்சித்துறவி, சங்கிலியன் போன்ற நாட்டுக்கூத்துக்களில் நடித்தார்.

கொழும்பில் நிர்வகிக்கப்பட்டு வந்த நிழல் நாடக மன்றத்தில் சேர்ந்து சுஹைர் ஹமீட்டின் நெறியாள்கையில் வேதாளம் சொன்ன கதை, பச்சைக் கிளியே பழம் கொண்டு வா, வாடகைக்கு அறை, கொலைகாரன் போன்ற பல நாடகங்களில் நடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும், திருமறைக் கலாமன்றத்தில் கலாநிதி மரியசேவியர் அடிகளாரின் நெறியாள்கையில் காட்டிக் கொடுத்தவன், சாவைவென்ற சத்தியவன், களங்கம் என பல நாடகங்களில் நடித்துத் திருமறைக் கலாமன்றத்திற்குப் பெருமை தேடிக் கொடுத்தார்.

நாடக அரங்கக் கல்லூரியின் ஸ்தாபகர்களில் ஒருவராக இருந்து அக்கல்லூரியினால் தயாரிக்கப்பட்ட பல நாடகங்களில் சிறப்பாக நடித்துப் புகழ் பெற்றார். குறிப்பாக தார்சீசியஸின் நெறியாள்கையில் பொறுத்தது போதும் நாடகத்தில் சம்மாட்டியார் என்னும் பிரதான பாத்திரத்தில் நடித்து சிறந்த நடிகருக்கான ஜனாதிபதி விருதினைப் பெற்றுக்கொண்டார். இதனைவிட நாடக அரங்கக் கல்லூரியினால் தயாரிக்கப்பட்ட உயிர்த்த மனிதர் கூத்து, அபகரம், சங்காரம், எந்தையும் தாயும், கூடி விளையாடு பாப்பா போன்ற பல நாடகங்களில் தனது நடிப்புத் திறமையை வெளிப்படுத்திப் பாராட்டுக்களைப் பெற்றார். ஜெனம் இதுவரையில் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட நாடகங்களில் நடித்துள்ளார்.

ஜெனம் நடிப்புத்துறையிலே தன்னை சிறப்பாக வெளிப்படுத்துவதற்கு பல்வேறு திறன் முயற்சிகளை மேற்கொண்டிருந்தார். அந்த வகையில் நாடக எழுத்துருவைப் பல தடவைகள் வாசித்துத் தான் ஏற்கும் பாத்திரத்தில் மிகவும் கருத்தூன்றி நின்று அப்பாத்திரத்தை மிகவும் சிறப்பாக வெளிப்படுத்துவார். எழுத்துருவை வாசிக்கின்றபோதே தான் ஏற்கும் பாத்திரத்தின் குரல்கள் தனக்குள் ஒலிக்கும் என்று இவர் கூறுவார்.

தான் ஏற்கும் பாத்திரங்களுக்குரிய குணாம்சங்களை நடைமுறை வாழ்க்கையிலிருந்து கண்டுபிடித்து அதைத் திறம்படச் செய்யும் திறமை இவரிடம் இருக்கின்றது. எடுத்துக்காட்டாக எந்தையும் தாயும் நாடகத்தில் சங்கரப்பிள்ளை என்ற பாத்திரத்தில் நடித்த போது தனது வீட்டிற்குப் பக்கத்தில் வாழ்ந்த ஒரு பரியாரியாரை அவதானித்து அவரின் சில விசேட பண்புகளை உள்வாங்கி குறிப்பாக அவர் பிரச்சினைகள், கஷ்டங்கள் வரும்போது உச்சந்தலையைச் சொறிவார். வேறு பாத்திரங்களில் தான் நடித்திருந்தாலும் சங்கரப்பிள்ளையாக நடித்ததே தனது மனதிற்கு நன்கு திருப்தி அளித்ததாக இவர் கூறுகின்றார்.

ஜெனம் நாடகங்களில் நடிக்கும் பொழுது குறிப்பிட்ட பாத்திரமாக வாழ்கின்றோம் என்ற நிலையை விடுத்து குறிப்பிட்ட பாத்திரமாக நடிக்கிறோம் என்ற உணர்வினைத் தனது நடிப்பு நுட்பமாக வைத்திருப்பார்.

உணர்ச்சிவசப்பட்டு நடித்தல் என்ற தன்மையையும் இவர் விரும்புவதில்லை. நல்ல நடிப்பு என்பது விளையாட்டு மைதானத்திற்குள் நின்று விளையாடுவது போல இருக்க வேண்டும் என்பது அவரது நிலைப்பாடு. எந்த உணர்ச்சியையும் அரங்கில் காட்டலாம். ஆனால், அதேவேளை நடிகர்கள் தங்களுக்குள் நெகிழ்வான போக்குடையவர்களாகவும் நிற்கவேண்டும் என்பார்.

தினகரன் தமிழ் நாடக விழாவில் சிறந்த துணை நடிகருக்கான விருது (1969), யாழ். மாவட்ட செயலகம் நடாத்திய நாட்டுக்கூத்துப் போட்டியில் சிறந்த நடிகருக்கான விருது (1972), கலாசார அமைச்சின் தேசிய நாடக விழாவில் சிறந்த நடிகருக்கான விருது (1975,1980), சிறந்த நாட்டுக்கூத்து கலைஞருக்கான வடமாகாண பிரதேச செயலகத்தின் விருது (1985), திருமறைக்கலாமன்றத்தின் சிறந்த நடிகருக்கான விருது (1990), கிழக்கு பல்கலைக்கழகத்தின் தலைக்கோல் விருது (1995), பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சிறந்த கலைஞருக்கான விருது (2009), தேசிய நாடக விழாவில் கலாபூஷண விருது (2010), கலாசார அமைச்சினால் நாடகக் கீர்த்தி விருது (2010), மற்றும் வாழ்நாள் சாதனையாளருக்கான முதுகலைஞர் விருது (2010) போன்ற பல விருதுகள் இவருக்கு வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறாக தனது அரங்க ஆளுமையால் பல விருதுகளைப் பெற்றுக்கொண்டு ஈழத்திற்கு பெருமை தேடித்தந்து தன்னகத்தே நீண்ட தொடர் அரங்க பாரம்பரியத்தை வைத்திருக்கும் சிறந்த ஒழுக்கப் பண்புள்ள கலைஞரான ஜெனம் தற்சமயம் (2012) இரு கண்களும் பார்வை இழந்த நிலையில் தனது மனைவி பேரப்பிள்ளைகளுடன் வாழ்ந்து வருவது எமது நாடக உலகுக்கு கவலை தருகின்ற விடயமாகும். எனினும் இவ்வாறான நோய்வாய்ப்பட்ட நிலையிலும் பல்வேறு நாடகம் சார் ஆலோசனைகளைப் பலருக்கும் வழங்கி வருகின்றார் என்பதைக் கேள்வியுறும் பொழுது எம்மை ஆனந்தம் கொள்கின்றது.

*** *** ***







இப்பத்திரிகை கொழும்பு - 17, வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிரைஸ் ஸ்தாபனத்தினால், 2013 மே 01 ஆம் திகதி வெளியிடப்பட்டது.